INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES

ROSA
LUXEMBURG
STIFTUNG
SOUTH ASIA

# இலங்கையில் பாரிய மனிதப் புதைகுழிகள்: வரலாறு மற்றும் சட்டக் கட்டமைப்பு

சோபீ பிஸ்பிங்



# இலங்கையில் பாரிய மனிதப் புதைகுழிகள்:
# வரலாறு மற்றும் சட்டக் கட்டமைப்பு

சோபீ பிஸ்பிங்

இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்
2023

இலங்கையில் பாரிய மனிதப் புதைகுழிகள்: வரலாறு மற்றும் சட்டக் கட்டமைப்பு

2023 இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்
2, கின்ஸி டெரஸ், கொழும்பு 8
இலங்கை
மின்னஞ்சல் : admin@ices.lk
இணையத்தளம் : www.ices.lk

ISBN 978-624-5502-20-2

இந்த வெளியீடு ஜேர்மன் சம்'டி குடியரசின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைச்சின் நிதியுதவியுடன் Rosa Luxemburg Stiftung (RLS) ஆல் ஆதரிக்கப்படும் ஆய்வை அடிப்படையாகக் கொண்டது. இந்த வெளியீட்டின் காப்புரிமை இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கு (ICES) உரித்துடையது. இந்த வெளியீடு அல்லது அதன் பகுதிகள் மூலாதாரம் பெயரிடப்பட்டு, பிறரால் இலவசமாகப் பயன்படுத்தப்படலாம். ஆய்வில் வெளிப்படுத்தப்பட்ட விளக்கங்கள் மற்றும் முடிவுகள் ஆசிரியரின் கருத்துக்களாகும். அவை ICES அல்லது RLS இன் கருத்துக்கள் மற்றும் கொள்கைகளை பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.

INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES

ROSA
LUXEMBURG
STIFTUNG
SOUTH ASIA

அட்டைப்படம் : ருவின் டி சில்வா
தமிழ் மொழிபெயர்ப்பு : மோசஸ் அனுஜா

Printed by:
Horizon Printing (Pvt) Ltd.
1616/6, Hatharaman Handiya,
Malabe Road, Kottawa,
Pannipitiya.

# இலங்கையில் பாரிய மனிதப் புதைகுழிகள்: வரலாறு மற்றும் சட்டக் கட்டமைப்பு

**சோபீ பிஸ்பிங்**

* **சோபீ பிஸ்பிங்** தற்போது கனடா மொன்ட்ரியலில் உள்ள மெக்கில் பல்கலைக்கழகத்தில் தனது சட்டப் பட்டப்படிப்பை பூரணப்படுத்தியுள்ளதுடன், முன்னர் பொதுக் கொள்கை துறையில் பணியாற்றியுள்ளார். அவரது பிரதான ஆய்வு ஆர்வங்களில் நிலைமாறுகால நீதிப் பிரச்சினைகள், சர்வதேச மனித உரிமைகள் சட்டம், அரசியலமைப்புச் சட்டம் மற்றும் உள்நாட்டு சட்ட மரபுகள் ஆகியவை அடங்கும்.

## *அங்கீகாரங்கள்*

இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தில் உள்ள அனைவரதும் உதவி இல்லையென்றால், இந்த அறிக்கை சாத்தியமில்லை என்றே கூற வேண்டும். இலங்கையில் பாரிய மனிதப் புதைகுழிகள் என்ற முக்கியமான தலைப்பில் பணியாற்றுவதற்கான வாய்ப்பை எனக்கு வழங்கியதற்காக, அதன் பணிப்பாளர் மரியோ கோமஸுக்கு நான் நன்றி கூறுகிறேன். நடின் வன்னியசிங்கம் உடனான உரையாடல்கள் இலங்கை சமூகத்தின் பரந்த சூழலில் இந்த ஆய்வை நிலைநிறுத்த எனக்கு உதவியது, மொஹமட் மௌசிலின் ஆதரவு இல்லாமல் என்னால் நேர்காணல்களை ஒழுங்கமைத்து நடத்தியிருக்க முடியாது. இந்த அறிக்கையின் மையத்தில் உள்ள வரலாற்று மற்றும் சட்ட ஆய்விற்கப்பால், நான் நேர்காணல் செய்த அறிஞர்கள், ஆர்வலர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். தமது நேரம், நிபுணத்துவத்துடன் இத்திட்டத்திற்கு உதவ விருப்பம் தெரிவித்த பிரிட்டோ பெர்னாண்டோ, சூலனி கொடிகார, சாரா கபீர் மற்றும் ருக்கி பெர்னாண்டோ ஆகியோருக்கு நன்றிகள். எங்கள் உரையாடல்கள் இந்தப் பணியின் திசையைக் காண்பித்ததோடு, பல்வேறு கண்ணோட்டங்களை ஒருங்கிணைக்க எனக்கு உதவியது.

மெக்கில் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் மற்றும் சட்டப் பன்மைத்துவ மையத்திற்கு, குறிப்பாக அதன் இணை பணிப்பாளர் நந்தினி இராமானுஜம் அவர்களின் ஆதரவிற்காகவும், ICES உடன் பணிபுரிய என்னை அனுமதிக்கும் நிறுவன கட்டமைப்பை உருவாக்கியதற்காகவும் நான் நன்றி கூறுகிறேன். இந்த படைப்பின் ஆரம்ப வரைவு பற்றிய பயனுள்ள மற்றும் நுண்ணறிவுள்ள கருத்துக்களுக்காக, Béatrice Godard, Nikolaus Heveker, Albert Degaspé மற்றும் லாரா விஜேசூரிய ஆகியோருக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

இந்த அறிக்கை ருக்கி பெர்னாண்டோ மற்றும் லியா கென்ட் ஆகியோரின் மதிப்புரைகளிலிருந்தும் பெரிதும் பயனடைந்தது, அவர்களின் கருத்துக்கள் இந்தப் பணியை மிகவும் துல்லியமாகவும், வாசிக்கக் கூடியதாகவும், பொருத்தமானதாகவும் ஆக்கியது. பிரதியை சரிபார்த்தமை மற்றும் பக்க வடிவமைப்புக்காக தினூ வல்பொல மற்றும் மரிஸ்ஸ ா ஜான்ஸ் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். இலங்கையில் உள்ள பாரிய மனிதப் புதைகுழிகளுடன் தொடர்புடைய வரலாற்றுச் சூழல் மற்றும் சட்டப் பிரச்சினை பற்றிய கண்ணோட்டத்தை வாசகர்கள் பெற இந்தப் படைப்பு உதவும் என்று நம்புகிறேன்.

# பொருளடக்கம்


1. அறிமுகம் 1

2. பிரதான விசாரணைகளின் வரலாறு 7

    சூரியகந்த (1994) 10

    செம்மணி (1998) 12

    யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கம் (1999) 13

    மாத்தளை (2012) 14

    களுவாஞ்சிக்குடி (2014) 15

    மன்னார் (2013) 16

    மன்னார் (2018) 17

3. சட்ட கட்டமைப்பு 19

    A. கண்டுபிடிப்பு 21

    B. விசாரணை 25

    C. வழக்கு விசாரணை 28

    D. குடும்பங்களின் உரிமைகள் 30

    E. நினைவேந்தல் 32

4. கலந்துரையாடல் மற்றும் சிறந்த நடைமுறைகள் 35

5. முடிவுரை 39

1. இணைப்பு 1: அறியப்பட்ட மனித புதைகுழி தளங்களின் அகரவரிசை அட்டவணை 42

2. இணைப்பு 2 சர்வதேச மற்றும் வெளிநாட்டு நீதித்துறை 46

3. இணைப்பு 3: மேற்கோள் காட்டப்பட்ட சட்டங்கள் 50

உள்நாட்டு சட்டம் 50

சர்வதேச சட்டம் 50

4. இணைப்பு 4: மேலும் தொடர்புடைய வழிகாட்டுதல்கள் 51

உசாத்துணை 52

## 1. அறிமுகம்

இலங்கை உள்நாட்டுப் போர் அதிகாரப்பூர்வமாக 1983 இல் தொடங்கி 2009 வரை மூன்று தசாப்தங்களாக நீடித்தது. இந்த யுத்தமானது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் சிறுபான்மையினருக்கான ஒரு சுயாதீன அரசை (தமிழீழத்தை) இஸ்தாபிப்பதற்காக பிரச்சாரம் செய்த தமிழீழ விடுதலைப் புலிகளால் (LTTE) சிங்கள மேலாதிக்க இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து இடம்பெற்றது. இந்த மோதல் உத்தியோகபூர்வமாக ஜுலை 1983 இல் கொழும்பில் தமிழர்களை குறிவைத்து தொடங்கி வன்முறை கலவரங்களாக வெடித்தது, இதுவே பின்னர் "கறுப்பு ஜுலை" என்று அழைக்கப்படுகின்றது. மூன்று தசாப்தங்களாக நீடித்த இந்த யுத்தம் 2009 மே மாதம் விடுதலைப் புலிகளின் தலைவரைக் கொன்றதாக அரசாங்க பாதுகாப்புப் படைகள் அறிவித்ததைத் தொடர்ந்து முடிவுக்கு வந்தது. யுத்தம் முடிவடைந்து 10 வருடங்களுக்கு மேலாகியுள்ள போதிலும், பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான மனிதப் புதைகுழிகள் அவற்றில் ஒன்றாகும். 2014 ஆம் ஆண்டில், ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை, 28 மனித புதைகுழிகள் இருப்பதை பட்டியலிட்டது (Ilangamuwa 2014), அதன் பின்னர் மேலும் நான்கு புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பத்திரிகைக் கட்டுரைகள், அரசாங்கப் பத்திரிகைச் செய்திகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் ஆதாரங்களைத் தொகுத்து, மொத்தம் 32 மனிதப் புதைகுழிகள் இருப்பதாக இந்த அறிக்கை கண்டறிந்தது.[1] இவற்றில் ஆறு இடங்கள் 2004 ஆம் ஆண்டில் சுனாமி பேரழிவைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட அறியப்பட்ட கல்லறைகள், எனவே, இந்த அறிக்கையில் அவை மைய ஆதாரமாக இல்லை மற்ற தளங்களைப் பொறுத்தவரை, சில அதிகாரப்பூர்வ விசாரணைகள் மட்டுமே நடந்துள்ளன. இருப்பினும், உள்நாட்டு மற்றும் சர்வதேச கட்டமைப்பில் அவ்வாறு விசாரணைகள் செய்ய அரசாங்கத்தின் சட்டப்பூர்வ கடமை இருந்தபோதிலும், உள்ளூர் சமூகங்களின் தோண்டியெடுப்பதற்கான அழைப்புகள் இருந்தபோதிலும், வழக்கு விசாரணைக்கோ அல்லது பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கோ அவை வழிவகுக்கவில்லை.[2] மனித புதைகுழிகளை தோண்டியெடுப்பதற்காக பிரச்சாரம் செய்யும் குடிமக்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் மற்றும் அரசாங்க அதிகாரிகளால் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என சில சமயங்களில் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பாரிய புதைகுழிகளில் பலியானவர்களில் சிலர் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று அடிக்கடி

---

[1] ஒவ்வொரு தளம் மற்றும் அதன் கண்டுபிடிப்பு பற்றிய குறிப்பிட்ட தகவல்களுக்கு இணைப்பு 1 இல் உள்ள அட்டவணையைப் பார்க்கவும்.

[2] எடுத்துக்காட்டாக, களுவாஞ்சிகுடியில் நடந்த பாரிய புதைகுழியின் வழக்கைப் பார்க்கும் அங்கு 66 கிராமவாசிகள் மற்றும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் உறவினர்கள், சரியான முறையில் அடக்க ஏற்பாடுகளை செய்வதற்காக புதைகுழியை தோண்டி எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர் (Wijedasa 2014). சூரியகந்த புதைகுழி விடயத்தில் கிராம மக்களும் புதைகுழியை தோண்டி எடுப்பதற்காக அழைப்பு விடுத்தனர் (Borham and Arachchi 2018).

சந்தேகிக்கப்படுகிறது.[3] வலிந்து காணாமலாக்கப்பட்டோர் அல்லது தன்னிச்சையாக காணாமலாக்கப்பட்டமை தொடர்பான ஐக்கிய நாடுகள் செயற்குழுவில் பதிவு செய்யப்பட்ட உலகின் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான வழக்குகளை இலங்கை கொண்டுள்ளது. 1983 ஆம் ஆண்டில் யுத்தம் தொடங்கியதில் இருந்து 60,000 முதல் 100,000 பேர் வரை பலவந்தமாக காணாமலாக்கப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது (Ganguly 2021). பாரிய புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கான மிகவும் அவசியமான பதில்களை வழங்குவதோடு போரின் போது இடம்பெற்ற பாரிய வன்முறைச் சம்பவங்களில் அரசாங்கத்தின் சாத்தியமான பொறுப்பையும் வெளிச்சம் போட்டுக் காட்டக் கூடும். எவ்வாறெனினும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைக்கான பிரச்சாரம் எப்போதுமே பாரிய புதைகுழிகளை தோண்டி எடுப்பதற்கான விருப்பத்துடன் ஒத்துப்போவதில்லை.

ஏனெனில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் போன்ற குழுக்களுக்கான சில செயற்பாட்டாளர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களின் மரணத்தை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. மேலும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனைய குற்றங்களின் விளைவாகவும் பாரிய புதைகுழிகள் இருக்கக் கூடும். இருந்தபோதிலும், வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் சிவில் சமூகக் குழுவின் தலைவர், பிரிட்டோ பெர்னாண்டோவிடம் இந்த குழுக்களின் அரசியல் போராட்டத்திற்கு, புதைகுழிகளைத் தோண்டியெடுப்பதன் தாக்கங்கள் குறித்து கேட்டபோது, கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து பாரிய புதைகுழிகளையும் தோண்டி, பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களின் எச்சங்கள் மீட்கப்பட வேண்டும் என்றும் அது குடும்பங்கள் தங்களின் அன்புக்குரியவர்களை சரியான முறையில் துக்கம் அனுசரிக்க அனுமதிக்கும் எனவும் வலியுறுத்தினார் (Fernando B 2022).

இந்த தளங்கள் மற்றும் அவற்றின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் நினைவேந்தல் தொடர்பான சட்டங்கள் பற்றிய அறிவு குறைவாகக் காணப்படுவதோடு அவை பல்வேறு ஆதாரங்களில் சிதறிக்கிடக்கிறன. அரசாங்க ஆவணங்கள், ஊடக ஆதாரங்கள், மனித உரிமை அமைப்புகளின் இலக்கியங்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் செயலில் உள்ள இலங்கை செயற்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளுடனான நேர்காணல்கள் ஆகியவற்றின் மீளாய்வின் அடிப்படையில் தற்போதைய அறிக்கை இந்த நிலைமையை சரிசெய்வதை

[3] அனைத்து நபர்களையும் வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டின் முன்னுரை மற்றும் உறுப்புரை 2, அரசின் முகவர்கள் அல்லது அரசின் அங்கீகாரம், ஆதரவு அல்லது ஒப்புதலுடன் செயல்படும் நபர்கள் அல்லது குழுக்களால் கைது செய்யப்படல், காவலில் வைத்தல், கடத்தல் அல்லது வேறு எந்த வகையிலான சுதந்திரம் பறிக்கப்படுவதையும், அதைத் தொடர்ந்து ஒப்புக்கொள்ள மறுப்பதும் வலிந்து காணாமல் போதல் என வரையறுக்கிறது. சுதந்திரம் பறிக்கப்படுதல் அல்லது காணாமல் போன நபரின் தலைவிதி அல்லது இருப்பிடத்தை மறைத்தல் போன்றவை அத்தகைய நபரை சட்டத்தின் பாதுகாப்பிற்குப் புறம்பாகத் தள்ளுகிறது.

நோக்கமாகக் கொண்டுள்ளது.[4] இந்த ஆய்வு, முதலில் இந்தத் தளங்களைப் பற்றி அறியப்பட்ட தகவல்களைச் சேகரித்து, அது பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது. அதன் பின்னர், புதைகுழிகளை விசாரணை செய்வதற்கும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்குமான சட்ட ரீதியான கட்டமைப்பை நிறுவுகிறது.

இந்த தகவல் இலங்கையில் உள்ள மனித உரிமைகள் சட்டத்தரணிகளுக்கு மட்டுமல்ல, இந்த விவகாரம் குறித்து நன்கு அறிந்துகொள்ள விரும்பும் எந்தவொரு நபருக்கும் பயனுள்ளதாக இருக்கும். இந்த அறிக்கையின் முதன்மையான நோக்கம், யுத்தத்திற்குப் பிந்தைய சமூகத்தில், பாரிய புதைகுழிகளை நிர்வகிப்பதற்கான ஒவ்வொரு படிநிலையையும் நிர்வகிக்கும் சட்டங்களையும், அவற்றின் கண்டுபிடிப்பு முதல் அவற்றை நினைவுகூருவது வரை மேலும் அணுகக்கூடியதாக மாற்றுவதாகும். அதே சமயத்தில், இந்த அறிக்கை உலகெங்கிலும் உள்ள முந்தைய பாரிய புதைகுழி விசாரணைகளிலிருந்து பெறப்பட்ட சில படிப்பினைகளை வழங்குவதோடு இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்கள் தொடர்பில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களிடையே எதிர்கால கலந்துரையாடல்கள் இடம் பெறவும் வழிவகுக்கும்.

இந்த ஆய்வின் நோக்கம் பாரிய புதைகுழிகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, இது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடையாளம் காணப்படாத பாதிக்கப்பட்டவர்களின் எச்சங்களைக் கொண்ட ஒரு புதைகுழியாக வரையறுக்கப்படுகிறது, அங்கு "இறப்பைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் மற்றும் அல்லது உடலை அகற்றும் முறை பற்றிய சட்டப்பூர்வத்தன்மை குறித்து ஒரு விசாரணைக்கு உத்தரவாதம் அளிக்கின்றன" (Klinkner 2020, 4). எவ்வாறிருப்பினும், பாரிய புதைகுழி தொடர்பான வரையறையில் சர்வதேச சட்ட ரீதியான ஒருமித்த கருத்து இல்லை (Callamard, 2020). சிலர் இதை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உடல்கள் ஒன்றாக புதைக்கப்பட்டதாக வரையறுக்கின்றனர் (Minnesota Protocol 2017, 110), வேறு சிலர் இது ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களாக இருக்க வேண்டும் என வரையறுக்கின்றனர் (Haglund, Connor, and Scott 2001).

தடயவியல் வல்லுனர்கள் பாரிய புதைகுழிகளை "அகழிகள், குழிகள், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அல்லது பிரிக்கப்பட்ட மற்றும் மாறுபட்ட அடர்த்தியான உடல் வடிவங்களை கொண்ட, (Fernández-Álvareza et al 2016, 10) பல நபர்களின் எச்சங்களை உள்ளடக்கிய புதைகுழி" (Pass and Embar-Seddon 2015) என விவரிக்கின்றனர்".

[4] இந்த அறிக்கையின் நோக்கத்திற்காக நேர்காணல் செய்யப்பட்டவர்களில், பிரிட்டோ பெர்னாண்டோ - வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் தலைவர், எழுத்தாளர் சாரா கபீர், ஆய்வாளர் சூலனி கொடிகார மற்றும் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ ஆகியோர் அடங்குவர்.

நீதிக்கு புறம்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர், இந்த தளம் “பாரிய மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்டிருப்பதோடு விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற முன்நிபந்தனையையும் சேர்க்கிறது” (Callarmard 2020, 4) என குறிப்பிடுகிறார். இதனால் பல்வேறு மனித உரிமை மீறல்களுக்கான ஆதாரங்களை வழங்கும் ஆற்றலையும் மனித புதைகுழிகள் கொண்டுள்ளன. இந்த அறிக்கையில் பயன்படுத்தப்பட்ட கலைச்சொற்கள் தடயவியல் அறிவியல் இலக்கியங்களிலிருந்து பெறப்பட்டவை. “அகழ்வாராய்ச்சி“ என்ற சொல் புதைக்கப்பட்ட எச்சங்கள் மற்றும் பிற வகையான ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதற்காக மண்ணை அகற்றுவதைக் குறிக்கப் பயன்படுகிறது. இது பொதுவாக மனிதரல்லாத புதைக்கப்பட்ட ஆதாரங்களை அகற்றுவதைக் குறிக்கிறது. “பிணத்தைத் தோண்டி எடுத்தல்” என்பது கண்டுபிடிக்கப்பட்ட உடல்களின் குறிப்பிட்ட செயல்பாட்டைக் குறிக்கிறது. இரண்டு கலைச்சொற்களும் ஒருபாரிய புதைகுழி பற்றிய விசாரணையில் பயன்படுத்தப்படுகின்றன.

உலகெங்கிலும், பாரிய புதைகுழிகள் பற்றிய கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்த பல அடுக்குகளைக் கொண்டுள்ளதோடு (சமூக, அரசியல், மதம் மற்றும் பல) இதனுடன் தொடர்புடைய இலக்கியங்கள் பல்துறை வழிகளில் உருவாகியுள்ளன. வரலாற்றாசிரியர்கள் பாரிய புதைகுழிகளின் உருவாக்கத்திற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் மற்றும் நிகழ்வுகளை வெளிச்சம் போட்டுக் காட்ட முயற்சிக்கும் அதே வேளையில், அரசியல் விஞ்ஞானிகள் மற்றும் தத்துவவாதிகள் பாரிய வன்முறைகளின் தோற்றம் மற்றும் பாரிய கல்லறைகளை உருவாக்க அனுமதிக்கும் அரசியல் சூழ்நிலைகள் போன்ற கோட்பாடுகளை ஆராய்வதற்கு பங்களித்துள்ளனர்.[5] சட்ட அறிஞர்கள் பாரிய குற்றங்களை முறையாக பகுப்பாய்வு செய்ய முயற்சித்துள்ளனர் (Anstett and Dreyfus 2016, 4) மற்றும் அவற்றைத் விசாரிக்க ஒரு சட்ட கட்டமைப்பை உருவாக்கி, பாரிய புதைகுழிகளை குற்றவியல் ஆதாரமாக மதிப்பிடுகின்றனர்.

தடயவியல் மானுடவியலாளர்கள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தையும் இறந்த நேரத்தையும் தீர்மானிக்க விஞ்ஞான ரீதியான நடைமுறைகளை உருவாக்கியுள்ளனர். சமீப ஆண்டுகளில், தடயவியல் அறிவியல்கள் மனிதாபிமான நடவடிக்கையை ஆதரிப்பது, இறந்தவர்களின் சரியான மற்றும் ஒழுங்கான நிர்வாகத்திற்கு உதவுவது மற்றும் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவது போன்ற விடயங்களுக்கு ஆதரவளிப்பதனால் இது மனிதாபிமான தடயவியல் துறையின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது (Cordner and Tidball-Binz 2017). இந்த அறிக்கை இவ்வாறான கல்வி உரையாடல்கள் மற்றும் கடந்த தசாப்தத்தில் தயாரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ இலக்கிய வெளியீடுகள் மூலம் ஆராயப்பட்டுள்ளது.

---

5 எடுத்துக்காட்டாக, பாரிய வன்முறையின் தோற்றம் பற்றிய தத்துவக் கோட்பாடுகளுக்கு Hannah Arendt இன் படைப்புகளைப் பார்க்கவும். சமீபத்திய தசாப்தங்களில், பாரிய வன்முறை குறித்த ஆய்வுகளின் அதிகரிப்பானது, இனப்படுகொலை ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளான பாரிய வன்முறை ஆராய்ச்சி இதழ், இனப்படுகொலை ஆராய்ச்சி மற்றும் தடுப்பு போன்ற துறைகளின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

பாரிய புதைகுழிகளை விசாரணை செய்வதற்கான சிக்கலான செயல்முறை தொடர்பாக எடுத்துக்காட்டாக, பாரிய வன்முறையின் தோற்றம் பற்றிய தத்துவக் கோட்பாடுகளுக்கு ர்யயொ யுசநனெவ இன் படைப்புகளைப் பார்க்கவும். சமீபத்திய தசாப்தங்களில், பாரிய வன்முறை குறித்த ஆய்வுகளின் அதிகரிப்பானது, இனப்படுகொலை ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளான பாரிய வன்முறை ஆராய்ச்சி இதழ், இனப்படுகொலை ஆராய்ச்சி மற்றும் தடுப்பு போன்ற துறைகளின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்ற வழிகாட்டுதல்கள், உடன்படிக்கைகள் மற்றும் சிறந்த நடைமுறை ஆவணங்கள் அதிகரித்து வருகின்றன. இதில் பாரிய கல்லறை பாதுகாப்பு மற்றும் விசாரணை மீதான 2020 டீழரசநெஅழரவா உடன்படிக்கை குறிப்பாக செல்வாக்கு செலுத்தியது. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான இந்த உடன்படிக்கை Bournemouth பல்கலைக்கழக அறிஞர்களால் சர்வதேச ஆணையத்துடன் (ICMP) இணைந்து எழுதப்பட்டது.

பாரிய கல்லறைகளின் கண்டுபிடிப்பு முதல் அதன் நினைவேந்தல் வரை, அதில் ஈடுபட்டுள்ள பல்வேறு செயற்பாட்டாளர்ளுக்கு ஆதரவளிக்கும் வகையிலும், சட்ட விதிகள் மற்றும் தகவலறிந்த நடைமுறையை ஒன்றிணைப்பதன் மூலமும் பாரிய புதைகுழிகளை ஆய்வு செய்வதற்கு மற்றும் பாதுகாப்பதற்கு இது வழிகாட்டுதலை வழங்குகிறது. சர்வதேச சட்டக் கட்டமைப்புகளில் பாரிய புதைகுழிகளின் இடத்தைப் பிரதிபலிக்க இந்த அறிக்கை இந்த உடன்படிக்கையை அணுகுகிறது.

இருப்பினும், Bournemouth உடன்படிக்கை ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டிய மாதிரியை வழங்கும் ஒரு பதிப்பாகவே உள்ளது. சிறந்த நடைமுறைகளுக்கான முயற்சியில், உடன்படிக்கையின் பரிந்துரைகள், சில சமயங்களில் தோண்டியெடுத்தல், விசாரணை செய்தல், உடல்களை அடையாளம் காணுதல் மற்றும் ஒரு பாரிய மனித புதைகுழிகளை நினைவுகூருதல் ஆகியவற்றிற்கு கிடைக்கக்கூடிய உள்ளூர் வளங்களிலிருந்து வேறுபட்டதாகத் தோன்றலாம். ஒரு வெற்றிகரமான தடயவியல் விசாரணைக்கு, சுற்றியுள்ள சமூகங்களில் இருந்து DNA தரவு மாதிரிகளை ஒரு DNA தரவுத்தளத்தில் சேகரிக்க வேண்டும், மேலும் ஒவ்வொரு நபரையும் அடையாளம் காண ஆய்வக நடைமுறைகள் அவசியம், இது தரவு சேகரிப்பின் நீண்ட மற்றும் தீவிரமான ஒரு செயல்முறையாகும்.

உலகளாவிய சமத்துவமின்மையால் பாரிய மனித புதைகுழி தொடர்பான விசாரணைகள் எவ்வாறு குறிக்கப்படுகின்றன என்பதை ஆசிரியர் Adam Rosenblatt விவரித்துள்ளார், உலகளாவிய வடக்கில் உள்ள வளங்களுக்கும் உலகளாவிய தெற்கில் (Rosenblatt, 2020) உள்ள வளங்களுக்கும் இடையே பெரும் வேறுபாடு உள்ளதால் இந்த தளங்களை விசாரிக்கும் நாடுகளுக்கான சர்வதேச அமைப்புகளின் கோரிக்கைகள் சில சமயங்களில் கண்மூடித்தனமான வேறுபாட்டிற்கு இட்டுச் செல்லும்.

இந்த வளங்களை வழங்குவதற்கு சாதகமான அரசியல் சூழல் இல்லாதது ஒன்றோடொன்று இணைந்து காணப்படும் பிரச்சினையாகும். பாரிய வன்முறை நிகழ்வுகளை அனுபவித்த பல சமூகங்கள் “அவை ஆவணப்படுத்தப்படுவதற்கு முன்பு, காப்பகங்களுக்கான இலவச அணுகலுடன், ஒரு சாதகமான அரசியல் சூழல் உருவாகும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது” (Anstett and Dreyfus 2016, Methodological Approaches, 2). சாதகமற்ற அரசியல் சூழல்களில் அகழ்வாராய்ச்சி செய்யும்போது, பிளவுகளை மேலும் அதிகரிக்கும் சமூக அபாயங்களைக் கருத்தில் கொள்வது அவசியமாகும். அறிஞர்களான Elizabeth Anstett மற்றும் Jean-Marc Dreyfus ஆகியோர், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பது அதிக வன்முறையை உருவாக்கும் ஆபத்தை பிரதிபலிக்கும் போது, உருவாக்கப்படும் பிரச்சினைகள் மறுசீரமைப்பிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகளை விட அதிகமாக இருக்குமா என்பதைக் கருத்தில் கொள்வது முக்கியம் என்று வாதிடுகின்றனர் (Anstett and Dreyfus 2015, Human Remains and Identification, 4).

தடயவியல் முடிவுகளுக்கு நாம் வழங்கும் விளக்கமளிக்க கூடிய ஆற்றலை நிலைநிறுத்துவதும் இங்கு முக்கியமாகும். இந்த தளங்களை உருவாக்க வழிவகுத்த சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வதற்கு தடயவியல் விசாரணை மட்டுமே ஒரே தீர்வாகும். 1980 களின் நடுப்பகுதியில் இருந்து, பாரிய மனித வன்முறையை அனுபவித்த சமூகங்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி புரிந்துகொள்ளக்கூடிய, பொறுப்புக் கூறலைக் கட்டமைக்க உயிர் பிழைத்தவர்களின் விவரிப்புகளை விட பொருள் சான்றுகளுக்கே அதிக கவனம் செலுத்தியுள்ளனர் (Anstett and Dreyfus 2015, Human Remains and Identification 7). இது தடயவியல் திருப்பம் என்று அழைக்கப்படுகிறது (Dziuban 2017, 12). குற்றவியல் விசாரணைக்கு தடயவியல் சான்றுகள் அவசியம் என்றாலும், ஒரு சமூகத்திற்கு பதில்களை வழங்குவதற்கான ஒரே வழி இது மாத்திரமல்ல. மேலும், அறிஞர்களான மற்றும் Eric Stover மற்றும் Rachel Shigekane ஆகியோர் மனித எச்சங்களை சோதனைகளுக்கான ஆதாரமாக நடத்துவது, சில சமயங்களில், இறந்தவர்களை மீண்டும் புதைப்பதற்கான சமூகத் தேவைகளைப் புறக்கணிக்க வழிவகுக்கக் கூடும் (Stover and Shigekane 2002). குறிப்பாக பாதுகாப்புப் படையினரால் அவை நடத்தப்பட்டால், பாரிய புதைகுழிகள் பற்றிய தடவியல் விசாரணைகள், அரசாங்கத்துடன் வன்முறை வரலாற்றைக் கொண்ட சமூகங்களுக்கு பாதுகாப்பற்ற உணர்வை உருவாக்கும். எழுத்தாளர் சாரா கபீர், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மற்றும் இராணுவமயமாக்கப்பட்ட சமூகங்களில் இந்த நிலை ஏற்படலாம் என்று கூறுகிறார்.[6] இது பகுப்பாய்வின் முடிவுகளை சமூகங்கள் நம்பாமல் போக வழிவகுப்பதோடு, இந்த விடயத்தை பொறுத்தவரை, தடயவியல் சோதனைகள், உள்ளூர் சமூகங்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய உண்மைக்கு வழிவகுக்காது.

[6] மேலும் விரிவான தகவலுக்கு “The Forever War? இலங்கையின் வடக்கில் இராணுவக் கட்டுப்பாடு”, சர்வதேச நெருக்கடிக் குழு 2014, https://www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/forever-war-military-control-sri-lanka-s- இல் கிடைக்கிறது.

உண்மையில், உள்நாட்டுப் போரின் தற்போதைய நினைவுச் சின்னங்கள் மற்றும் ஆவணப்படுத்தல்கள் ஒருதலைப்பட்சமானவை எனவும் சமூகங்களுக்கிடையில் பிளவுகளை வலுப்படுத்தக்கூடியவை எனவும் தமிழ்[7] மற்றும் சிங்கள சிவில் சமூகக் குழுக்கள் வாதிடுகின்றன. சடலங்களைத் தேடுவதிலும் அடையாளம் காண்பதிலும் ஒரு வெற்றிகரமான கதையை எதிர்த்து நிற்க வேண்டியது அவசியமாகிறது, ஏனெனில் இது போன்ற ஊடகக் கதைகள், நல்லிணக்கம் மற்றும் குணப்படுத்தும் நோக்கில் செயல்படாத மற்றும் செய்திகளை துருவப்படுத்துவதற்குமான கருவியாக இருக்கும். இந்த தலைப்பின் உணர்தன்மை, குறிப்பாக அரசியல் கருவிகள் மற்றும் ஊடக பரபரப்பிற்கு இட்டுச்செல்லக் கூடியது. இருப்பினும், இந்த அறிக்கைக்காக நேர்காணல் செய்த எழுத்தாளர்களும் ஆர்வலர்களும் குறிப்பிட்ட அந்த இடத்தில் என்ன நடந்தது என்பது குறித்த விவாதத்தை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாரிய புதைகுழிகளுடன் ஒப்பிடும் போது இவ்விடயம் கடினமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான ஒத்திசைவான மற்றும் உள்ளடக்கிய விவரிப்புகளை விசாரணைகளால் நிறுவ முடியவில்லை. வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய தனது எழுத்தில், ஆய்வாளர் சூலனி கொடிகார, இந்த பிரச்சினையின் பரந்த தன்மையை பகிரங்கமாக மறுப்பதன் அடிப்படையிலும், உடல் ரீதியாக, காணாமல் போனவர்கள் கணக்கில் வரவில்லை எனும் அடிப்படையிலும், இந்தப் பிரச்சினையில் அரசாங்கப் பேச்சை அழிக்ககூடிய ஒன்றாகக் கருத்துருவாக்கம் செய்கிறார் (Kodikara 2022).

பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன், அரசின் இந்த அழித்தல் தர்க்கத்துடன் அவை ஒருங்கிணைக்கப்படுகின்றன. அதற்கு அடுத்து அரசாங்க அதிகாரிகள் பாரிய மனித புதைகுழிகளுக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்டதற்குமான தொடர்பு பற்றி சவால் விடுவதோடு அவர்களின் இருப்பை விளக்குவதற்கு பல்வேறு கருதுகோள்களை முன்வைக்கின்றனர். இது பாரிய மனித புதைகுழியை வெற்றிகரமாக ஆராய்ந்து, நினைவுபடுத்தும் அரசாங்கத்தின் திறனில் உள்ளூர் சமூகங்கள் மற்றும் சர்வதேச குழுக்களிடையே நம்பிக்கையின்மைக்கு வழிவகுக்கின்றது.

இந்நூல் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பிரிவு வரலாற்றுப் பின்னணியை வழங்குவதோடு முக்கிய தளங்கள் மற்றும் அவற்றின் ஆய்வுகள் பற்றிய அறிவை ஒருங்கிணைக்கின்றது. இரண்டாவது பிரிவு, ஒரு மனிதப் புதைகுழியின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் நினைவேந்தலை வடிவமைக்கக்கூடிய பொருத்தமான உள்நாட்டு மற்றும்

[7] எடுத்துக்காட்டாக "தேர்ந்தெடுக்கப்பட்ட நினைவகம்: இலங்கையின் வடக்கில் அழித்தல் மற்றும் நினைவுகூரல்", கொழும்பை தளமாகக் கொண்ட மாற்றுக் கொள்கை மையம் 2017 இல் எழுதிய அறிக்கையைப் பார்க்கவும். https://www.cpalanka.org/selective-memory-erasure-memorialisation-in-sri-lankas-north/>; அத்துடன் "நிலைமை விளக்க எண் 4: தமிழர் அரசியலின் நினைவுகூரும் உரிமை மீதான இலங்கையின் அடக்குமுறை", யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட அடையாளம் கொள்கை ஆராய்ச்சி மையம் 2021 இல் எழுதிய கட்டுரை: http://adayaalam.org/situation-briefing-no-4-sri-lankas-repression-of-the-tamil-politys-right- to-remember


சர்வதேச சட்டக் கருவிகளை நிறுவுகிறது. மூன்றாவது பிரிவு கோட்பாட்டு முன்னோக்குகள் மற்றும் சர்வதேச வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மோதலுக்குப் பின்னர் சமூகங்களில் இந்த தளங்களை நிர்வகிப்பதில் சிறந்த நடைமுறைகளைப் பற்றி விவாதிக்கிறது. இணைப்புகளில், அறியப்பட்ட தளங்களின் அட்டவணை (இணைப்பு 1), இதனுடன் தொடர்புடைய சர்வதேச மற்றும் வெளிநாட்டு சட்டவியல் (இணைப்பு 2), அறிக்கை முழுவதும் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் (இணைப்பு 3) அரச சாரா நிறுவனங்களிடமிருந்து பாரிய மனித புதைகுழி மேலாண்மைக்கான மேலதிக வழிகாட்டுதல்கள் (இணைப்பு 4) ஆகியவற்றைக் காணலாம்.

இந்த தலைப்பு தொடர்பான ஆராய்ச்சிக்கு மேலும் அடித்தளம் அமைக்க இந்த அறிக்கை முயற்சிக்கிறது. இது கொழும்பில் உள்ள சர்வதேச இனத்துவ கற்கைகளுக்கான ஆய்வு மையத்தின் (ICES) தலைமையில் முன்னெடுக்கப்படும் பாரிய புதைகுழிகள் தொடர்பான ஒரு பாரிய திட்டத்தின் சிறு பகுதியாகும். இதனைத் தொடர்ந்து சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் ஆவணப்படம் மற்றும் கருத்தரங்குகள் உருவாக்கப்படவுள்ளன.

இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான நிலையான நல்லிணக்க செயன்முறைக்கு இந்த இடங்களைப் போதுமான விசாரணைகள் செய்து நினைவுச் சின்னங்கள் அமைப்பது முக்கியம் என்று பாரிய புதைகுழிகள் பற்றிய அறிஞர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் வாதிடுகின்றனர். இருப்பினும் இந்த தளங்களைப் பற்றிய நம்பகமான மற்றும் சரிபார்க்கப்பட்ட தகவல்களில் பற்றாக்குறை உள்ளது. இந்த அறிக்கை கிடைக்கக்கூடியதாக உள்ள தகவல்களை, இந்த தளங்களுடன் தொடர்புடைய சட்ட அறிவுடன் இணைக்கிறது. இதில், முதலாவதாக விசாரணை செய்யப்பட்ட இடங்களின் வரலாற்றை ஆராய்வோம்.

## 2. பிரதான விசாரணைகளின் வரலாறு

சூரியகந்த, செம்மணி, யாழ்ப்பாணம், மாத்தளை, களவாஞ்சிக்குடி, மன்னார் ஆகிய இடங்களில் 32 புதைகுழிகள் பட்டியலிடப்பட்டுள்ள போதிலும், ஏழு புதைகுழிகள் மாத்திரமே அகழ்வு செய்யப்பட்டுள்ளன. இந்த தளங்களின் உருவாக்கத்திற்கு வழிவகுத்த நிகழ்வுகளைப் பற்றிய சுருக்கமான கண்ணோட்டத்திற்குப் பிறகு, இந்த பகுதி கண்டுபிடிக்கப்பட்ட தருணத்திலிருந்து விசாரணையின் முடிவு வரை ஏழு தளங்களின் ஒவ்வொரு விசாரணையிலும் தனித் தனியாக இவ்வறிக்கை கவனம் செலுத்துகிறது. சில ஆய்வுகள் காலப்போக்கில் ஒன்றுடன் ஒன்று இணைந்திருந்தாலும், இந்த பகுதி அந்த தளங்களை அவற்றின் கண்டுபிடிப்பின் காலவரிசைப்படி தனித் தனியாக ஆராய்கிறது. இந்த பாரிய புதைகுழிகள் உருவாக்கப்படுவதற்கு காரணமான குறிப்பிட்ட நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் குறைவாகவே காணப்படுகின்றன. தளத்தின் சமமற்ற அளவு மற்றும் தகவல்களைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மனித புதைகுழிக்கும் ஒரே அளவிலான விளக்கங்களை முறையாக வழங்குவது கடினம். நூலாசிரியரால் சேகரிக்க முடிந்தவற்றை இந்தப் பகுதி முன்வைப்பதோடு, ஒவ்வொரு தளத்திலும் உள்ள தகவல்களை இன்னும் முறையாக வழங்குவதற்கு, இணைப்பு 1 இல் உள்ள அட்டவணை உதவியாக இருக்கும். ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் (Illangamuwa 2014) வெளியிடப்பட்ட வரைபடம் கலந்துரையாடப்படவுள்ள ஏழு இடங்களைக் கண்டறிய உதவியாக அமையும்.




ஆதாரம்: இளங்கமுவ, நிலந்த. "இலங்கை, வெகுஜன புதைகுழிகளின் தீவு", ஆசிய மனித உரிமைகள் ஆணையம், 3 ஜூன் 2014, http://www.humanrights.asia/news/ahrc-news/AHRC-ART-043-2014/.

இந்த தளங்களை பரந்து பட்ட ஒரு பின்னணியில் இருந்து ஆராய இலங்கையின் வரலாற்றை சுருக்கமாக நோக்க வேண்டியது அவசியமாகும். 1983 முதல் 2009 வரையான காலப்பகுதி, இலங்கை உள்நாட்டுப் போரில் பல படுகொலைகள் இடம்பெற்றன. உள்நாட்டு யுத்தத்துடன் தொடர்புபடாத இன்னும் பல வன்முறை மோதல்கள் இருந்த போதிலும் அவை நாட்டின் பாரிய மனித புதைகுழிகளுக்கான சந்தேகத்திற்குரிய காரண நிகழ்வுகளில் இடம்பெற்றுள்ளன. பல உள்நாட்டு யுத்தங்களைப் போலவே, இந்த நிகழ்வுகளைப் பற்றிய சரியான விவரங்களும் பெரும்பாலும் தெளிவற்றதாக இருக்கும். ஒவ்வொரு சமூகத்திற்கும் இடையில் காணப்படும் தொடர்புகளின் சிக்கலான தன்மையை விடுதலை புலிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பாரிய இருதரப்பினருக்குள் எப்போதும் அடக்கிவிட முடியாது. அத்தகைய சிக்கலான தொடர்புகளின் நான்கு எடுத்துக்காட்டுகளை குறிப்பிட வேண்டியது இங்கு அவசியமாகும்.

முதலாவதாக, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெற்ற அரசியல் எழுச்சியின் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர் விடுதலைக்காக பிரச்சாரம் செய்த ஏனைய தமிழ் குழுக்களுடன் மோதல்களில் ஈடுபட்டிருந்தனர். இது குழுக்களுக்கிடையில் சண்டைக்கு வழிவகுத்தது, குறிப்பாக 1986 இல் புலிகளின் உறுப்பினர்கள் மற்றொரு கிளர்ச்சிக் குழுவான தமிழீழ விடுதலை அமைப்பு (TELO) 100க்கும் மேற்பட்ட போராளிகளைக் கொன்றனர் (Cronin-Furman and Arulthas 2021).

இரண்டாவதாக, இலங்கை மத்திய மற்றும் தெற்கு மாகாணங்களில், 1987 முதல் 1989 வரையிலான ஆண்டுகளில் மார்க்சிய-லெனினிஸ்ட் (Marxist-Leninist) அரசியல் குழுவான JVP கிளர்ச்சி ஏற்பட்டது. (இதன்பின் வருபவற்றில் JVP "மக்கள் விடுதலை முன்னணி" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இக்கட்சியானது பிரதானமாக சிங்கள பௌத்த பிரஜைகளை உள்ளடக்கியதாக இருந்ததுடன், அரசாங்க பாதுகாப்புப் படையினரால் இக்கிளர்ச்சி வன்முறையூடாக ஒடுக்கப்பட்டது. சூரியகந்த மற்றும் மாத்தளையில் உள்ள பாரிய மனித புதைகுழிகளின் தோற்றம் இந்த நிகழ்வின் பின்னணியாகக் கருதப்படுகிறது.

மூன்றாவது, வடக்கில் புலிகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் நீடித்து வந்த பதற்றம் ஆகும். இதன் விளைவாக 1990 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதோடு 1992 ஆம் ஆண்டு LTTE படைகளால் பாளியகொடெல்ல கிராமத்தின் முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டனர் (McGilvray and Raheem 2007).

நான்காவதாக, 1987 முதல் 1990 வரை இந்திய அமைதி காக்கும் படைகள் விடுதலைப் புலிகளுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவாக அனுப்பப்பட்டன. வடமாகாணத்தில் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பல யுத்தங்கள் அக்காலத்தில் இடம்பெற்றன.

மனித உரிமை செயற்பாட்டு குழுக்கள் 1992 இல் இருந்து இலங்கையில் பாரிய புதைகுழிகள் இருப்பதை அறிந்துள்ளன (மனித உரிமைகள் கண்காணிப்பகம் 1992, 6). எவ்வாறெனினும், 1994 ஆம் ஆண்டில், சந்திரிகா குமாரதுங்க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) அரசாங்க ஆட்சியின் கீழ் தான் முதல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது (Wickramasinghe 2014, 165). 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நான்கு வெவ்வேறு விசாரணை ஆணைக்குழுக்களை (Wickramasinghe 2014, 309) அவர் நிறுவினார். இந்த ஆணையங்கள்[8] 1994 முதல் 2000 ஆண்டு வரை செயல்பட்டன. 1994 மற்றும் 1997 க்கு

[8] இந்த ஆணைக்குழுக்களின் பணிகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, மனித உரிமைகள் கண்காணிப்பு, தொடர் கனவு: இலங்கையில் "காணாமல் போனவர்கள்" மற்றும் கடத்தல்களுக்கான அரச பொறுப்பு, 6 மார்ச் 2008, தொகுதி 20, எண். 2(ஊ), பக்கம் 20 இல்: https: //www.refworld.org/docid/47d0fab62.html

இடையில், ஆணைக்குழுக்களுக்கு 27,526 காணாமல் போனோர் தொடர்பான வழக்குகள் கிடைத்தன, அவற்றில் 16,742 (Senanayake 2018, 111) விசாரணைகளை நடத்தி 12 பாரிய புதைகுழிகளை கண்டறிந்து பட்டியலிட்டன.[9] அவர்களின் இறுதி அறிக்கை 1998 இல் வெளியிடப்பட்டது. ஆசிய மனித உரிமைகள் ஆணையம் மற்றும் பிற அரசாங்க அறிக்கைகளால் சுட்டிக்காட்டப்பட்டபடி, 1998 முதல் 2022 வரை, அவற்றுக்கு மேலதிகமாக 20 மனித புதை குழிகள் பதிவாகியுள்ளன.

இந்த அறிக்கையானது அரசு சார்ந்தவர்களால் அதிகாரப்பூர்வமாக ஆய்வு செய்யப்பட்ட முக்கிய தளங்களின் வரலாற்றை ஆழமாக ஆராய்கிறது. 1994 இல் சூரியகந்த, 1998 இல் செம்மணி, 1999 இல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கம், 2012 இல் மாத்தளை, 2014 இல் களவாஞ்சிக்குடி, இறுதியாக, 2018 இல் மன்னார் மாவட்டத்தில் இரண்டு கல்லறைகள் மற்றும் 2013 இல் இரண்டு புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தின் அடிப்படையில் இந்த இடங்கள் காலவரிசைப்படி இடம்பெறுகிறது. இந்த இடங்கள் புதைகுழிகளின் அளவு (அல்லது சந்தேகத்திற்கிடமான அளவு, உதாரணமாக களுவாஞ்சிகுடி வழக்கு) மற்றும் இலங்கையில் பாரிய புதைகுழிகளை விசாரணை செய்வதில் உள்ள சிக்கலான தன்மையை வெளிப்படுத்துவதால் தெரிவு செய்யப்பட்டன. 2000ஆம் ஆண்டில் மிருசுவில் மற்றும் 2020இல் மாங்குளத்தில் உள்ள இடங்கள் போன்ற வேறு சில தளங்களும் ஆராயப்பட்டுள்ளன (இணைப்பு 1 ஐப் பார்க்கவும்), இந்த விசாரணைகளும் கீழே உள்ள வழக்குகளில் விளக்கப்பட்டுள்ளதைப் போன்ற சிக்கல்களை கொண்டு காணப்படுகின்றன. ஒவ்வொரு உட்பிரிவிலும், மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட விதம், எடுக்கப்பட்ட விசாரணை நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முடிவுகள் ஏதேனும் இருந்தால், அவையும் ஆராயப்பட்டுள்ளன. பெரும்பாலான விசாரணை முயற்சிகள் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிவதில் அல்லது மனித புதைகுழி ஏற்பட வழிவகுத்த நிகழ்வுகளின் தெளிவான விவரிப்புகளை நிறுவுவதில் அல்லது அதற்கு பொறுப்பான நபர்கள் மீது வழக்குத் தொடுப்பதில் வெற்றிபெறவில்லை. இந்த இலக்குகளை அடைவதில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட தடைகள் பற்றி இந்த அறிக்கை முழுவதும் ஆராயப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு மாத்தளை மற்றும் மன்னாரில் உள்ள பாரிய புதைகுழிகள் மற்றும் அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் DNA ஆய்வு கூடத்திற்கு விஜயம் செய்த பலவந்தமாக காணாமல் போதல் தொடர்பான ஐ.நா செயற்குழுவால் ஒரு தடை அடையாளங்காணப்பட்டது. சில பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அதிகாரிகள், குறிப்பாக குற்றப் புலனாய்வுத் துறை (CID) அதிகாரிகள் என்று நம்பப்படும் அதிகாரிகளிடமிருந்து (OHCHR, 2015) மிரட்டும் தந்திரோபாயங்கள், அச்சுறுத்தல்கள், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பிற வகையான வற்புறுத்தல் போன்ற செயற்பாடுகள் பாரிய மனித புதைகுழி தொடர்பான

[9] மேலும் தகவலுக்கு, இலங்கையின் நாட்டின் நிலைமை, தன்னிச்சையாக காணாமல் போனதற்கு எதிரான ஆசிய கூட்டமைப்பு, https://www.afad-online.org/voice/maiden_01/cs_srilanka.htm Ig; ghu;f;fTk;

விசாரணைகள் எவ்வாறு இடம்பெற்றிருக்கும் என்பதற்கு சாட்சியமளித்தது. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடும் பொறுப்பில் ஒரு சுயாதீன நிறுவனத்தை நிறுவுமாறு இது பரிந்துரை செய்தது, இது நாட்டின் எந்தவொரு ஆவணக் காப்பகத்திற்கும் இலவச அணுகலைக் கொண்டிருப்போதோடு, தடயவியல் நிபுணத்துவம் உள்ளிட்ட தொழில்நுட்ப திறனைக் கொண்டிருக்கும். காணாமல் போனவர்களைத் தேடுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்கான சட்டமூலத்திற்கு இலங்கை அமைச்சரவை ஒப்புதல் அளிப்பதற்கு சற்று முன்னர் இந்த ஐ.நா அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு மே மாதம் ஸ்தாபிக்கப்பட்ட காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் அன்றிலிருந்து பாரிய புதைகுழி விசாரணைகளின் மேற்பார்வையாளராக இருந்து வருகிறது, இது வலுக்கட்டாயமாக காணாமல் போதல் தொடர்பான அரசாங்கத்தின் அணுகுமுறையில் இருந்து ஒரு மாற்றத்தைக் கொண்டுள்ளது. இதன் வகிபங்கு சட்ட கட்டமைப்புகள் பற்றிய பிரிவு 3 இல் மேலும் ஆராயப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு இவ்வமைப்பு நிறுவப்பட்ட நிலையில், இந்த அறிக்கையில் பகுப்பாய்வு செய்யப்பட்ட கடைசி பாரிய மனித புதைகுழி விசாரணையில் மட்டுமே OMP செயலில் இருந்துள்ளது, அதாவது 2018 இல் கண்டுபிடிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தின் இரண்டாவது புதைகுழி விசாரணையில் மாத்திரமே பங்காற்றியுள்ளது. இலங்கையில் பாரிய புதைகுழி விசாரணைகளின் வரலாற்றை ஆராய்வது இவ்வாய்வில் முன்வைக்கப்படவுள்ள சட்ட கட்டமைப்பை அமுல்படுத்துவதற்கான சவால்கள் மற்றும் தடைகளை புரிந்து கொள்ள உதவும் என்று நம்பப்படுகிறது.

**சூரியகந்த (1994)**

1994 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் எம்பிலிப்பிட்டிய நகருக்கு அருகில் உள்ள சூரியகந்த கிராமத்தில் உள்ள மலையில் இலங்கை மின்சார சபை கோபுரத்தை நிறுவும் திட்டத்தை அறிவித்தது. ஒரு அநாமதேய சாட்சி இந்த மலையில் ஒரு பாரிய மனித புதைகுழி அமைந்துள்ளதை வெளிப்படுத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன் மற்றும் அரசியல்வாதி எஸ்.பி. திசாநாயக்க (அப்போதைய எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்) ஆகியோரை தொடர்பு கொண்டார் (Borham and Arachchi 2018). 1994 ஜனவரியில் அரசியல்வாதிகள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் குழு அந்த இடத்திற்குச் சென்றனர். மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும், அவர்கள் சம்பவத்தை எம்பிலிப்பிட்டிய மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் புகாரளித்தனர், நீதிபதி உத்தியோகபூர்வ அகழ்வாராய்ச்சியைத் தொடங்க உத்தரவிட்டார் (Borham and Arachchi 2018). இந்தத் தளம் பற்றிய செய்தி பரவியதையடுத்து, அப்பகுதியைச் சேர்ந்த மக்களும், காணாமல் போனவர்களின் பெற்றோர்களும் அந்த இடத்துக்குக் குவிந்தனர்.

தி சண்டே ஒப்சர்வர் (The Sunday Observer) செய்தித்தாளின் படி, இலங்கையில் உத்தியோகபூர்வமாக நடைபெற்ற முதல் பாரிய மனித புதைகுழி அகழ்வு இதுவாகும்

(Borham and Arachchi 2018). நீதித்துறை, மருத்துவ அதிகாரிகள் அகழ்வாராய்ச்சியை மேற்பார்வையிட்டாலும், அந்த இடம் பொதுமக்களிடமிருந்து பாதுகாக்கப்படவில்லை, மேலும் பலர் அகழ்வாராய்ச்சியில் கலந்து கொண்டனர், ஆதாரங்களை சேதப்படுத்துவதைத் தவிர்ப்பதற்கான சரியான நடைமுறைகளை அரிதாகவே பின்பற்றினர். இதன் விளைவாக, சில எலும்புக்கூடுகள் நகர்த்தப்பட்டு அவற்றின் ஆடைகளிலிருந்து பிரிக்கப்பட்டு, அடையாளம் காணும் செயல்முறைக்கு மேலும் இடையூறாக அமைந்தது.

புதைகுழியில் சுமார் 300 உடல்கள் இருந்ததாக விசாரணையில் மதிப்பிடப் பட்டுள்ளது (இலங்கையில் மனித உரிமைகள் நடைமுறைகள் குறித்த அமெரிக்க நாட்டு அறிக்கை, 1994). கொல்லப்பட்டவர்களின் அடையாளம் சிங்களப் பிரஜைகள் என நம்பப்பட்டதுடன் 1987 மற்றும் 89 க்கு இடையில் ஜே.வி.பியின் மார்க்சிச-லெனினிச எழுச்சியின் போது இந்த புதைகுழி உருவாக்கப்பட்டது என்பது விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டது. விசாரணையின் போது, 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் அரச முகவர்களால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 48 பாடசாலை மாணவர்களின் சடலங்கள் புதைகுழியில் இருந்ததாகவும் நம்பப்பட்டது.

எவ்வாறாயினும், விசாரணை இடைநிறுத்தப்பட்டதுடன் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை (எம்பிலிப்பிட்டிய காணாமல்போன பாடசாலை மாணவர்களின் பெற்றோர் அமைப்பு, 2022). எம்பிலிப்பிட்டியவில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான சமீபத்திய ஆய்வுகள், சிறுவர்களின் சடலங்கள் சூரியகந்தவில் புதைக்கப்படவில்லை, மாறாக இளைஞர்கள் வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்ட இடங்களுக்கு மிக அருகில் உள்ள தேக்குமரக்காடு என்ற இடத்தில் புதைக்கப்பட்டனர் என்ற உண்மையை சுட்டிக்காட்டுகின்றன (எம்பிலிப்பிட்டிய காணாமல் போன பாடசாலை மாணவர்களின் பெற்றோர் அமைப்பு, 2022). சடலங்களின் அடையாளம் குறித்த தெளிவு இல்லாத போதிலும், சூரியகந்தவில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர தூண்டியது. 25 மாணவர்கள் தொடர்பில் பாடசாலையின் அதிபர் மற்றும் ஆறு இராணுவ வீரர்களுக்கு, கொலை கடத்தல் மற்றும் சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது (Hoole, 2014).

குறித்த தளத்தைச் சுற்றிலும் பாதுகாப்பு இல்லாத காரணத்தினால், இறுதி தடயவியல் பகுப்பாய்வு இல்லாமல் விசாரணையை இடைநிறுத்த சட்ட வைத்திய அதிகாரிகள் தீர்மானித்தனர். பெரும்பாலான எலும்புக்கூடுகள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. 1994 ஆம் ஆண்டு விசாரணையின் அரசியல் கட்டமைப்பே இதற்குக் காரணம் என அரசியல்வாதி எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நல்லிணக்க செயன்முறையில் கவனம் செலுத்துவதை விட, சிங்கள ஜே.வி.பி எழுச்சியுடன் தொடர்புடைய நீதிக்கு புறம்பான படுகொலைகளை நடத்தியதில் இலங்கை அரசாங்கத்தின் குற்றத்தை வெளிப்படுத்துவதே இதன் நோக்கங்களில் ஒன்றாகும் என்று அவர் கூறினார் (Borham and Arachchi

2018). நீதவானுக்கு அனுப்பி வைக்கப்பட்ட எச்சங்களின் இருப்பிடம் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படாததுடன், பல குடும்பங்களால் காணாமல் போன தமது உறவினர்களை அடையாளம் காண முடியவில்லை. 1995 ஆம் ஆண்டில் விசாரணை நிறுத்தப்பட்ட பின்னர், மேலதிக முன்னேற்றங்கள் எதுவும் இதில் ஏற்படவில்லை.[10] இன்று, அந்த இடத்தில் நினைவு சின்னம் எதுவும் இல்லை, பல்வேறு தொலைத்தொடர்பு நிறுவனங்களின் கோபுரங்கள் மட்டுமே மலையில் தெரிகிறது (Borham and Arachchi 2018).

**செம்மணி (1998)**

முன்னாள் இராணுவ அதிகாரி சோமரத்ன ராஜபக்'வின் சாட்சியத்தின் மூலம் 1998 ஆம் ஆண்டில் செம்மணியில் உள்ள இடம் அறியப்பட்டது. கிரு'ாந்தி குமாரசாமி என்ற இளம் தமிழ் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்ததற்காகவும், 1996 ஆம் ஆண்டு அவரது குடும்பத்தினரைக் கொன்றதற்காகவும் (Bala 2017) 1998 ஆம் ஆண்டில், அவருக்கும் ஏனைய எட்டு இராணுவ வீரர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டில் பாதுகாப்புப் படையினரால் புதைக்கப்பட்ட 400 தமிழ் குடிமக்களின் சடலங்களைக் கொண்ட செம்மணி கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள பாரிய மனித புதைகுழிகள் தொடர்பாக தனக்குத் தெரியும் என்று ராஜபக்' தனது விசாரணையின் போது கூறினார் (US Country Report on Human Rights Practices in Sri Lanka 1999). யாழ்ப்பாணக் குடாநாட்டை விடுதலைப் புலிகளிடமிருந்து அரசாங்கப் பாதுகாப்புப் படைகள் மீளக் கைப்பற்றியபோது இது நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது (Human Rights Watch 2008).

ஜூலை 1998 இல், காவல்துறை மற்றும் தடயவியல் நிபுணர்களால் இந்த குற்றச்சாட்டு பார்வையிடப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் செம்மணி அகழ்வை செய்யுமாறு சட்டமா அதிபர் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் கோரிக்கை விடுத்த போதிலும், உடனடியாக அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. அரசாங்கத்தின் மீது அதிகரித்து வந்த உள்ளூர் மற்றும் சர்வதேச அழுத்தம் காரணமாக, மார்ச் 1999 இல் மாதிரிகளை சேகரிக்க அரசாங்க நிபுணர்களால் இந்த இடம் பார்வையிடப்பட்டது (அமெரிக்க இலங்கை அறிக்கை 1999). 1999 ஆம் ஆண்டில், சர்வதேச மன்னிப்புச் சபையால் செம்மணியில் சடலங்கள் தோண்டியெடுக்கப்பட வேண்டும் என்று கோரும் அறிக்கைகளை வெளியிட்டது, இதனால் அது பாரபட்சமின்றி நடத்தப்படுவதோடு நீதிமன்றத்தில் எந்த ஆதாரமும் ஏற்றுக்கொள்ளப்படும் என வலியுறுத்தியது (Amnesty International 1999).

1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சர்வதேச கண்காணிப்பாளர்களுடன் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இருவரின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டது, பின்னர் 1996 ஆம் ஆண்டு அவை காணாமல் போன இரண்டு தமிழ் ஆண்கள் என அடையாளம்

---

[10] இலங்கையில் மனித உரிமைகள் நடைமுறைகள் பற்றிய அமெரிக்க நாட்டு அறிக்கைகளில், 1995 முதல் 1999 வரை இந்த வழக்கு எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் அதன் பிறகு வழக்கு சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணப்பட்டது. 1999 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில், குமாரசாமி வழக்கில் தண்டிக்கப்பட்ட ஒன்பது வீரர்களில் ஐந்து பேர் 120 முதல் 140 உடல்களை புதைக்க உத்தரவிடப்பட்ட 16 வெவ்வேறு இடங்களை சுட்டிக்காட்டினர், அங்கு தோண்டியெடுத்ததில் மேலும் 13 உடல்கள் மீட்கப்பட்டன. 1999 டிசம்பரில் வெளியிடப்பட்ட அரசு தடயவியல் அறிக்கையில், 10 நபர்களின் சடலங்கள் உடல் ரீதியான தாக்குதல் மற்றும் கொலைக்கான தெளிவான அறிகுறிகளைக் காட்டியதாகவும், மற்ற மூவரின் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும் தெரியவந்தது. மொத்தம் கண்டெடுக்கப்பட்ட 15 உடல்களில் 13 உடல்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. குமாரசாமி வழக்கில் தண்டனை பெற்ற 9 இராணுவ வீரர்கள் செம்மணியில் நடந்த கொலைகளுக்கு காரணமானதாக கூறப்படும் 20 பாதுகாப்பு படை வீரர்களின் பெயர்களை வெளியிட்டனர். இந்த நபர்களுக்கு எதிராக ஆரம்ப குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதுடன், கொலைகளுடன் தொடர்புடையவர்களின் அடையாளத்தை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்று சட்டமா அதிபர் கூறினார் (US Sri Lanka Report 1999). எனினும், அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் எவரும் கைது செய்யப்படவில்லை.

குமாரசாமி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒன்பது இராணுவ வீரர்களில் ராஜபக்' மற்றும் நான்கு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது, மூவர் விடுதலை செய்யப்பட்டனர், ஒருவர் காலமானார் (சோமரத்ன ராஜபக்' ஒன்பது இராணுவ வீரர்களுக்கு எதிராக கௌரவ சட்டமா அதிபர், 2003). செம்மணி மனிதப் புதைகுழிகளை உருவாக்கியதாகக் கூறப்படும் குற்றவாளிகளின் பெயர்களை அவர்கள் வழங்கியிருந்த போதிலும், அது தொடர்பான தகவல் பொதுமக்களுக்குக் கிடைக்கவில்லை. மேலும், யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் இராணுவப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆராய்வதற்காக 1996 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் விசாரணைச் சபை தனது அறிக்கையை பகிரங்கப்படுத்தவில்லை (Bopage 2017). இது ராஜபக்' மற்றும் அவரது சக இராணுவ வீரர்களால் குறிப்பிடப்பட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் நீதிக்கு புறம்பான கொலைகள் ஆகியவற்றுக்கு இடையிலான தகவல்களை உறுதிப்படுத்துவதைத் தடுக்கிறது.

2006 ஆம் ஆண்டில், ஆசிய மனித உரிமைகள் ஆணையம் மீதமுள்ள 13 உடல்களை அடையாளம் காணாததற்கு "சடலம் தோண்டியெடுத்தல்கள், முடிவில்லாத DNA சோதனைகள் மற்றும் அரசியல் எதிர்ப்பு" (ஆசிய மனித உரிமைகள் ஆணையம் 2006) ஆகியவையே காரணமென குற்றம் சாட்டியது. பாதுகாப்புப் படை உறுப்பினர்களுக்கு எதிரான ஆரம்ப குற்றச்சாட்டுக்கள் எந்தவொரு வழக்கு விசாரணைக்கும் வழிவகுக்கவில்லை, மேலும் 2006 ஆம் ஆண்டளவில் விசாரணை நிறுத்தப்பட்டது (BBC Sinhala News 2006). இந்த தளம் அதிகாரப்பூர்வமாக நினைவுகூறப்படவில்லை.

**யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கம் (1999)**

1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கம் அமைப்பதற்கான அகழ்வுப் பணிகளின் போது பலரது எலும்புக்கூடுகள் மாநகர சபை ஊழியர்களால் கண்டெடுக்கப்பட்டன (டீழியபந 2017, 30). 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி குறித்த இடத்தை பொலிஸ் படையினர் ஆராய்ந்து மே மாதம் சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்ட நீதியரசர் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. 2000ஆம் ஆண்டில் இலங்கையில் மனித உரிமைகள் நடைமுறைகள் தொடர்பான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கையின் தடயவியல் சான்றுகள், இந்த எச்சங்கள் சுமார் 10 ஆண்டுகள் பழமையானவை என்று கூறுகின்றன. அச்சமயத்தில் இந்திய அமைதி காக்கும் படை யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததுடன், இந்தக் கண்டுபிடிப்பின் காரணமாகவே அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது கண்டறியப்பட்டது (U.S. Department of State Country Report on Human Rights Practices in Sri Lanka 2000).

1987 இல் இந்திய அமைதி காக்கும் படையினர் வட மாகாணத்தை ஆக்கிரமித்தபோது கொல்லப்பட்ட தமிழர்களின் எலும்புக்கூடுகள் என சந்தேகிக்கப்படும் மொத்தம் 49 உடல்கள் மூன்று வெவ்வேறு தோண்டியெடுப்புகளில் வெளிப்படுத்தப்பட்டன (Iqbal 2010). இருப்பினும், பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தைத் தீர்மானிக்க உதவுவதற்கு சிறிய சமூகமே இருந்தது. யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் எனப்படும் சிவில் சமூகக் குழுவானது, குறுகிய காலத்தில் வெவ்வேறு குழுக்கள் பிரதேசத்தை வசம் வைத்திருந்ததால், குற்றவாளிகளை அடையாளம் காண எந்த முயற்சியும் இல்லை என வாதிட்டனர்.

இந்திய அமைதி காக்கும் படை 1989 இறுதி வரை அங்கு இருந்தது, LTTE செப்டம்பர் 1990 முதல் அக்டோபர் 1995 வரை அப்பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருந்தது, அதன் பிறகு இலங்கை இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது (UTHR சிறப்பு அறிக்கை 1999). எச்சங்கள் 1999 இல் அடையாளம் காண கொழும்புக்கு அனுப்பப்பட்டன, ஆனால் அரசாங்க அதிகாரிகள் மேலதிக அறிக்கைகள் எதையும் வெளியிடவில்லை (Associated Press 1999). பாரிய மனித புதைகுழி பற்றிய அதிகாரப்பூர்வ குறிப்பு எதுவும் இல்லாமல், இந்த இடம் துரையப்பா விளையாட்டரங்கமாகவே உள்ளது. இது இப்போது யாழ் குடாநாட்டில் ஒரு விளையாட்டு மைதானமாக உள்ளதுடன் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

**மாத்தளை (2012)**

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்க புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதைப் போலவே, 2012 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மாத்தளை பொது மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டியபோது

மாத்தளையில் (மத்திய மாகாணம்) இப் புதைகுழி, கட்டுமானத் தொழிலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. 2012 நவம்பரில், நீதவான் நீதிபதி சதுரிகா டி சில்வா அந்த இடத்தை தோண்டி எடுக்க உத்தரவிட்டார் (Bopage 2017). சட்ட வைத்திய அதிகாரி அஜித் ஜயசேன மற்றும் தடயவியல் தொல்பொருளியல் நிபுணர் ராஜ் சோமதேவ ஆகியோர் இந்த இடத்தை மேற்பார்வையிட்டனர். கண்டெடுக்கப்பட்ட இயற்பியல் கலைப்பொருட்களின் அடிப்படையில், சோமதேவா 1986 மற்றும் 1990 க்கு இடைபட்ட காலப்பகுதி என இந்த இடத்தைக் குறிப்பிட்டிருந்தார், இது JVP கிளர்ச்சி நடந்த காலத்திற்கு ஒத்ததாக காணப்படுகிறது. கிளர்ச்சியை இலங்கை பாதுகாப்புப் படைகள் வன்முறையாக ஒடுக்கியதன் காரணமாக இந்த இடம் தோன்றியதாகக் கூறப்படுகிறது (Al-Jazeera 2013). பல எலும்புக்கூடுகள் சித்திரவதை மற்றும் தீவிர வன்முறையின் அடையாளங்களைக் கொண்டிருந்தன என்பதை தடயவியல் அறிக்கை வெளிப்படுத்துகிறது, இதில் தலை துண்டித்தல், சிதைத்தல் மற்றும் மறைத்தல் ஆகியவை அடங்கும். எலும்புக்கூடுகள் இரண்டு அடுக்குகளாக வைக்கப்பட்டிருப்பது அந்த இடம் ஒரு புதைகுழி என்பதை விட ஒரு பாரிய மனித புதைகுழி என்பதைக் குறிக்கிறது (Somadeva 2013). பெப்ரவரி 2013 இல், 154 பேரின் எச்சங்கள் தோண்டி எடுக்கப்பட்டன, இது நாட்டின் தெற்குப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனித புதைகுழியாக அடையாளம் காணப்பட்டது.

புதைகுழி தோண்டி எடுக்கப்பட்ட பின்னர், நீதிபதி டி சில்வா, மார்ச் 2013 இல் சாட்சிகளை முன்வருமாறு அழைப்பு விடுத்தார். இலங்கை இராணுவத்தின் கஜபா படைப்பிரிவு மக்களை சித்திரவதை செய்த இடத்திற்கு அருகில் அந்த இடம் இருப்பதாக சிலர் கூறினர். அந்த இடத்தில் உறவினர்கள் புதைக்கப்பட்டிருப்பதாகக் கூறிய 13 குடும்பங்களுக்கு JVP யின் சட்டத்தரணிகள் ஆதரவளித்தனர், மேலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் இதில் தலையிட்டிருந்தது (Bala 2017). சோமதேவாவின் அறிக்கையின் பரிந்துரையின் பேரில், சில எச்சங்கள் அமெரிக்காவில் உள்ள Beta Analytic, Inc என்ற ஆய்வகத்தில் ரேடியோகார்பன் சோதனைக்கு அனுப்பப்பட்டன. இந்தச் சான்றுகளின் தொடரில் எந்த ஆவணமும் இல்லாமல் மாதிரிகள் அனுப்பப்பட்டன. நவம்பர் 2014 இல், Beta Analytic, Inc இன் குற்றப் புலனாய்வு அறிக்கை முடிவுகள், இவை 1950 க்கு முந்தைய மாதிரிகள் என நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது, (Ratnavalli 2014). பேராசிரியர் சோமதேவா சாட்சியமளிக்கையில், அந்த இடம் நன்கு பாதுகாக்கப்படாததாலும், மழைநீரால் இரண்டு முறை நிரம்பியதாலும், மாதிரிகள் மாசுபட்டிருக்கலாம் என தெரிவித்திருந்தார். Beta Analytic, Inc இன் முடிவுகளை உறுதிப்படுத்த மாதிரிகள் வேறொரு ஆய்வகத்திற்கும் அனுப்பப்படவில்லை.

2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்' புதைகுழி குறித்து விசாரணை செய்வதற்காக, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை அமைத்தார் (Colombo Telegraph 22 June 2013). Beta Analytic Inc நிறுவனத்தின் முடிவுகளுக்கு ஆதரவாக பேராசிரியர் சோமதேவவின் சாட்சியத்தை புறக்கணித்த ஜனாதிபதி

ஆணைக்குழு, வழக்கை 2015 ஆம் ஆண்டில் சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு மாற்றியது. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் குழுவின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ, செயற்பாட்டாளர்கள் ஒவ்வொருநாளும் நீதிமன்றத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களிலிருந்து பிரமாணப் பத்திரங்களை சேகரித்ததாகவும் நினைவு கூர்ந்தார். நீதிபதி டி சில்வா இந்த ஆவணங்களையும் எதிர்ப்புக்களையும் ஏற்றுக்கொண்டார். எவ்வாறாயினும், வழக்கு சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டபோது, டி சில்வா பதவி நீக்கம் செய்யப்பட்டு அவருக்கு பதிலாக ஒரு புதிய நீதிபதி நியமிக்கப்பட்டார், அவர் ஆர்ப்பாட்டங்களை ஏற்றுக்கொள்ளாததோடு செயற்பாட்டாளர்களால் சேகரிக்கப்பட்ட பிரமாணப் பத்திரங்களை பரிசீலிக்கவும் மறுத்துவிட்டார் (Brito Fernando 2022). JVP எழுச்சியை அடக்குவதில் கோட்டாபய ராஜபக்'வுக்கு இருந்த ஈடுபாட்டைக் கருத்தில் கொண்டு இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவும் விசாரணையை முடிப்பதில் ஆர்வம் காட்டியது என்று தி கொழும்பு டெலிகிராப் இணையத்தளம் (The Colombo Telegraph) தெரிவிக்கிறது (Colombo Telegraph 22 June 2013). இந்த ஆணைக்குழு 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அறிக்கை சமர்ப்பித்த போதிலும், அது பகிரங்கப்படுத்தப்படவில்லை, அதன் பின்னர் வழக்கு முடிக்கப்பட்டது. இந்த இடத்திற்கு உத்தியோகபூர்வ நினைவுச்சின்னம் எதுவும் இல்லை, ஆனால் ஆசிய மனித உரிமைகள் ஆணையம் இந்த தளத்திற்கு அருகில் வெசாக் தின பிரதிபலிப்பை வழங்குவதன் மூலம் இந்த தளத்தை நினைவு கூற முயற்சித்துள்ளது (ஊழடழஅடிழ வுடநபசயிா 25 ஆயல 2013). 2022 இல் இந்த அறிக்கையை எழுதும் போது அந்த நினைவேந்தல்கள் இன்னும் நடைபெறுகின்றனவா என்பது பற்றி உறுதியாக கூறமுடியாது.

**களுவாஞ்சிக்குடி (2014)**

2014 ஆம் ஆண்டில், களுவாஞ்சிக்குடியில் (கிழக்கு மாகாணம்) வசித்த ஒருவர், சுமார் 100 முஸ்லீம் பாதிக்கப்பட்டவர்களின் எச்சங்கள் (Bangkok Post 2014). இருப்பதாகக் கூறி ஒரு தளத்தை விசாரிக்க உள்ளூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் (Bangkok Post 2014). 1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 12 ஆம் திகதி (பிசினஸ் ஸ்டாண்டர்ட் 2014) கல்முனையைச் சேர்ந்த விடுதலைப் புலி உறுப்பினர்களால் குருக்கள் மடம் கடற்கரையில் சிறைபிடிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 168 பிரஜைகளின் சடலங்கள் இந்த இடத்தில் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. களுவாஞ்சிகுடி நீதவான் ஏ.எம். ரிஹால் அகழ்வு செய்வதற்கான உத்தரவை பிறப்பித்த போதிலும், இந்த வழக்கை நீதிபதி அப்துல் கபூர் மேற்பார்வையிட்டார். அகழ்வாராய்ச்சி முதலில் 01, ஜுலை, 2014 அன்று தொடங்க திட்டமிடப்பட்டது, ஆனால் தடயவியல் நிபுணர்களை சேகரிக்க கூடுதலான நேரம் தேவைப்படுகிறது என காவல்துறை கூறியதால் 24, நவம்பர், 2014 ஆம் திகதிக்கு அகழ்வாராய்ச்சி ஒத்திவைக்கப்பட்டது (Bala 2017).

பாரிய மனித புதைகுழி தமிழர் பகுதியில் அமைந்திருந்ததால், பாதிக்கப்பட்டவர்களின் சாத்தியமான அடையாளம் பற்றிய சாட்சியங்களை பகிர்ந்து கொள்வதற்காக தமிழ்

குடிமக்களை ஊக்குவிக்க, உள்ளூர் சிவில் சமூக அமைப்பாளர்கள் பணியாற்றினர (Bala 2017). 2018 ஆம் ஆண்டிற்குள், நீதிபதி கபூர் மீண்டும் ஒருமுறை தோண்டுதல் மற்றும் மேலதிக விசாரணையை ஒத்திவைத்தார். இந்த முடிவுக்கான காரணம், பாரிய மனித புதைகுழி பற்றிய தகவல்களை சேகரிக்க உதவுவதற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் அதிக உரையாடல்கள் தேவைப்படுகிறது எனவும், இது பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண உதவும் எனவும் கூறப்பட்டது (Bala 2017). ஆகஸ்ட் 2022 வரை, விசாரணைகள் எதுவும் இன்னும் நடைபெறவில்லை.

**மன்னார் (2013)**

2013 ஆம் ஆண்டில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கட்டுமானத் தொழிலாளர்கள் புதிய நீர்க் குழாயை அமைக்கும் போது, மன்னார் மாவட்டத்தில் (வடக்கு மாகாணம்) திருக்கேதீஸ்வரம் கிராமத்தில் உள்ள ஒரு பிரபலமான கோவிலுக்கு அருகில் எலும்புக்கூடுகளை கண்டுபிடித்தனர். டிசம்பர் 2013 முதல் மார்ச் 2014 வரை பல்வேறு கட்டங்களில் இந்த இடம் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டதுடன் இதில் 83 நபர்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன (US Country Report 2016).

அரசாங்க அதிகாரிகளால் பல கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டன. மார்ச் 2014 இல், அரச தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் செனரத் திசாநாயக்க, “உடல்கள் முறையாக புதைக்கப்பட்டன” என்று அறிக்கை செய்தார், அந்த இடம் உண்மையில் சுமார் 50 வருடங்கள் பழமையான ஒரு மயானம் ஆகும் (Aneez 2014). கிராமத்தின் வரலாற்றுத் திட்டங்கள் ஒருபோதும் மயானம் இருப்பதைக் காட்டவில்லை என்பதால் இது பின்னர் சர்ச்சைக்குள்ளானது (Groundviews 2014). மேலும், உள்ளூர் சட்ட வைத்திய அதிகாரி தலைமையிலான தடயவியல் நிபுணர்கள் குழு, அந்த இடத்தில் பல அடுக்குகளில் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும், இது மயானத்திற்கு ஒத்துவராத வகையில் உள்ளதாகவும் தெரிவித்தனர் (Veerasingham 2014).

இந்த மரணங்கள் விடுதலைப் புலிகள் அல்லது இந்திய அமைதி காக்கும் படையினரால் ஏற்பட்டதாக முன்னாள் ராஜபக்ச அரசு பகிரங்கமாக கூறியது (US Country Report 2016). அதே சமயம், இலங்கையின் பிரதான தமிழ் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA), புதைகுழி பற்றிய சுயாதீனமான சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுத்தது, ஆனால் அது நடைபெறவில்லை (Veerasingham 2014).

ஆகஸ்ட் 2014 இல், இந்த பாரிய மனித புதைகுழிக்கு அருகில், கைவிடப்பட்ட கிணறு ஒன்றில் எலும்பு துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. தடயவியல் பரிசோதனை திட்டமிடப்பட்ட நிலையில், மனித உரிமை நிபுணர்கள், “அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி முறைகள் அர்த்தமுள்ள தடயவியல் பகுப்பாய்வை சாத்தியமற்றதாக்கியிருக்கலாம்” (US Country Report 2016) ஏனெனில் மாதிரிகளின் மாசுபாட்டின் காரணமாகவும், கண்டுபிடிப்பு

அறிவிக்கப்படுவதற்கு முன்பு சில உடல்கள் நிலத்தை நகர்த்தும் இயந்திரங்களால் துண்டு துண்டாக வெட்டப்பட்டதாலும் அது தொடர்பில் கவனம் செலுத்தினர் (Haviland 2014). அதிகமான உடல்களைக் கொண்ட மற்றொரு தளம் அருகில் கண்டுபிடிக்கப்படும் வரை இது தொடர்பான விசாரணை நிறுத்தப்பட்டது.

**மன்னார் (2018)**

2018 ஆம் ஆண்டு மே மாதம் மன்னார் நகரில் உள்ள கட்டுமானத் தளமொன்றில் மற்றுமொரு இடம் கண்டுபிடிக்கப்பட்டது. மன்னார் A14 நெடுஞ்சாலைக்கு அருகில் சதொச என அழைக்கப்படும் அரசாங்கத்திற்கு சொந்தமான மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக வேலை மேற்கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களால் 28/05/2018 அன்று மனித எச்சங்கள் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டன (Wijesinghe 2018).

அரச பாதுகாப்பு படையினரால் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்ட தமிழர்களின் எச்சங்கள் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை பிரதிநிதித்துவ படுத்திய சட்டத்தரணிகள் சந்தேகம் வெளியிட்டனர் (Wijesinghe 2018). வலிந்து காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் அப்போதைய தலைவர் சாலிய பீரிஸ் மாவட்டத்திலுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித்து அகழ்வுப் பணிகளை OMP உன்னிப்பாக அவதானித்து வருவதாக உறுதிப்படுத்தினார். காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் ஆதரவுடன், அகழ்வாராய்ச்சியில் 28 குழந்தைகளின் எலும்புக்கூடுகள் உட்பட 300 க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் அடங்கிய பாரிய மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது (OHCHR 2019). எச்சங்களின் கார்பன் மூலமான கால அளவை முறைக்கும் புலனாய்வாளர்களின் கருத்துக்களுக்குமிடையே ஏற்றத்தாழ்வு காணப்பட்டதை அடுத்து மன்னார் நீதவான் நீதிமன்றத்தால் 2019 இல் அகழ்வு நிறுத்தப்பட்டது. தளத்தில் இருந்து மீட்கப்பட்ட கலைப்பொருட்களின் அடிப்படையில், எச்சங்கள் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருக்காது என்று சிலர் கூறினர், ஆனால் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகள் (மீண்டும் Beta Analytics, Inc.) 1477-1719 (தாமஸ் 2019) இடையேயான காலப்பகுதியைச் சேர்ந்தது என கண்டறியப்பட்டது. மேலும், உறுதியான சான்றுகள் கிடைக்கும் வரை அகழ்வாராய்ச்சியை மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைப்பது என முடிவு செய்யப்பட்டது, ஆனால் கடந்த பெப்ரவரி 2022 வரை இது நீடித்து காணப்படுகின்றது (Journalists for Democracy in Sri Lanka 2022).

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய சட்டத்தரணிகள், பிரதான சட்ட வைத்திய அதிகாரி, வைத்தியர் சமிந்த ராஜபக்' விசாரணை நடவடிக்கைகளை தவறாக வழிநடத்தியதாக கூறி அவருக்கு எதிராக முறைப்பாடுகளை வழங்கியிருந்தமை, இந்த வழக்குக்கு மேலும் ஒரு சிக்கலாக அமைந்தது. இதற்கு பதிலளிக்கும் வகையில், மன்னார் நீதவான் 10/03/2020 அன்று வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்டவர்கள்

சார்பாக நீதிமன்றில் வாதாடுவதற்கு சட்டரீதியாக தகுதியற்றவர்கள் என உத்தரவிட்டார். இதனை எதிர்த்து பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பில் சட்டத்தரணிகள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனுவொன்றை தாக்கல் செய்தனர். மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவாக தீர்ப்பளித்து மீண்டும் அகழ்வாராய்ச்சியை ஆரம்பிக்குமாறு உத்தரவிடும்வரை மன்னார் மனித புதைகுழி நடவடிக்கைகளை பெப்ரவரி 2022 வரை இடைநிறுத்துவதற்கு இந்த மீளாய்வு பங்களித்தது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களின் சட்டத்தரணிகள் விசாரணை நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டுவதற்காக, மேற்கொண்ட தொடர்ச்சியான பிரச்சாரத்தின் பின்னர் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அவர்களது சட்டத்தரணிகள் விசாரணைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் என மன்னார் மேல் நீதிமன்றத்தின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி நடைபெறும் நாட்களில் 10 பேர் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படும், மற்றவர்கள் அந்த இடத்தில் இருந்து 30 மீட்டர் தொலைவில் இருக்க வேண்டும். ஊடகவியலாளர்கள் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 10 நிமிடங்களுக்கு அகழ்வாராய்ச்சி தளத்தில் தகவல்களை சேகரிக்க முடியும் (Journalists for Democracy in Sri Lanka 2022).

பாரிய புதைகுழி விசாரணைகளில் ஈடுபடும் குடும்பங்களின் உரிமைகளை கருத்தில் கொள்வதில் இது ஒரு மாற்றத்தை கொண்டு வந்திருந்தமை குறிப்பிடதக்கது. எவ்வாறாயினும், டிசம்பர் 2022 வரை, மன்னாரில் அகழ்வாராய்ச்சி மீண்டும் தொடங்கப்படவில்லை. கல்லறைக்கு அருகில் உள்ள கடைகளை இடிப்பதும் நகரத்திற்கு தண்ணீர் வழங்கும் குழாய்களை மூடுவதும் அவசியம் என்று உள்ளூர் பொலீசார் உறுதி செய்தனர். இது அகழ்வாராய்ச்சி செயல்முறையை மேலும் கடினமாக்குவதாய் அமையும் (The Leader 2022).

இந்த பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள ஏழு தளங்களும் 1994 முதல் இலங்கையில் ஆராயப்பட்டு அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட முக்கிய தளங்களாகும். இந்த விசாரணைகள் எதுவும் இந்த குற்றங்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் குற்றவாளிகளை துன்புறுத்துவதற்கு வழிவகுக்கவில்லை. கண்டெடுக்கப்பட்ட ஏராளமான உடல்களில், செம்மணி தளத்தில் இரண்டு மட்டுமே அடையாளம் காணப்பட்டன. இதனால், பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடும், நீதியும் கிடைக்கவில்லை. இன்னும் பல தளங்கள் ஆய்வு செய்யப்படாமல் பதிவு செய்யப்பட்டன.

இந்த தளங்களில் மிகக் குறைவான தகவல்கள் காணப்பட்டாலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்கள் அவை விசாரிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றன. பின்வரும் பிரிவு உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்கள், பாரிய மனித புதைகுழிகளை எவ்வாறு விசாரிக்க வேண்டும் என்ற கட்டமைப்பை முன்வைக்கிறது.

## 3. சட்ட கட்டமைப்பு

பாரிய மனித புதைகுழிகள் என்பது பல்வேறு ஒழுங்குமுறைகள் மற்றும் சட்ட கட்டமைப்புகளை உள்ளடக்கிய ஒரு சிக்கலான தளங்கள் ஆகும். ஒரு தளத்தின் கண்டுபிடிப்பு முதல் நினைவுகூருதல் வரை, ஒரு பாரிய மனித புதைகுழியை நிர்வகிப்பதில் பல படிகள் உள்ளன, ஒவ்வொன்றும் சட்ட விதிமுறைகளை உள்ளடக்கியது. பாரிய மனித புதைகுழிகளை நிர்வகிப்பதற்கான சர்வதேச சட்ட விதிமுறைகள் 2020 ஆம் ஆண்டில் வலிந்து காணாமல்போனவர்கள் தொடர்பான சர்வதேச ஆணையத்துடன் இணைந்து, பாரிய மனித புதைகுழி பாதுகாப்பு மற்றும் விசாரணைக்கான Bournemouth உடன்படிக்கையால் கோடிட்டுக் காட்டப்பட்டது. Bournemouth உடன்படிக்கை ஏழு வெவ்வேறு படிகளைக் கோடிட்டுக் காட்டுகிறது: கண்டறிதல் மற்றும் பாதுகாப்பான அறிக்கையிடல், தளத்தின் பாதுகாப்பு, விசாரணை, அடையாளம் காணல், மனித எச்சங்களைத் திரும்பப் பெறுதல், நீதி மற்றும் நினைவேந்தல் (Klinkner 4). இலங்கைச் சூழலில், ஒரு சில சட்டவாக்கக் கருவிகள் இந்த நடவடிக்கைகளில் பலவற்றை ஒரே நேரத்தில் உள்ளடக்குகின்றன. எனவே, இலங்கையின் சட்டச் சூழலுக்கு ஏற்ப இதை மாற்றியமைக்கும் போது, அதே சட்டங்கள் மீண்டும் மீண்டும் வருவதைத் தடுக்க ஐந்து படிகளின் பிரிவு மிகவும் பொருத்தமானது என கண்டறியப்பட்டது. இலங்கையில் பாரிய மனித புதைகுழி முகாமைத்துவத்திற்கான சட்ட கட்டமைப்பு பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது:

A. கண்டுபிடிப்பு
B. விசாரணை மற்றும் அடையாளம் காணல்
C. வழக்கு விசாரணை
D. குடும்பங்களின் உரிமைகள
E. நினைவேந்தல்

இந்த படிநிலைகள் பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, குடும்பங்களின் உரிமைகள் புதை குழி கண்டுபிடிக்கப்பட்ட தருணத்திலிருந்து விசாரணை செயல்முறை வரை கருத்தில் கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்படலாம். செயன்முறையை இலகுபடுத்துவதற்காக, ஒவ்வொரு படிநிலையும் முந்தையதை விட பின்வரும் அடிப்படையில் கருதப்படும். ஒவ்வொரு உட்பிரிவும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகள் குறித்து விவாதிப்பதற்கு முன்னர் பொருத்தமான உள்நாட்டு சட்டங்களை பரிசீலிக்கும். உள்நாட்டுச் சூழலில், குற்றவியல் நடைமுறைச் சட்டம், வலிந்து காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் (Establishment, Administration and Discharge of Functions) மற்றும் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் எண் சட்டம் (இனிமேல், OMP சட்டம் என குறிப்பிடப்படும்) போன்றன குறிப்பாக இங்கு பயனுள்ளதாக இருக்கும்.

OMP சட்டம் நீதி அமைச்சின் கீழ் இயங்குவதோடு வலிந்து காணாமல் ஆக்கப்படடவர்கள் மற்றும் பாரிய மனித புதைகுழிகள் தொடர்பான வேறுபட்ட சட்டங்களை ஒருங்கிணைக்கவும் உதவுகிறது.[11] இது நிறுவப்பட்டபோது, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவான சில சட்டதரணிகள் அதன் நம்பகத்தன்மை மற்றும் பாரிய புதைகுழி விசாரணைகளில் பாரபட்சமற்ற ஒரு செயல்பாட்டாளராக இருப்பதற்கான திறனை சந்தேகித்தனர், ஆனால் இவ் OMP சட்டம் இன்னும் ஒரு தகுதிவாய்ந்த அதிகாரமாகவே கருதப்பட்டு வருகிறது. எவ்வாறாயினும், 2019 இல் ஏற்பட்ட அரசாங்க மாற்றத்திலிருந்து OMP நம்பகத்தன்மையை இழந்துள்ளதாக பல இலங்கை எழுத்தாளர்கள் மற்றும் செயற்பாட்டளர்கள் குறிப்பிடுகின்றனர், இது அதன் தலைமை மாற்றத்திற்கும் கடுமையான வரவு செலவுத் திட்ட கழிவுகளுக்கும் வழிவகுத்தது (Fernando 2022).

சர்வதேச சட்டத்தில்[12] சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் பாரிய மனித புதைகுழி பற்றிய விசாரணைகளுக்கு பொருத்தமானவையாக உள்ளன. பாரிய மனித புதைகுழிகள் தொடர்பான சட்டப் பொறுப்புகளை அமைக்கும் பெரும்பாலான ஐ.நா உடன்படிக்கைகளில் இலங்கை கையொப்பமிட்டுள்ள நிலையில், அந்த உடன்படிக்கைகள் தேசிய சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமான உள்நாட்டு சட்டத்தில் பிணைக்கப்பட்டு காணப்படுகின்றன.[13] எனவே, சர்வதேச நீதிமன்றத்திற்கு அரசே பொறுப்புக்கூற வேண்டிய நிலையில், அதன் உடன்படிக்கை மற்றும் கடமைகளை மீறுவதாகக் கண்டறியப்பட்டால் அல்லது இதற்கு சமமான உள்நாட்டுச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை என்றால் நாட்டின் குடிமக்கள் இது போன்ற கோரிக்கையை, உள்நாட்டில், தங்கள் சொந்த அரசாங்கத்திற்கு எதிராக எழுப்ப முடியாது.

இது மனித உரிமைகள் மரபுகளை உள்நாட்டு அமைப்பில் படிப்படியாக ஒருங்கிணைக்க விளைகிறது. எடுத்துக்காட்டாக, இலங்கை 2016 இல் அனைத்து நபர்களையும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையை அங்கீகரித்து இருந்த போதிலும் 2018 இல் மட்டுமே உள்நாட்டில் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

---

11 காணாமல் போனோர் அலுவலகத்தின் வரலாறு, செயற்பாடுகள் மற்றும் வரையறைகள் பற்றி மேலும் அறிய, “காணாமல் போனோர் தொடர்பான இலங்கை அலுவலகம்: உண்மையும் நீதியும் இணைந்து: இசபெல்லா லஸ்ஸேவைப் (Isabelle Lassée)பார்க்கவும்.” செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச விமர்சனம் (2017), 99 எண் 2, 619-639. 2020 OMP ஆண்டறிக்கையையும் பார்க்கவும்.

12 சர்வதேச மனித உரிமைச் சட்டம் இதற்குப் பொருந்தும் ஆனால் சர்வதேச மனிதாபிமான சட்டம் (முக்கியமாக ஜெனீவா உடன்படிக்கைகள் மற்றும் சம்பிரதாய விதிகளை உள்ளடக்கியது) போர்க்காலத்தில் மட்டுமே பொருந்தும்.

13 எனவே, இலங்கை ஒரு இருமைவாத நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச சட்டத்தை அதன் உள்நாட்டு அமைப்பில் ஒருங்கிணைப்பதில். இரட்டைவாத நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தனது உடன்படிக்கை கடமைகளை மீறுவதாகக் கண்டறியப்பட்டால்சர்வதேச நீதிமன்றங்களுக்கு பொறுப்பேற்க வேண்டும், , அதற்கு இணையான உள்நாட்டு சட்டம் இல்லாவிட்டால், சர்வதேச உடன்படிக்கையின் அடிப்படையில் தங்கள் சொந்த அரசாங்கத்திற்கு எதிராக உரிமைகோர முடியாது. இது 2006 ஆம் ஆண்டில் வழக்கு மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. சிங்கராசா எதிராக சட்டமா அதிபர் வழக்கில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையை இலங்கை அங்கீகரித்திருந்த போதிலும், உள்நாட்டு ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் அதிலுள்ள உரிமைகளை நேரடியாகக் கோர முடியாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும், இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு குற்றங்கள் ஆகியவற்றிற்கு பொறுப்பான நபர்களை விசாரித்து தண்டிக்கும் அதிகார வரம்பைக் கொண்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை ஒரு கட்சியாக இல்லை. எனவே, இலங்கையின் நிலைமையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை வாக்களிப்பதைத் தவிர, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தால் இதை அணுக முடியாததாகவே உள்ளது. இது வெளிப்படையாகத் தோன்றினாலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களின் கீழ் பாரிய மனித புதை குழிகளை உருவாக்குவது சட்டவிரோதமானது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். உள்நாட்டுச் சட்டத்தில், 2005 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1899 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க புதைகுழிகள் மற்றும் மயானங்கள் கட்டளைச் சட்டம், அனைத்து அடக்கங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் (உறுப்புரை 15) மற்றும் “கல்லறைக்குள் உள்ள அனைத்து அடக்கங்களும் கண்ணியமான மற்றும் புனிதமான முறையில் நடத்தப்படுவதையும், கல்லறைகள் சரியான ஆழத்தில் இருப்பதையும்” முறையான அதிகாரி உறுதி செய்ய வேண்டும் என்று கூறுகிறது (பிரிவு 17(A). வழக்கமான சர்வதேச மனிதாபிமான சட்டத்தில் (இனிமேல், CIHL என குறிப்பிடப்படும்), மோதலில் ஈடுபடும் தரப்பினர் மனித எச்சங்களை அடக்கம் செய்வதற்கு முன்பு அனைத்து அடையாளம் காணும் தகவல்களையும் பதிவு செய்ய வேண்டும் மற்றும் கல்லறை இருப்பிடத்தைக் குறிக்க வேண்டும் (CIHL விதி 115). என்பதுடன் இறந்தவர்களின் கல்லறைகள் மதிக்கப்பட்டு, முறையாக பராமரிக்கப்பட வேண்டும் (CIHL விதி 115) என்பதையும் குறிப்பிட்டுள்ளது. எவ்வாறெனினும், இலங்கைச் சூழலில், பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்குவிதிகள் (ER) பாதுகாப்புப் படையினருக்கு, விசாரணையின்றி சடலங்களை அப்புறப்படுத்த அனுமதித்துள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் (US Country Report 1990).

2004 ஆம் ஆண்டு இலங்கையை சீரழித்து 35,000 இற்கும் அதிகமான உயிர்களை பலிவாங்கிய சுனாமி போன்ற இயற்கை பேரழிவுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் (Perera and Briggs 2008) விடயத்தில் மாத்திரமே சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக பாரிய புதைகுழிகள் அமைக்கப்படுகின்றன. இந்த கல்லறைகளை உருவாக்குவது பயிற்சி பெற்ற பணியாளர்களால் செய்யப்படுவதோடு ஒரு குறிப்பிட்ட செயல்முறையையும் பின்பற்ற வேண்டும். இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மொத்த 32 புதைகுழிகளில், ஆறு கல்லறைகள் சுனாமியின் விளைவாக உருவாக்கப்பட்டவை மேலும் பல புதைகுழிகள் சர்வதேச விதிமுறைகளுக்கு இணங்க உருவாக்கப்படவில்லை (Perera 2005). இவற்றின் விவரங்கள் இந்த அறிக்கையின் இணைப்பு-1 இல் சேர்க்கப்பட்டுள்ளன. பின்வரும் பிரிவு ஒரு பாரிய மனித புதைகுழியின், நிர்வாகத்தின் ஒவ்வொரு படிநிலைக்கும் குறிப்பிட்ட விதிமுறைகளை நிறுவுவதுடன், இந்த தளங்களின் பாதுகாப்பு மற்றும் விசாரணையின் மிகவும் செயல்திறன் மிக்க வடிவத்தைத் தொடங்குவதற்கு, தற்போதுள்ள சட்டங்கள் ஏன் பயன்படுத்தப்படவில்லை என்பதை மதிப்பிடுகிறது.

## A. கண்டுபிடிப்பு

சில பாரிய மனித புதைகுழிகள் தகவல் அளிப்பவர்கள் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படிருந்தாலும், சில தற்செயலாக பொதுமக்களால் கண்டுபிடிக்கப்படட்டுள்ளன (பெரும்பாலும் கட்டுமானப் பணியின் போது). கண்டுபிடிக்கப்பட்ட தருணத்திலிருந்து உத்தியோகபூர்வ விசாரணை தொடங்கும் வரை தூண்டப்படும் பொறுப்புகளை இந்தப் பிரிவு உள்ளடக்கியுள்ளது.

**உள்நாட்டு கட்டமைப்பு**

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டம் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் அறிக்கையிடுவதற்கான சட்ட ரீதியான கடப்பாட்டை கோடிட்டுக் காட்டுகிறது. பிரிவு 21 (B) இல், “வன்முறையால் ஏதேனும் திடீர் அல்லது இயற்கைக்கு மாறான மரணம் அல்லது சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகளில் ஏதேனும் மரணம், அல்லது அத்தகைய நபர் எவ்வாறு இறந்தார் என்பது தெரியாமலேயே மரணித்திருத்தல்” போன்ற சடலங்களை அறிந்த எந்தவொரு நபரும் இந்த சம்பவத்தை பின்வரும் அதிகாரிகளில் ஒருவரிடம் புகாரளிக்க சட்டப்பூர்வ கடமையைக் கொண்டுள்ளார்:

- அருகிலுள்ள நீதவான் நீதிமன்றம்
- அருகிலுள்ள காவல் நிலையத்தின் பொறுப்பாளர் (OIC).
- ஒரு அமைதி காக்கும் அதிகாரி
- அருகிலுள்ள கிராமத்தின் கிராம சேவை உத்தியோகத்தர் (கிராம அலுவலர்)

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட சடலத்தை பற்றி அவர்கள் அறிவிக்கவில்லை என்றால், அவ்வாறு செய்யாததற்கு நியாயமான காரணம் இருப்பதாக நிரூபிக்க வேண்டிய கடமை அவர்களுக்கு உள்ளது.

இந்த கடமை காவல்துறை அதிகாரிகளுக்கும் பொருந்தும். பிரிவு 22(b) மற்றும் (c) இன் படி, ஒரு நபரின் விவரிக்கப்படாத மற்றும் இயற்கைக்கு மாறான மரணம் தொடர்பான தகவல்களை வைத்திருக்கும் மற்றும் அல்லது “அத்தகைய நபர் எவ்வாறு இறந்தார் என்பது தெரியாமல் அவரின் இறந்த உடலை” கண்டறிந்தால், அத்தகைய தகவல்களை பின்வரும் அதிகாரிகளில் ஒருவருக்கு தெரிவிக்க வேண்டும்:

- அருகில் உள்ள நீதவான் நீதிமன்றம்
- அதிகார வரம்பைக் கொண்ட விசாரணையாளர்
- அவரது சொந்த மேலதிகாரி

உத்தியோகபூர்வமற்ற புதைகுழி இருப்பதை உள்ளூர் நீதவான் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியவுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகத்திற்கும் அறிவிக்கப்பட வேண்டும்.

பாரிய புதைகுழியின் இருப்பிடத்தை நேரடியாக காணாமல் போனோர் அலுவலகத்திற்குத் தெரிவிக்கும் தகவல் அளிப்பவர், சந்தேகிக்கப்படும் புதைகுழியின் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றத்தின் உத்தரவைக் கோரி பொருத்தமான பிராந்திய அதிகார வரம்பைக் கொண்ட உள்ளூர் நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் (OMP சட்டம், பிரிவு 12 (D). காணாமல் போனோர் சட்டத்தின் பிரிவு 13 (1) (K) (iii) இல் அடையாளம் காண முடியாத மற்றும் அடையாளம் காணக் கூடிய எச்சங்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து நீதவான் மற்றும் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்ளும் நிபுணர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்க காணாமல் போனோர் அலுவலகத்திற்கு அதிகாரம் உள்ளது என்று கூறுகிறது.

மனித புதைகுழியாக கண்டுபிடிக்கப்பட்டு, அடையாளம் காணப்பட்டவுடன், உத்தியோகபூர்வ விசாரணை தொடங்கும் வரை அந்த இடம் பாதுகாக்கப்பட வேண்டும். தளத்தின் பாதுகாப்பைப் பற்றி, 2005 இல் திருத்தப்பட்டபடி, 1899 ஆம் ஆண்டின் மயானங்கள் மற்றும் புதைகுழிகள் கட்டளை எண். 9 இன் பிரிவு 14 இல், ஒரு தளத்திலிருந்து சடலங்களை அகற்றுவதைத் தடைசெய்வதோடு, “எந்தவொரு அதிகாரத்தையும் மட்டுப்படுத்துவதற்கு எதுவும் எடுக்கப்படாது (...) குற்றவியல் சட்டத்தின் நோக்கங்களுக்காக பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட வேண்டும்.” தேவையான இடங்களில் புதைக்கப்பட்ட மனித எச்சங்கள் மீது அடுத்தடுத்த சோதனைகள் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளை சட்டம் வெளிப்படையாக முன்னறிவிப்பதால், இந்த சோதனைகள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு பாரிய மனித புதைகுழி இடங்களின் பாதுகாப்பை வலியுறுத்த இந்த விதி படிக்கப்படலாம். மேலும் விசாரணையை இலகுபடுத்துவதற்காக அடையாளம் தெரியாத நபர்களின் மனித எச்சங்களை எரியூட்டக் கூடாது.

1975 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டத்தில் எச்சங்கள் கண்டுபிடிக்கப்படும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பான ஏற்பாடுகளை குறிப்பிடுகின்றது. இச்சட்டத்தின் பிரிவு 29ன்படி, ஒரு தனிநபரின் மரணம் தொடர்பான தகவல்களை இறப்புப் பதிவாளருக்குத் தெரிவிக்க உறவினர்கள் இல்லாத பட்சத்தில், சடலத்தைக் கண்டுபிடிக்கும் நபர் “இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட, மரணம் தொடர்பான விவரங்களை உரிய பதிவாளரிடம் அளிக்க வேண்டும். மேலும், அந்தப் பதிவாளர் அழைத்தால், அவர் முன்னிலையில் இறப்புப் பதிவேட்டில் உரிய இடத்தில் கையொப்பமிட வேண்டும்.” அடையாளத்தை மதிப்பிடாமல் மனித எச்சங்கள் அகற்றப்படும் சூழலில், அத்தகைய எச்சங்கள், புதைக்கப்பட்ட இடத்தை இறப்பு பதிவாளர் பதிவு செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதா அல்லது அடையாளம் தெரியாத மனித எச்சங்களை அடக்கம் செய்யும் இடங்களைக் குறிக்க நாடு முழுவதும் தொடர்ந்து பயன்படுத்தப்படும் அடையாளம் காணும் முறை பயன்படுத்தப் படுகிறதா என்பது குறித்த தெளிவின்மை காணப்படுகின்றது.

நாட்டின் சில பகுதிகளில் உள்ள உள்ளூர் மக்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையே நம்பிக்கையின்மை காணப்படுவதால், மனித எச்சங்களைக் கண்டறிந்த சில குடிமக்கள் தங்கள் கண்டுபிடிப்பை உள்ளூர் அதிகாரிகளிடம் புகாரளிக்க விரும்புவதில்லை. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட விசாரணைகளில், 1994 இல் சூரியகந்தவிலும், 2014 இல் களுவாஞ்சிக்குடியிலும் (இன்னும் அகழ்வாராய்ச்சி நடைபெறாத) கண்டெடுக்கப்பட்ட புதைகுழிகள் மட்டுமே தனிப்பட்ட தகவலளிப்பவர்களால் தெரிவிக்கப்பட்டன. இதற்கு அறிக்கை செய்வதற்கான சட்டப்பூர்வ கடமைகள் பற்றிய அறிவு மக்களிடையே இல்லாமல் இருப்பதுவும் காரணமாக அமையலாம். மேலும், விசாரணைகள் தொடங்கப்பட்டபோதும், அதிகாரிகள் தளத்தை உடல் ரீதியாக பாதுகாக்க வேண்டிய அவசியத்தை அரிதாகவே மதித்துள்ளனர். சூரியகந்தவில், தளத்திற்கு பௌதீகத் தடைகள் இல்லாத காரணத்தினால், பயிற்சியற்ற குடிமக்களை அகழ்வாராய்ச்சியில் பங்குபெற அனுமதித்ததன் காரணமாக, சான்றுகள் ஓரளவு சேதமடைந்தன. யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்திலும், மாத்தளை பொது வைத்தியசாலைக்குக் கீழேயும் கண்டெடுக்கப்பட்ட புதைகுழிகள் தொடர்பில் விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்ததை அடுத்து நிர்மாணப்பணிகள் தொடர அனுமதிக்கப்பட்டது. இந்தத் தளங்களைப் பற்றிய உத்தியோகபூர்வ அக்கறையின்மை, கண்டுபிடிப்புகளைப் புகாரளிப்பதில் இருந்து மக்களை மறைமுகமாக ஊக்கம் இழக்கச் செய்யக் கூடும்.

**சர்வதேச கட்டமைப்பு**

இலங்கை 2016 ஆம் ஆண்டில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களிடமிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சமவாயத்தை அங்கீகரித்ததுடன், 2018 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயத்தின் தலைப்பிலான உள்நாட்டு சட்டத்தை 2018 மார்ச்சில் ஏற்றுக்கொண்டது. CED யின் பிரிவு 12 (1) இன் படி, வலிந்து காணாமலாக்கப்பட்டதைப் புகாரளிக்கும் குடிமக்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும், மேலும் இந்த உரிமை, பாரிய மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதைப் பாதுகாப்பாக புகாரளிக்கும் உரிமை வரை நீட்டிக்கப்படலாம் என்று Bournemouth உடன்படிக்கை கூறுகிறது. மேலும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து விடுவிப்பதும், மரணமடைந்திருந்தால், அவர்களை தோண்டி எடுத்து அடையாளம் கண்டு அவர்களின் எச்சங்களைத் திருப்பித் தருவதும் அரசின் கடமை என பிரிவு 15 வரையறுக்கிறது. இலங்கையில் பலவந்தமாக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, பாரிய புதைகுழியின் கண்டுபிடிப்பானது, முதலில், சடலங்களை தோண்டி அடையாளம் காணும் கடமையைத் தூண்டுகிறது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டமும் இறந்தவர்களைத் தேட வேண்டும் என வலியுறுத்தி உள்ளது: ஆயுதப்படைகளில் காயமடைந்தவர்கள் மற்றும் நோயுற்றவர்களின் நிலையை மேம்படுத்துவதற்கான ஜெனீவா உடன்படிக்கையின் (1) பிரிவு 15 இல் இரண்டு தனித்துவமான கடமைகள் வரையறுக்கப் பட்டுள்ளது: இறந்தவர்களைத் தேடுதல் மற்றும்

அவர்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பது என்பனவாகும். (2016 ஜெனீவா உடன்படிக்கையின் விளக்கவுரை (ஐ) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி).

பொதுமக்கள் ஒரு பாரிய புதைகுழி இடத்தைக் கண்டுபிடிக்கும் போது, மேலதிக உடன்படிக்கையின் பிரிவு 17 (2)இன் படி அதைப் பாதுகாப்பாக புகாரளிக்க அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். மேலும், இறந்தவர்களின் எச்சங்கள் குறித்த பிரிவு 34 இல், அடக்கம் செய்யப்படும் இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், "இறந்தவர்கள் அழிக்கப்படுவதைத் தடுக்க சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்" என்றும் கட்டளையிடுகிறது. ஒரு தளத்தில் இருந்து பெறப்பட்ட ஆதாரங்களின் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கு, ஒரு பாரிய மனித புதைகுழியானது, முதல் பதிலளிப்பவர்கள் உட்பட மூன்றாம் தரப்பினரால் சிதைக்கப்படாமல் இருப்பது முக்கியமாகும். எனவே, பாரிய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அவற்றை நிர்வகிப்பதற்கான முதல் படி, ஒரு விசாரணை அதிகாரப்பூர்வமாகத் தொடங்குவதற்கு முன்பு உள்ளூர் அதிகாரிகளுக்கு அதன் பாதுகாப்பான அறிக்கை மற்றும் தளத்தின் பௌதீக பாதுகாப்பை உறுதி செய்வதாகவும் இருக்க வேண்டும்.

இந்த சர்வதேச கட்டமைப்பை செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களை பல மட்டங்களில் காணலாம். முதலாவதாக, யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று பல அறிஞர்களும் வழக்கறிஞர்களும் அழைப்பு விடுத்தாலும், அவ்வாறு செய்ய அரசை கட்டாயப்படுத்தும் எந்த விதியும் இல்லை. இரண்டாவதாக, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களிடமிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையை இலங்கை 2016 ஆம் ஆண்டில் மட்டுமே அங்கீகரித்ததுடன் 2018 இல் அதை உள்நாட்டில் நடைமுறைப்படுத்தும் சட்டத்தை நிறைவேற்றியது.

கடந்த நான்கு ஆண்டுகளில், இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதற்கும் இந்த அறிக்கை எழுதப்படுவதற்கும் இடையில், பல முக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன: நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை அமுல்படுத்துவதற்கு வாய்ப்பில்லாத ஒரு அரசாங்கத்தை மீண்டும் தெரிவு செய்தல் (2019 இல்), தொற்றுநோய் (2020 இல் ஆரம்பம்), மற்றும் எதிர்ப்பு இயக்கங்கள் (2022 இல்) போன்றன 2022 கோடை காலப் பகுதியில் ஜனாதிபதியை வெளியேற்றுவதில் முடிவடைந்தன. சர்வதேச சட்டக் கருவிகளைப் பயன்படுத்தி பாரிய புதைகுழி இடங்களைப் பாதுகாப்பது தொடர்பாக அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக உரிமைகோரல்களை முன்வைக்க சிவில் சமூகத்தில் வளங்கள் இல்லாதது மூன்றாவது தடையாக இருக்கக்கூடும். இந்த சிரமங்கள் பாரிய மனித புதைகுழி மேலாண்மையின் அடுத்தடுத்த கட்டங்களுக்கும் பொருந்தும்.

## B. விசாரணை

ஒரு மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டவுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச கட்டமைப்புகள் விசாரணையைத் திறக்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது. ஆதாரங்களைக் கண்டறிந்து, பகுப்பாய்வு செய்வதற்கான நியாயமான முயற்சிகளுக்குப் பிறகு எந்த முடிவுகளும் கிடைக்காதபோது, இந்த கட்டமைப்புகள் ஒரு விசாரணையை மூட அனுமதிப்பது எப்போது என்பது தெளிவாகத் தெரியவில்லை. எவ்வாறாயினும், ஒரு விசாரணை குறைந்தது மூன்று கட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்: திட்டமிடல், தடயவியல் விசாரணை மற்றும் அடையாளம் காணும் முயற்சிகள். இந்த படிகள் ஒவ்வொன்றும் Bournemouth நெறிமுறையில் கவனமாக விவரிக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த அறிக்கை அதன் பரிந்துரைகளைப் பின்பற்றவும் பரிந்துரை செய்துள்ளது. இந்த அறிக்கையானது பிரதானமாக ஒழுங்குமுறை கட்டமைப்பில் கவனம் செலுத்தியுள்ளது, இது ஒரு விசாரணையைத் தொடங்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் குறிப்பிட்ட அதிகாரிகளை பொறுப்புக்கூற வைப்பதற்கு உதவும்.

**உள்நாட்டு கட்டமைப்பு**

இலங்கையில் பாரிய விசாரணையை நடத்தும் பொறுப்பு யாருக்கு உள்ளது என்பதை ஒழுங்குபடுத்துவதில் பல சட்டக் கருவிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன. இதில் மிகவும் பொருத்தமான கருவிகள் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சட்டம் என்பனவாகும்.

ஒரு பாரிய மனித புதைகுழி பற்றி அருகில் உள்ள நீதவானுக்கோ அல்லது உள்ளூர் விசாரணையாளருக்கோ புகாரளிக்கப்பட்டால், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி, மரணம் குறித்த விசாரணைகள் விசாரணையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும். பிரிவு 370(1) இன் படி, ஒருவர் இறந்து கிடந்தார் என்ற தகவலைப் பெறுபவர்கள், உடனடியாக கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்குச் சென்று, மரணத்திற்கான வெளிப்படையான காரணத்தைப் பற்றி அறிக்கை எழுத வேண்டும். இந்த அறிக்கை உள்ளூர் நீதவானுக்கு அனுப்பப்பட வேண்டும், அவர் குற்றம் நடந்ததாக ஏதேனும் சந்தேகம் இருந்தால், விசாரணை நடத்த வேண்டும் (பிரிவு 370(4)). மேலும் நீதவான், ஒரு நபர் இறந்து கிடந்தது தொடர்பான அனைத்து வழக்குகளையும் விசாரித்து, அது எப்படி நடந்தது என்பதை தாமே ஊகிக்காது, சாட்சியங்களை பதிவு செய்ய வேண்டும் (பிரிவு 9(iii)). அவர்கள் இறந்த உடலைப் பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும் (பிரிவு 373). பிந்தைய விசாரணை நோக்கத்திற்காக, நீதவான் உடலை தோண்டி எடுக்கலாம் (பிரிவு 373 (2)).

மேலும், 1895 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சான்று ஆவணச் சட்டத்தின்படி நபர் மற்றும் அவர்களின் வயதை அடையாளங்காணுமாறு கோர முடியும். 1999 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பிரிவு 38A இல், “ஒரு நபரின் வயது குறித்து நீதிமன்றம் ஒரு கருத்தை உருவாக்க வேண்டும்

என்றால், அத்தகைய நபரின் சாத்தியமான வயது குறித்து மருத்துவ பயிற்சியாளரால் வழங்கப்படும் சான்றிதழில் உள்ள அறிக்கை பொருத்தமானது". கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்களின் அடையாளத்தை சுருக்க இது பயன்படுத்தப்படலாம். இருப்பினும், கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களை அடையாளம் காணும் கடமை, ஆதாரங்களைச் சேமித்தல் மற்றும் தெளிவான காவலில் வைத்திருப்பதன் அவசியம் குறித்து சட்டத்தில் குறிப்பிட்ட குறைபாடு உள்ளது. உண்மையில், புலனாய்வுக் குழுக்கள், சடலங்களை தோண்டியெடுப்பதில் இருந்து அடையாளம் காணுதல் மற்றும் எச்சங்களை என்ன செய்ய வேண்டும் என்பதற்கான இறுதி முடிவு வரை, மனித எச்சங்களைக் கையாள்வதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட மற்றும் சீரான நடைமுறையைக் கொண்டிருக்க வேண்டும், 2020 ஆண்டு OMP அறிக்கையில், விசாரணைகள் "காவல் முறைகள் பாதுகாக்கப்படுவதையும், விசாரணைகளுக்கு பலதரப்பட்ட அணுகுமுறைகள் பின்பற்றப்படுவதையும் உறுதிப்படுத்த, ஒரே மாதிரியான மற்றும் நிலையான முறையில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன" என்பதற்கு உத்தரவாதம் அளிக்க நீதவான் நீதிமன்றங்களுக்கு வழிகாட்டுதலை வழங்குமாறு அரசாங்கத்தின் நீதித்துறை சேவைகளை கோரியது. (OMP 2020, 14). இந்த வழிகாட்டுதல் வெளியிடப்பட்டதா அல்லது அது செயல்படுத்தப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரகாரம், பாரிய புதைகுழிகள் அமைந்துள்ள இடம் பதிவாகும் பட்சத்தில், விசாரணையை ஆரம்பிக்கும் நீதவான் நீதிமன்றம், சாட்சிகள் அல்லது சாட்சியங்களை அழைப்பது மற்றும் தேவையான இடங்களில் விரிவான தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வது உள்ளிட்ட விசாரணையின் ஒரு பகுதியாக இருக்கும் தேவையான நடவடிக்கைகளை அமுல்படுத்த முடியும். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் இந்த ஏற்பாடுகள் காணாமல் போனோர் சட்டத்தின் பிரிவு 12 உடன் இணைந்து படிக்கப்பட வேண்டும், இது காணாமல் போனோர் அலுவலகத்திற்கு, அகழ்வு அல்லது சந்தேகத்திற்குரிய புதைகுழிகளில் தோண்டியெடுப்பதற்கு தேவையான அனுமதியை வழங்கும் உத்தரவுக்காக, பொருத்தமான நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க அதிகாரமளிக்கிறது. இந்த பிரிவு OMP க்கு "அத்தகைய அகழ்வாராய்ச்சி அல்லது பிற நடவடிக்கைகளில் ஒரு பார்வையாளராக செயல்பட உதவுகிறது. காணாமல் போனோர் அலுவலகச் சட்டத்தின் பிரிவு 12(E) அதன் ஆணையை அடைவதற்கு முகவர் நிலையங்கள் அல்லது அதிகாரிகளிடமிருந்து தேவையான எந்தவொரு உதவியையும் கோர அனுமதிக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மானுடவியலாளர்களை நியமிப்பதற்கும், தேவைப்பட்டால் இலங்கைக்கு வருவதற்கு சர்வதேச நிபுணர்களை நியமிப்பதற்கும் காணாமல் போனோர் அலுவலகம் நிதி உதவியை கோரலாம்.

அடையாளம் காண்பது தொடர்பாக, OMP ஆனது, அத்தகைய நபர்கள் காணாமல் போன சூழ்நிலைகள், அவர்களின் விதி (பிரிவு 2) மற்றும் "காணாமல் போனவர்கள் தொடர்பான தரவுகளை (...) ஒருங்கிணைக்கவும், இதன் கீழ் நிறுவப்பட்ட தரவுத்தளத்தில் உள்ள

அனைத்து தரவையும் மையப்படுத்தவும் கட்டாயப்படுத்தபட்டுள்ளது. சட்டம்" (பிரிவு 10(1) (E)). இவற்றை தொகுத்து நோக்கும் போது பாரிய மனித புதைகுழியில் காணப்படும் மனித எச்சங்கள் பட்டியலிடப்பட்டுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்ட நபருக்கு சொந்தமானதா என்பதை அடையாளம் காண்பது OMP இன் ஆணையின் ஒரு பகுதியாகும் என்பதை இந்தக் கட்டுரைகள் சுட்டிக்காட்டுகின்றன. பிரிவு 13 (1) (k) (iii) மேலும் அடையாளம் காண முடியாத மற்றும் அடையாளம் காணக்கூடிய எச்சங்களைக் கையாள்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்க OMPக்கு அதிகாரம் உள்ளது என்றும் குறிப்பிடுகிறது.

முன்னர் குறிப்பிட்டபடி, OMP மற்றும் உள்ளூர் நீதவான் அலுவலகம் போன்ற பிற தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு வழிமுறைகள் தொடர்பான சட்டத்தில் இடைவெளி இருப்பதாகத் தெரிகிறது. ஒரு விசாரணையின் திட்டமிடல் கட்டத்தில், இந்தச் செயல்கள் நடைமுறை ரீதியாக ஒத்திசைவானதாகவும், எளிதாகச் செயல்படுத்தக்கூடியதாகவும் இருப்பதற்கு, தகவல்தொடர்பு வழிகள், ஒருங்கிணைப்பு வழிமுறைகள், நீதவான் மற்றும் OMP ஆகியவற்றின் அந்தந்த வகிபங்குகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும். எவ்வாறெனினும், காணாமல் போனோர் அலுவலகச் சட்டம் இல்லாமலேயே, பாரிய புதைகுழியை விசாரணை செய்வதற்கு கட்டளையிடும் ஏற்பாடுகள் இலங்கைச் சட்டங்களில் உள்ளன.

இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய உரிமைகளைப் பயன்படுத்தி அரசு முழுமையான விசாரணையை நடத்துவதை உறுதி செய்ய முடியும். எடுத்துக்காட்டாக, வாழ்வதற்கான உரிமை மற்றும் சித்திரவதையில் இருந்து விடுபடுவதற்கான உரிமை மற்றும் நபரின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பிற்கான உரிமை என்பற்றை குறிப்பிடலாம் (அரசியலமைப்பின் பிரிவு 11): இந்த உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பவராக, இந்த உரிமை மீறல்களை விசாரிக்கும் கடமை அரசுக்கு காணப்படுகிறது. நியாயமான விசாரணை மற்றும் நீதித்துறை உத்தரவாதங்களுக்கான உரிமை (பிரிவு 13.2) ஆகியன பயனுள்ள விசாரணையை உறுதிப்படுத்த வேண்டும்.

**சர்வதேச கட்டமைப்பு**

பாரிய புதைகுழிகள் கண்டுபிடிப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தும் மிக முக்கியமான சட்டம், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களிடமிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயத்தில் (CED) தேடுதல் மற்றும் விசாரணை செய்வதற்கான அரசின் கடமையாக இருக்கலாம். இது வழிமுறைகளை பின்பற்றும் கடமையே அன்றி, அதன் பெறுபேற்றை உருவாக்கும் கடமை அல்ல (Klinkner 2020), அதாவது அரசு ஒரு தீவிர விசாரணையைத் தொடங்கவும், உண்மையைத் தேடுவதில் நியாயமான வழிமுறைகளை அணிதிரட்டவும் கடமைப்பட்டுள்ளன. ஆனால் இவ் விசாரணைகள் முடிவில்லாததாக இருந்தால், இந்த விசாரணைகளின் நேர்மறையான முடிவுகளை நிறுவ அவர்கள் கடமைப்பட்டிருக்க

மாட்டார்கள் என குறிப்பிடுகிறது. பாரிய புதைகுழி விசாரணையுடன் தொடர்புடைய மேலதிக ஏற்பாடுகள் CED இல் உள்ளன:

- வழிகாட்டும் கோட்பாடு 7: காணாமல் போனவர்களின் தலைவிதி மற்றும்/அல்லது இருப்பிடம் கண்டறியப்படும் வரை, தேடுதல் ஒரு தொடர்ச்சியான கடமையாகும்.
- உறுப்புரை 12(2): "பலவந்தமாக காணாமல் போனதாக நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கும் வரை, அதிகாரிகள் விசாரிக்க வேண்டும்".
- பிரிவு 12(4): "விசாரணையை நடத்துவதற்கு இடையூறாக இருக்கும் செயல்களைத் தடுக்கவும் அனுமதிக்கவும் உறுப்பு நாடுகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்." இந்த விசாரணையானது சுயாதீனமானதாகவும், போதுமானதாகவும், உண்மைகளைத் தீர்மானிப்பதற்கும் பொறுப்பானவர்களை[14] அடையாளம் காணக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.
- உறுப்புரை 24(2): "பலவந்தமாக காணாமல் போனதன் சூழ்நிலைகள், விசாரணையின் முன்னேற்றம் மற்றும் முடிவுகள் மற்றும் காணாமல் போன நபரின் தலைவிதி தொடர்பான உண்மையை அறிய பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது. இது தொடர்பாக ஒவ்வொரு அரசும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பிரிவு 24(3) "ஒவ்வொரு அரசும் காணாமல் போனவர்களைத் தேடுவதற்கும், கண்டுபிடித்து விடுவிப்பதற்கும், மரணம் ஏற்பட்டால், அவர்களின் எச்சங்களைக் கண்டுபிடித்து, மரியாதை செய்வதற்கும், திருப்பித் தருவதற்கும் உரிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்."

## C. வழக்கு விசாரணை

### உள்நாட்டு கட்டமைப்பு

பாரிய புதைகுழியை உருவாக்கிய சம்பவம் தொடர்பான விரிவான தகவல்களை விசாரணைகள் வழங்கும் போது, வழக்குத் தொடரப்பட வேண்டும். இது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 9 ஆல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது, இது ஒவ்வொரு நீதவான் நீதிமன்றமும் "அதன் உள்ளூர் அதிகார வரம்பிற்குள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செய்யப்பட்ட குற்றங்களுக்கான அனைத்து வழக்குகளையும் சுருக்கமாக விசாரிக்கவும், தீர்மானிக்கவும், தீர்க்கவும் வேண்டும்" என்று கூறுகிறது எனினும், கொல்லப்பட்டவர்களின் கொலையில் இருந்து தனி குற்றச்சாட்டாக, பாரிய மனித புதைகுழியை உருவாக்கும் குற்றத்திற்கு எந்த வகையான தண்டனை பொருத்தமானது என்பது குறித்த விவரங்கள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் இல்லை.

[14] வழக்கு குகலா ̔ விலி மற்றும் பிறர் எதிராக ஜார்ஜியா, தீர்ப்பு, ECtHR விண்ணப்ப எண்கள் 8938∴07 மற்றும் 41891∴07 (2 ஏப்ரல் 2020) பந்தி 129 மூலம் தீர்மானிக்கப்பட்டது)

குற்றவாளிகளை நிறுவுவதற்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டாலும், மாதிரிகளின் ஆதார சான்றுகள் கவனமாக பாதுகாக்கப்பட வேண்டும், ஏனெனில் அத்தகைய மாதிரிகள் காணாமல் போன நபருக்கு சொந்தமானதா என்பதையும், அந்த நபர் இறப்பதற்கு முன்பு சித்திரவதை அல்லது பிற குற்றங்களுக்கு உட்பட்டாரா என்பதையும் துல்லியமாக உறுதிப்படுத்த இயலாமைக்கு அது வழிவகுக்கும்.

மற்றொரு சட்டமன்ற இடைவெளி என்னவென்றால், தடயவியல் பகுப்பாய்வை நிர்வகிக்கும் குறிப்பிட்ட சட்டம் எதுவும் இல்லை. 2017 இல் (The Colombo Post 2017) முன்மொழியப்பட்ட மரண விசாரணைகள் தொடர்பான உத்தேச சட்டம் தொடர்பான கொள்கை மற்றும் சட்டக் கட்டமைப்பு இருந்தது, ஆனால் இந்த கட்டமைப்பை செயல்படுத்துவது குறித்து வெளிப்படையான எந்த தகவலும் இல்லை. இது செயல்படுத்தப்பட்டால், OMP இன் வேலையை பாதிக்கும் சவால்களை தீர்க்க அது உதவும்.

**சர்வதேச கட்டமைப்பு**

அறிஞர்கள் Caroline Fournet மற்றும் Nicole Siller ஆகியோர் “சடலங்களை அநாகரீகமாக அப்புறப்படுத்துவது” ஒரு சர்வதேச குற்றமாக இருக்கலாம் என்று வாதிடுகின்றனர் (Fournet and Siller 2015), தற்போதைய சர்வதேச சட்டம் கல்லறையை உருவாக்குவதை விட ஒரு பாரிய புதைகுழிக்கு வழிவகுத்த நடவடிக்கைகளை அங்கீகரிக்கிறது. சித்திரவதை மற்றும் பலவந்தமாக காணாமல் போதல் ஆகியவை உடன்படிக்கையால் தடை செய்யப்பட்டுள்ளன, மேலும் துஃபிரயோகங்கள் நிகழும் இடங்களில் பயனுள்ள தண்டனைகளை வழங்க உள்நாட்டு சட்டத்தை இயற்ற வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. இது ஜெனீவா உடன்படிக்கை (I) உறுப்புரை 49 இல் துல்லியமாக நிறுவப்பட்டு மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஜெனீவா உடன்படிக்கை (II) உறுப்புரை 50 ஜெனீவா உடன்படிக்கை (III) உறுப்புரை 129 ஜெனீவா உடன்படிக்கை (ஐஏ) உறுப்புரை 146 சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை உறுப்புரைகள் 2 மற்றும் 4 CED பிரிவு 6 மற்றும் இனப்படுகொலை தொடர்பான ICCPR பிரிவு 6. மேலும் குற்றம் சாட்டப்பட்டவர்களை தீவிரமாகத் தேடி அவர்களை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனும் ஜெனீவா உடன்படிக்கை (GC (I) பிரிவு 49 GC (II) உறுப்புரை 50 GC (III)பிரிவு 129 GC (IV) பிரிவு 146) போன்றவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

CED-வழிகாட்டும் கோட்பாடுகள் “காணாமல் போன நபரைத் தேடுவதும் காணாமல் போனதற்குப் பொறுப்பான நபர்களின் குற்றவியல் விசாரணையும் பரஸ்பரம் வலுவூட்டுவதாக இருக்க வேண்டும்” (கொள்கை 13(1)) என்று குறிப்பிடுகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில், பாரிய புதைகுழிகளுடன் தொடர்புடைய நிகழ்வுகளில் அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் ஈடுபடுவது வழக்கு விசாரணைகள் மற்றும் பொது பொறுப்புக்கூறலுக்கு இடையூறாக உள்ளது. சர்வதேச சட்டத்தின் பாடங்கள் பொதுவாக அரசை சார்ந்து இருப்பதால்,

இந்த நலன்களின் முரண்பாடு நிச்சயமாக உரிமைகோரல்களைக் கொண்டு வருவதைத் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக ஒரு தேசத்துக்குள் உள்நாட்டுப் போரின் பின்னணியில், சர்வதேச நீதிமன்றத்தின் முன் ஒரு அரசு தனக்கு எதிராக ஒரு கோரிக்கையை முன்வைப்பதை கற்பனை செய்வது கடினம். கோட்பாட்டு ரீதியாக இலங்கைக்கு எதிராக ஏனைய அரசுகள் அத்தகைய கோரிக்கையை முன்வைக்க முடியும் என்றாலும், அதற்கான போதிய ஊக்குவிப்புக்கள் வழங்கப்படவில்லை.

## D. குடும்பங்களின் உரிமைகள

மனித எச்சங்களைக் கையாள்வது, விசாரணையின் போது மற்றும் அதற்குப் பிறகு குடும்பங்களுடன் தொடர்புகொள்வதை எந்த சட்டங்கள் ஒழுங்குபடுத்துகின்றன என்பதை இந்தப் பிரிவு உள்ளடக்குகிறது.

**உள்நாட்டு கட்டமைப்பு**

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் காணாமலாக்கப்பட்டவர்கள் எந்தச் சூழ்நிலையில் காணாமல் போனார்கள், அவர்களின் தலைவிதி மற்றும் இருப்பிடத்தை அறிந்துகொள்ள உரித்துடையவர்கள் என்பதை காணாமல் போனோர் அலுவலகச் சட்டம் ஏற்றுக் கொள்கிறது. காணாமல் போனவர்களின் குடும்பங்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதே OMP இன் முக்கிய ஆணைகளில் ஒன்றாகும். விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும், தோண்டும் பணியை அவதானிப்பதற்கும் குடும்பத்தினர் அடிக்கடி பிரச்சாரம் செய்தனர். மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளை குடும்ப உறுப்பினர்கள் பார்வையிடுவதற்கு வவுனியா மேல் நீதிமன்றம் 2022 பெப்ரவரியில் வழங்கிய தீர்ப்பு இதற்கு ஒரு முக்கியமான முன்னுதாரணமாக அமைந்துள்ளது. சில சமயங்களில் ஒரு தளத்தின் விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கும் முக்கிய செயற்பாட்டாளராக இருக்கும் குடும்பங்களின் முகவரை இது அடையாளம் கண்டுகொள்கிறது.

OMP இன் ஆணை, காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு “தீர்வுக்கான வழிகளை” உறுதி செய்வதை உள்ளடக்கியதும் பங்கேற்றல் தொடர்பில் பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்களால் கோரப்பட்டால், அத்தகைய பங்கேற்பின் பாதுகாப்பை உள்ளடக்கியதுமாக காணப்படுகிறது.

காணாமல் போனோர் சட்டத்தின் பின்வரும் பிரிவுகள் பொருத்தமானவை மற்றும் அதனுடன் இணைந்து, மனித எச்சங்களை குடும்பங்களுக்கு பாதுகாப்பாக திருப்பி அனுப்புவதை உறுதிப்படுத்துகின்றன:

- முன்னுரை: “காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அவ்வாறு காணா-மலாக்கப்பட்டவர்களின் சூழ்நிலையையும், காணாமலாக்கப்பட்டவர்களின்

தலைவிதி மற்றும் இருப்பிடத்தையும் அறிந்து கொள்ள உரித்துடையவர்க-ளாவர்."

- பிரிவு 2 (D): "காணாமல் போனவர்கள் அல்லது அவர்களின் உறவினர்கள் எந்த தீர்வைப் பெற முடியும் என்பதை காணாமல் போனோர் அலுவலகம் குறிப்பிட வேண்டும்."
- பிரிவு 13 (1) (A) (ii): "ஒரு விசாரணையின் முடிவில், புகார் தொடர்பான நபர் காணாமல் போனவர் அல்லது இறந்துவிட்டார் என்று காணாமல் போனோர் அலுவலகம் முடிவு செய்தால், அது காணாமல் போன நபரின் உறவினருக்கு ஒரு அறிக்கையாக வழங்கப்பட வேண்டும்.
- பிரிவு 13(1)(d): விசாரணையின் முடிவில் காணாமல் போனோர் அலுவலகம் ஜ...ஸ
- "(1) காணாமல் போன நபர் எங்கு இறந்தார் அல்லது அவரது இருப்பிடம் தெரியவில்லை என்பது பற்றி காணாமல் போன நபர் மற்றும் ஏனைய புகார்தாரரின் உறவினர்களுக்கு, அத்தகைய நபர் காணாமல் போன சூழ்நிலை மற்றும் அவரது தலைவிதி குறித்து தெரிவிக்க வேண்டும்."
- "(ii) காணாமல் போனவரின் இருப்பிடம் அறியப்படும் இடங்களில் ஜ...ஸ காணாமல் போன நபரின் உறவினர்களுக்கு அத்தகைய நபர் காணாமல் போன சூழ்நிலையைத் தெரியப்படுத்த வேண்டும்."

மேலும், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 14 A (1) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைக்குள், பரந்தளவில் கருத்தாக்கம் செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு அவர்களின் அன்புக்குரியவர்களின் தலைவிதியை அறியும் உரிமைக்குள் கருதப்படலாம். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அவசரக் கோரிக்கைகளுக்கான சிறப்பு ஏற்பாடும் உள்ளது, இதன் மூலம், குடிமகன் ஒருவரின் வாழ்க்கை மற்றும் சுதந்திரம் தொடர்பான சூழ்நிலையைப் பற்றி விசாரித்தால், அவர்கள் 48 மணி நேரத்திற்குள் பதிலைப் பெற வேண்டும்.

மரணப் பதிவுச் சட்டத்தின் விசேட ஏற்பாடுகளின் பிரகாரம், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் காணாமல் போனது தொடர்பான சான்றிதழை அல்லது இறப்புச் சான்றிதழை அல்லது இரண்டையும் பெற்றுக்கொள்ளலாம். தற்போது, பாரிய புதைகுழிகளில் பலியானவர்களின் உடல்கள் அடையாளம் காணப்படாததால், பெரும்பாலான குடும்பங்கள் மனித எச்சங்களை பாதுகாப்பாக திரும்பப் பெறுவதற்கான இந்த சட்டங்களால் பயனடையவில்லை. அடையாளம் காணப்பட்ட சில உடல்களில் (செம்மணி பாரிய மனித புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட 15 உடல்களில் 2 உடல்கள் போன்றவை), குடும்பங்கள் எச்சங்களைப் பெற்று முறையான அடக்கம் செய்ய முடிந்ததா என்பது பகிரங்கமாகத்

தெரியவில்லை. OMP ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர், சில குடும்பங்கள் ஜனாதிபதி விசாரணைகள் மற்றும் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுக்கள் ஊடாக தமது காணாமல் போன உறவுகளுக்கான மரணச் சான்றிதழுக்காக விண்ணப்பிக்குமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தன என்பதும் கவனத்தில்கொள்ள வேண்டிய விடயமாகும் (Brito Fernando 2022).

**சர்வதேச கட்டமைப்பு**

மனித எச்சங்களை மீட்பது தொடர்பாக, ஊநுனு யின் பிரிவு 24 (3) மனித எச்சங்களை சேகரித்தல், சேமித்தல் மற்றும் அடையாளம் காண்பது உட்பட புதைகுழி தொடர்பான இடங்களை அகழ்வாராய்ச்சி செய்வதற்கு தேவையான வளங்களை ஒதுக்குவதற்கான கடமையை மீண்டும் வலியுறுத்துகிறது. மேலும், காணாமலாக்கப்பட்டோரின் மனித எச்சங்களை, உயிர் பிழைத்த குடும்ப உறுப்பினர்களிடம் கையளிக்கவும், இறப்புச் சான்றிதழை வழங்குவது உட்பட இறந்த நபர் குறித்த ஆவணத் தகவல்களை வழங்கவும் கடமைப்பட்டுள்ளது. தேடுதல் மற்றும் திருப்பி அனுப்பும் முயற்சிகளில் அரசுகள் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்க வேண்டும் என்று ஊநுனு யின் பிரிவு 15 கோருகிறது.

வழமையான சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் விதி 114 இல், “மோதலில் ஈடுபடும் தரப்பினர், அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் வேண்டுகோளின் பேரில் அல்லது அவர்களின் நெருங்கிய உறவினர்களின் வேண்டுகோளின் பேரில் இறந்தவர்களின் எச்சங்களை திருப்பி அனுப்புவதற்கு உதவ வேண்டும் மற்றும் அவர்களின் தனிப்பட்ட விளைவுகளை அவர்களிடமே திருப்பித் தர வேண்டும். எவ்வாறாயினும், இந்த கடமைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான உத்தியோகபூர்வ பொறிமுறை எதுவும் இல்லை.

## E. நினைவேந்தல்

ஒரு குறித்த தளத்தின் நினைவேந்தல் பற்றிய விபரங்கள் அதனுடன் சம்பந்தப்பட்ட சமூகங்களுடன் இணைந்து தீர்மானிக்கப்படல் வேண்டும். உள்நாட்டு அல்லது சர்வதேச அளவில் பாரிய மனித புதைகுழிகளை நினைவுகூருவதை கட்டாயப்படுத்துவதற்கு எந்த விதிமுறைகளும் இல்லை எவ்வாறாயினும், குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் உடலை மீண்டும் புதைக்கும் உரிமையை தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்க்கையின் பாதுகாப்பிற்குள் கருதலாம். 2018 ஆம் ஆண்டில் நினைவுகூரலுக்கான அதன் அவசர பரிந்துரையில், அகழ்வாராய்ச்சிக்குப் பிறகு, பாரிய மனித புதைகுழிகள் நினைவு இடங்களாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று OMP பரிந்துரைத்தது (OMP இடைக்கால அறிக்கை 2018, 17). மேலும், OMP க்கு “காணாமல் போனவர்களின் உறவினர்களின் தேவைகளை நிறைவேற்ற பொது ஆதரவை உருவாக்குதல்” மற்றும் நினைவேந்தல்கள், இழப்பீடுகள், திரும்ப திரும்ப ஒரே விடயத்தை செய்யாதிருத்தல் மற்றும் சட்ட சீர்திருத்தம் (OMP ஆண்டு அறிக்கை 2020) பற்றிய பரிந்துரைகளை வழங்குவதற்கான ஆணை

உள்ளது. பொதுமக்களின் ஆதரவை உருவாக்குவது என்பது அனைவரையும் உள்ளடக்கிய நினைவகத்தை உருவாக்கல், கல்வி மற்றும் விழிப்புணர்வை அதிகரிப்பது ஆகியவற்றை உள்ளடக்கி காணப்படுகிறது.

சர்வதேச அளவில், ஐக்கிய நாடுகளின் Joinet-Orentlicher கோட்பாடுகள் தண்டனையின்மையை எதிர்த்துப் போராடுவதற்கு, நிகழ்வுகளின் கூட்டு நினைவகத்தை அரசுக்கள் பாதுகாக்க வேண்டும் (கொள்கை 3). முன்னர் குறிப்பிட்டபடி, இறந்தவர்களை அகற்றுவது குறித்த வழக்கமான சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் விதி 115 கல்லறைகள் மதிக்கப்பட வேண்டும் மற்றும் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இது ஒரு பெரிய நினைவு குறிக்கோளுக்குள் விளக்கப்படலாம்.

நினைவேந்தலைக் குறிப்பிட்டு, இந்த அறிக்கைக்காக நேர்காணல் செய்யப்பட்ட பல ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் பின்வரும் வழிகாட்டுதல்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர்:

- அகழ்வாராய்ச்சிக்கு முன்னர் உள்ளூர் சமூகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள், அவர்களின் பாதுகாப்பையும் விசாரணைக்கான ஆதரவையும் உறுதிப்படுத்தவும், விரும்பினால் விசாரணையில் பங்கேற்கவும் அவர்களைச் சேர்க்கவும். அரசாங்க பாதுகாப்புப் படைகளின் விசாரணை பாதுகாப்பின்மை உணர்வை உருவாக்கக்கூடும் (Kabir 2022). அகழாய்வு, சமூகங்களையும் அவர்களின் போராட்டங்களையும் எவ்வாறு பாதிக்கும் என்பதைப் பற்றி விமர்சன ரீதியாக சிந்திக்க வேண்டும் (Kodikara 2022)
- பாரிய புதைகுழி தளங்களை நினைவுகூருவதில், மூன்று பரிமாணங்கள் சமநிலைப்படுத்தப்பட வேண்டும்: தளங்களின் ஆன்மீக அம்சம் மதிக்கப்பட வேண்டும், சட்ட முக்கியத்துவம் (ஒரு குற்றத்தின் சாத்தியமான காட்சியாக), மற்றும் அரசியல் முக்கியத்துவம் (மீண்டும் நடக்கக் கூடாத ஒன்றின் பிரதிநிதித்துவமாக). தளங்களும் பொது மக்களுக்கு அணுகக்கூடியதாக இருக்க வேண்டும் (Ruki Fernando 2022).
- கல்லறைகளை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் கட்டப்பட்டிருந்தால், அந்த இடங்கள் சமூகத்திற்கான செயல்பாடுகளையும் வழங்க வேண்டும். நினைவுச்சின்னங்கள் அல்லது தகடுகள் முக்கியமானவை என்பதுடன் அவை குறைந்தது இரண்டு நோக்கங்களை பூர்த்தி செய்கின்றன: குடும்பங்கள் துக்கம் அனுசரிக்க ஒரு பொதுவான கல்லறை தளமாகவும், மேலும் இதேபோன்ற அட்டூழியங்கள் மீண்டும் நிகழாமல் தீவிரமாகத் தடுக்க ஒரு நினைவூட்டலாகவும் செயல்படலாம்.

எவ்வாறாயினும், இலங்கையில் ஏற்கனவே பல நினைவுச்சின்னங்கள் உள்ளன, அவை சில நேரங்களில் ஒரு கதையை மற்றொன்றுக்கு வலுப்படுத்த மட்டுமே உதவுகின்றன. எனவே பாரிய புதைகுழிகள் செயலூக்கமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நினைவேந்தல்

இடங்களாக மாற வேண்டும் (Brito Fernando 2022). இது சமூகத்தால் ஆரம்பிக்கப்பட்ட நினைவேந்தல் நடைமுறைகளுக்கு இடமளிக்கவும் வளங்களை வழங்கவும் ஒரு பயனுள்ள முதல் படியாக இருக்கலாம்.

நினைவேந்தல் தொடர்பாக குறிப்பிட்ட சட்டங்கள் எதுவும் இல்லை என்றாலும், பிற உரிமைகள் இதற்கு பொருத்தமானதாக இருக்கலாம் மற்றும் இந்தத் தளங்களை நினைவுகூரும் போது குடும்பங்கள் மற்றும் சமூகங்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தலாம். இந்த உரிமைகளில் சில:

- மத நம்பிக்கை மற்றும் சுதந்திரத்திற்கான உரிமை (இலங்கை அரசியலமைப்பு உறுப்புரை 10)
- ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை (இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை - தனிப்பட்ட வாழ்க்கைக்கான உரிமை[15]

எவ்வாறாயினும், நினைவேந்தலுக்கு இணையாக, சமூகங்களின் சமூக-பொருளாதார தேவைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். நல்லிணக்கத்திற்கான அடித்தளத்தை நிறுவுவதற்கு நினைவேந்தல்கள் உதவ முடியும் என்றாலும், யுத்தத்தின் விளைவுகளாலும், பொதுவாழ்க்கையின் தொடர்ச்சியான இராணுவமயமாக்கலினாலும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சமூகங்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றன. நினைவேந்தலுக்கு ஒதுக்கப்படும் நிதி உள்ளூர் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும். இந்த சமூக-பொருளாதார பிரச்சினைகளை நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு சமூக பயன்பாட்டிற்கும் நினைவுச்சின்னங்கள் உதவக்கூடும் என்று எழுத்தாளரும் செயற்பாட்டாளருமான தியாகி ருவன்பத்திரன பரிந்துரைத்துள்ளார். நினைவுச்சின்னங்களாகவும் சமூகத்தின் உடனடி தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் கட்டப்பட்ட நேபாளத்தின் நீர்-பம்புகளின் உதாரணத்தை இவர் குறிப்பிட்டுள்ளார் (Ruwanpathirana 2016, 5).

[15] அந்தரங்க உரிமை இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்படவில்லை., ஆனால் அரசியலமைப்பு விளக்கம் மற்றும் வழக்கு சட்டம் மூலம் பாதுகாக்கப்படுகிறது. மேலும் தகவலுக்கு, “இலங்கையில் தனியுரிமைக்கான உரிமை,” செப்டம்பர் 11-13 இல் கொள்கை மாற்றுகளுக்கான மையத்தைப் பார்க்கவும்

#### 4. கலந்துரையாடல் மற்றும் சிறந்த நடைமுறைகள்

ஒரு பாரிய மனித புதைகுழியின் கண்டுபிடிப்பு மற்றும் அதைத் தொடர்ந்து தோண்டி எடுப்பது போன்றன ஒரு சமூகத்திற்கு ஒரு கூட்டு தருணமாக அமைகிறது, இதன் மூலம் பல கடினமான கேள்விகள் பொது வெளியில் கேட்கப்படுகின்றன. ஒரு பாரிய மனித புதைகுழிக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் பற்றிய வரலாற்று விசாரணைகள் பெரும்பாலும் தற்போதைய அரசியல் வாதங்களுக்கான போராட்ட தளமாக மாறுகின்றன. இந்த தளங்கள் மனித எச்சங்களைக் கொண்ட புனித இடங்களாகவும் சாத்தியமான சட்ட ஆதாரங்களாகவும் சிக்கலான நிலைகளைப் பெறுகின்றன. இலங்கை வரலாற்றிலும், அரசியலிலும் அகழ்வுப் பணிகளின் செயற்பாடுகளையும், அந்த இடங்களையும் சூழலுக்கு ஏற்றவாறு ஆராய்வதற்காக, பாரிய புதைகுழியொன்றை தோண்டி எடுக்கும் போது என்ன ஆபத்து உள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டியது இன்றியமையாததாகும்.

அகழ்வாராய்ச்சிகள் பெரும்பாலும் புதிய கேள்விகள் மற்றும் மோதல்களுக்கு வழிவகுக்கின்றன, மேலும் பல்வேறு தேவைகள் மற்றும் நலன்களை இதன் போது வழிநடத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, வழக்குகளை நோக்கிய பாரிய மனித புதைகுழிகளின் விசாரணைகள், சில நேரங்களில் இறந்தவர்களை மீண்டும் அடக்கம் செய்வதற்கான குடும்பங்களின் தேவைகளுடன் முரண்படக்கூடும். அறிஞர்களான Stover மற்றும் Shigekane ஆகியோர் போர்க்குற்ற விசாரணைகளுக்கு, மனித எச்சங்களை ஆதாரமாகக் கருதுவதன் மூலம், குடும்பங்களின் தேவைகளை எவ்வாறு புறக்கணிக்க முடியும் என்பதை விவரித்துள்ளனர் (Stover and Shigekane 2002). எடுத்துக்காட்டாக, கொசோவோவில், ஸ்ரெப்ரெனிகா படுகொலைக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பாரிய மனித புதைகுழி விடயத்தில், வழக்கறிஞர்கள் பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தில் கவனம் செலுத்தவில்லை, மாறாக அவர்கள் குடிமக்களா, அவர்கள் கொல்லப்பட்ட விதம், பரவலான மரணங்கள் மற்றும் அமைப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு போர்க்குற்றம் நிகழ்ந்திருப்பதைக் குறிக்கலாமா என்பதில் கவனம் செலுத்தினர் (Stover and Shigekane 2002, 857). மேலும், நாட்டில் DNA தரவுத்தளங்கள் இல்லாததால், உடல்களை அடையாளம் காண்பது பெரும்பாலும் மிகவும் கடினம். பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உறவினர்களால் அடையாளம் காணக்கூடிய ஆவணங்கள் அல்லது கலைப்பொருட்களை எடுத்துச் செல்லாததால், பெரும்பாலான உடல்கள் அடையாளம் காணப்படாமல் உள்ளன. 1995 ஆம் ஆண்டில் ருவாண்டாவில் கிபுயே மனித புதைகுழியை தோண்டியதில் இது நடந்தது, அங்கு மொத்தம் கண்டெடுக்கப்பட்ட 500 பாதிக்கப்பட்டவர்களில் 17 உடல்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டன (Stover and Shigekane 2002, 851). அடையாளம் காணப்பட்டவர்களில் இருவர் மட்டுமே மீள்குடியேற்ற நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடிய உயிருள்ள உறவினர்களைக் கொண்டிருந்தனர். அடையாளம் காண்பது மற்றும் எச்சங்களை குடும்பங்களுக்குத் திரும்புவது தொடர்பாக மக்கள் மத்தியில் எதிர்பார்ப்புகளை அதிகரிக்காமல் இருப்பதன் முக்கியத்துவத்தை குறிப்பிடப்பட்டுள்ள அடையாளங்காணப்பட்ட சடலங்களின் இவ்வெண்கள் சுட்டிக்காட்டுகின்றன.

Stover and Shigekane ஆகியோர் “தகவல் அறியும் உரிமையை” விட தங்கள் அன்புக்குரியவர்களின் தலைவிதியை பற்றி அறியும் ஆர்வம் அதிகமாக இருக்க வேண்டும் என்றும், பாதிக்கப்படடவர்களின் குடும்பங்கள் தோண்டியெடுக்கும் செயல்முறையில் பங்கேற்க முடியும் என்றும் வாதிடுகின்றனர்.

பெரும்பாலும் குடும்பங்கள் தான் புதைகுழிகள் தோண்டி எடுக்கப்பட வேண்டும் மற்றும் சடலங்கள் தோண்டப்பட வேண்டும் என்று தங்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றன, ஆனால் விசாரணை தொடங்கியவுடன் அவை பக்கவாட்டில் நிறுத்தப்படலாம். 1990களின் முற்பகுதியில் குவாத்தமாலாவில் ஒரு பாரிய கல்லறை அகழ்வாராய்ச்சியின் போது, ஒரு இடத்தில் தடயவியல் விஞ்ஞானிகள் வேலை செய்வதைக் காண முழு கிராமங்களும் எவ்வாறு வரும் என்பதை Stover and Shigekane விவரிக்கிறார்கள். இந்த சந்திப்புகள் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு முக்கியமானவை, ஏனெனில் இராணுவம், காவல்துறை மற்றும் நீதிமன்றங்களில் தங்கள் அன்புக்குரியவர்கள் பற்றிய தகவல்கள் பல ஆண்டுகளாக நிராகரிக்க பட்டதற்கு மாறாக இது அவர்களுக்கு ஒரு வெளிப்படைத்தன்மையை வழங்குகிறது. அகழ்வாராய்ச்சி தளத்தில் செயல்முறையைக் கவனிப்பது சில குடும்ப உறுப்பினர்கள் காணாமல் போன தங்கள் உறவினரைக் கண்டுபிடிக்கும் செயல்பாட்டில் ஒரு கடப்பாட்டையும் முகாமையையும் மீண்டும் பெற உதவும் (Stover and Shigekane 2002, 850). எவ்வாறாயினும், குடும்பங்களின் பங்கேற்பு நன்கு கட்டமைக்கப்படாவிட்டால், சூரியகந்தவில் தோண்டியெடுக்கப்பட்டதைப் போலவே, அது சாட்சியங்கள் மாசுபடுவதற்கும் வழிவகுக்கும்.

உண்மையில், செயற்பாட்டில் உள்ள முரண்பட்ட நலன்களைப் புரிந்துகொள்ள, ஏராளமான குரல்கள் கேட்கப்பட வேண்டும். பாரிய புதைகுழிகளில் உயிர் பிழைத்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், அந்த இடத்திற்கு அருகில் வசிக்கும் மக்கள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், தடயவியல் விஞ்ஞானிகள், அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பலர் உள்ளடங்குகின்றனர். குற்றவாளிகளும் இந்த செயற்பாட்டாளர்கள் சமூகத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். பாரிய மனித வன்முறை நிகழ்வுகளின் நினைவேந்தல் குறித்து எழுதிய அறிஞர்கள் Elizabeth Anstett and Jean-Marc Dreyfus ஆகியோர் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றவாளிகளை ஒரு நீண்டகால உறவில் இது ஈடுபடுத்துவதாகக் கருதுகின்றனர், மேலும் நடந்த வன்முறையை “ஒரு நிகழ்வாக அல்ல, ஆனால் ஒரு நீண்ட, கால செயல்முறையாக கருதுகின்றனர், இதில் மரணமும் உடலின் சிகிச்சையும் தனித்துவமான ஆனால் உள்ளார்ந்த இணைக்கப்பட்ட படிகள்” என குறிப்பிடுகின்றனர் (Anstett and Dreyfus 2015, Human Remains and Identification, 4). ஒரு பாரிய மனித புதைகுழியைத் தோண்டியெடுப்பது மற்றும் மனித எச்சங்களின் குழப்பமான பொருட்கள் கடந்த காலத்தில் நடந்த வன்முறை நிகழ்வுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வரலாம், ஆனால் இந்த வன்முறையின் அதிர்ச்சியுடன் வாழும் சுற்றியுள்ள சமூகங்களுக்கு இது நினைவுகளை மீண்டும் தூண்டலாம்.

இந்த தளங்களின் அகழ்வாராய்ச்சி மற்றும் தோண்டுதல் ஆகியவை போருக்குப் பின்னரான நிலையில், சமூகத்தை கட்டியெழுப்பும் செயல்முறையின் ஒரு நுட்பமான பகுதியாக அமையும். இலங்கையின் சூழலில், உள்நாட்டுப் போரின், அரசால் திணிக்கப்பட்ட விவரிப்பு கடந்த காலத்தின் பிற கதைகளை அழிக்க தீவிரமாக முயற்சிக்கிறது (Karunaratne 2021), ஆனால் இந்த கூட்டு தருணங்கள் மிகவும் உள்வாங்க படக்கூடிய மற்றும் மிகவும் நிலையான நினைவக செயல்முறைக்கு ஒரு கதவைத் திறக்கும். எவ்வாறாயினும், இது சாத்தியப்படுவதற்கு, இந்த செயல்முறைகளை வழிநடத்தும் செயற்பாட்டாளர்கள் (OMP மற்றும் அரசாங்கம் போன்றவை) இன்னும் அனைத்து சமூகங்களுக்கிடையிலும், குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களிடையே ஒரு அங்கீகரிக்கப்பட்ட தன்மையைப் பெற வேண்டும்.

அரசு, பாதிக்கப்பட்ட பல்வேறு சமூகங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் ஒன்றுக்கொன்று போட்டியிடும் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு முன்வைக்கப்பட்ட பின்வரும் கொள்கைகள் சிவில் சமூகத்திலும், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களிடையேயும் ஒரு பரந்த உரையாடலுக்கான தொடக்க புள்ளிகளாகப் பார்க்கப்படலாம். இந்த கொள்கைகள் Bournemouth நெறிமுறையின் பரிந்துரைகளை ஓரளவு தழுவியுள்ளது.

1. **"எந்தத் தீங்கும் செய்யாதீர்கள்"** என்ற அணுகுமுறையைக் கொண்டிருத்தல்: புலனாய்வுக் குழுக்கள் முடிந்தவரை, சம்பந்தப்பட்ட அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கி இருக்க முயற்சி செய்ய வேண்டும் மற்றும் மனித உரிமைகள் விசாரணைகளின் போது அதிர்ச்சியடைந்த நபர்களை நேர்காணல் செய்வதற்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் (மேலும் வழிகாட்டுதல்களுக்கு இணைப்பு 4 ஐப் பார்க்கவும்).
2. **உடல் மற்றும் உள பாதுகாப்பு:** தளம் நன்கு பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், சுற்றியுள்ள சமூகங்கள், தளம் மற்றும் அதன் பாதுகாப்பைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். விசாரணையில் அவர்களின் ஈடுபாட்டை உறுதிப்படுத்தி ஊக்குவிக்கவும் (Klinkner 7). பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண உதவுவதற்கு சுற்றியுள்ள சமூகத்தின ஈடுபாடு அவசியம், ஏனெனில் அவர்களின் சாட்சியங்கள் சில சமயங்களில் பாரிய புதைகுழிக்கு வழிவகுத்த நிகழ்வுகள் தொடர்பான ஒரே ஆதாரமாக இருக்கலாம்.
3. **சமூக நிறுவனத்தை மையப்படுத்துதல்:** காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மற்றும் சாத்தியமான பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் விசாரணை செயல்பாட்டில் பங்கேற்க அனுமதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்கள் அவ்வாறு விசாரணை செயல்பாட்டில் பங்கேற்க விரும்பினால், தளத்தின் அகழ்வாராய்ச்சியைக் கண்காணிக்க வேண்டும். குறித்த ஒரு சமூகம் பாரிய மனித புதைகுழியை பற்றி விசாரிக்கத் தயாராக இல்லை என்றால், அந்த விருப்பமும் மதிக்கப்பட வேண்டும்.
4. **சுதந்திரம் மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை:** விசாரணைக்கு தலைமை தாங்கும் குழு, அவர்களின் நடவடிக்கைகள் "அரசியல், மத அல்லது இன சார்பு அல்லது கட்டுப்பாடு

போன்ற உணர்வுகளுக்கு” (Klinkner 7) ஆளாகவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சட்டத்தின் விதி மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள், தடயவியல் புலனாய்வுக் குழுக்கள் சில சமூகங்களில் சார்புடையதாகக் கருதப்படலாம். எனவே குழுக்கள் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களாகவும் சர்வதேச வல்லுநர்கள் போன்ற வெளிப்புற செயற்பாட்டாளர்கள் உட்பட பல்வேறு நபர்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். அகழ்வாராய்ச்சியின் போது மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் காணாமற்போனோர் அலுவலகம் கண்காணிப்பாளர்களாக இருப்பதும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நலன்கள் மதிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு முக்கியமானதாகும். 2019 இல் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு OMP இன் வளங்கள் குறைந்து வரும் போதிலும் இது மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு தளத்தைப் பற்றி உருவாக்கப்படும் கதையை கவனத்தில் கொள்வதும் முக்கியம், குறிப்பாக போட்டியிடும் கதைகள் இருக்கும் சூழலில். இந்த தளங்களும் அவற்றை உருவாக்கிய சிக்கலான நிகழ்வுகளும் மறக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, ஒரு கதையை மற்றொன்றுக்கு மேல் உறுதிப்படுத்தாமல், உள்ளூர் சாட்சியங்கள் அல்லது உடல் ஆதாரங்கள் உட்பட ஆதாரத் தரவைப் பாதுகாப்பது முக்கியம்.

5. **அநாமதேயத்தன்மை:** விசாரணையில் பங்கேற்கும் பொதுமக்கள் அநாமதேயத்தன்மைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் இரகசியத்தன்மையானது இரண்டு கட்டாய காரணங்களுக்காக வழிநடத்தப்பட வேண்டியது அவசியம்: (i) சாட்சிகளின் பாதுகாப்பு மற்றும் (ii) பாதிக்கப்பட்டவர்களின் உண்மை மற்றும் நீதிக்கான உரிமை.
6. **வெளிப்படைத்தன்மை:** விசாரணை முடிவுகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அடையாளம் காணப்பட்ட உடல்கள், குடும்பங்களுக்குத் திருப்பித் தரப்பட வேண்டும்.
7. **தொடர்பாடல்:** அனைத்து நிலைகளிலும் பாதிக்கப்பட்ட சமூகத்துடன் தெளிவான மற்றும் தொடர்ச்சியான தொடர்பாடல் மிக அவசியம். பாரிய மனித புதைகுழிகளின் விசாரணை மற்றும் நினைவேந்தல் ஆகிய இரண்டிலும், பயன்படுத்தப்படும் சொற்களஞ்சியம் மற்றும் அனைத்து அதிகாரப்பூர்வ மொழிகளிலும் அதன் மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.
8. **யதார்த்தமான எதிர்பார்ப்புகள்:** பாதிக்கப்பட்ட சமூகத்தின் எதிர்பார்ப்புகளை நிர்வகிப்பதற்கு, ஒரு பாரிய புதைகுழி அகழ்வாராய்ச்சி எதைச் சாதிக்கும் என்பது குறித்து விசாரணைக் குழு நம்பத்தகாத வாக்குறுதிகளை வழங்கக்கூடாது.

## 5. முடிவுரை

இந்த அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, இலங்கையில் பாரிய மனிதப் புதைகுழி விசாரணைகளுக்கான அரசியல் மற்றும் சட்டரீதியான சவால்கள் அதிகமாகவே உள்ளன. இதனடிப்படையில், போருக்குப் பின்னரான நிலையான நல்லிணக்கத்திற்காக மனிதப் புதைகுழிகளை ஆராய்ந்து நினைவு கூற வேண்டியதன் அவசியத்தை விமர்சன ரீதியாக மதிப்பிடுவது அவசியமாகும். எரிக் ஸ்டோவர் (Eric Stover) ரேச்சல் ஷிககானே (Rachel Shigakane) போன்றவர்கள் வழக்குத் தொடுப்பதை விட பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் தேவைகளில் அதிக கவனம் செலுத்தும் அணுகுமுறைகளைப் பரிசீலிக்குமாறு அழைப்பு விடுக்கிறார்கள். காணாமல் போனோருக்கான தோண்டுதல்: அட்டூழியத்திற்குப் பிறகான தடய அறிவியல் என்ற தனது நூலில், ஆடம் ரோசன்ப்ளாட் (Adam Rosenblatt) வழக்குகளுக்கான ஆதாரங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட அகழ்வாராய்ச்சிகளிலிருந்து ஒரு வித்தியாசமான அணுகுமுறையாக "குடும்பத்தை மையமாகக் கொண்ட" தடயவியல் பணியைப் பற்றி விவாதிக்கிறார். மன்னாரில் நடைபெற்று வரும் விசாரணைகளில் குடும்பங்களை உள்வாங்குவதில் முன்னேற்றத்தைக் காட்டினாலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்துவதற்கான அரசியல் தடைகள் உள்ளன. குறிப்பாக இலங்கை போன்ற சாதகமற்ற அரசியல் சூழலில், பல அரசாங்க அதிகாரிகள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், பணிபுரியும் அரசாங்க அதிகாரிகள் விசாரணைகளுக்கு இணங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது யதார்த்தமானதாக இருக்காது.

இந்த அறிக்கையில் ஆய்வு செய்யப்பட்ட ஏழு விசாரணைகளில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தேவையான விரும்பத்தக்க பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை, அவர்கள் தங்கள் அன்புக்குரியவர்கள் மனிதப் புதைகுழியில் சிக்கி பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்புகிறார்கள். அதுமட்டுமன்றி ஒரு விசாரணையின் வெவ்வேறு நோக்கங்களை தெளிவாக வரையறுப்பது முக்கியம், இந்த விசாரணையானது பெரும்பாலும் உண்மையைத் தேடுதல் மற்றும் வழக்குத் தொடர்தல் இரண்டையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த இரண்டு இலக்குகளுக்கும் இடையிலான உறவு சிக்கலானது என்பதனை உலகெங்கிலும் உள்ள உண்மைக்கான ஆணைக்குழு (truth commissions) ஆய்வுகளில் பல்வேறு மாதிரிகளூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.[16] குவாத்தமாலாவில், உண்மை ஆணைய விசாரணைகளின் ஒரு பகுதியாக, உண்மையை வெளிப்படுத்த, குற்றவாளிகளை ஊக்குவிக்கும் முயற்சியில் வழங்கப்பட்ட சாட்சியங்களை, வழக்குகளில் சாட்சியங்களாகப் பயன்படுத்த முடியாது என்று முடிவு செய்யப்பட்டது (Hartnett 2016). தென்னாப்பிரிக்காவில், வழக்குகளுக்கு ஒத்துழைக்கும் நபர்களுக்கு தண்டனைகளில் விலக்கு அளிப்பதன் மூலம் சாத்தியமான குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக உண்மை ஆணையம்

[16] கானர் ஹார்ட்நெட் வெளியீடு உண்மையைக் கண்டறிதல் வழக்குத் தொடுப்பதற்கும் இடையிலான உறவு (The Relationship between Truth-Seeking and Prosecution) இந்த சிக்கலான கருப்பொருளை, ருவண்டா, கொலம்பியா மநற்றும் ஏனைய நாடுகளுடன் ஒப்பீட்டு முறையில் மேலும் விரிவாவகவும் வெவ்வேறு மாதிரிகளைக் கொண்டு ஆராய்கிறது.

செயல்பட்டது. இதற்கு மாறாக, பேருவில் உண்மை ஆணையம் குற்றவியல் வழக்குத் தொடுப்பவர்களுக்கு ஆதாரங்களை வழங்கியது (Hartnett 2016).

அரசியல் சவால் மற்றும் அரசாங்கத்தின் தண்டனையின்மை என்பனவற்றிக்கு அப்பால், சட்ட இடைவெளிகளும் பாரிய மனிதப் புதைகுழி விசாரணைக்கு ஒரு தடையாக உள்ளன. மனித புதைகுழிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள் பாதுகாக்க பட்ட காவலில் தெளிவான ஒழுங்குமுறை இல்லாத காரணத்தினால், பாரிய மனித புதைகுழிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட ஆதாரங்களின் இருப்பிடம், அது எவ்வாறு சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது, மற்றும் பகுப்பாய்வுக்கு எங்கு அனுப்பப்பட்டது என்பது குறித்த வெளிப்படைத்தன்மையின்மைக்கு வழிவகுத்தது. இதனால் அரசின் தகவல்களின் மீது நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு மாத்தளை விசாரணை விடயத்தில், அமெரிக்காவில் உள்ள ஒரு ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட சாட்சியங்கள் சிதைக்கப்பட்டதற்கான சாத்தியக்கூறுகளிலிருந்ததும் பல்வேறு பகுப்பாய்வு சாட்சியங்களின் அடிப்படையிலும், பாரிய மனிதப் புதைகுழி பற்றிய முரண்பட்ட விவரிப்புகள் வெளிப்பட்டன.

வலிந்து காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம், பொலிஸ் மற்றும் நீதித்துறை கட்டமைப்புகளுக்கு இடையில் தெளிவான ஒருங்கிணைப்பு பொறிமுறைகள் இல்லாததும் சட்ட இடைவெளிகளில் அடங்கும். பாரிய மனிதப் புதைகுழி விசாரணைக்காக நிபுணர்களை நியமிப்பதற்கான அதிகாரத்தைக் காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் கொண்டிருப்பதால், காணாமல் போனோர் அலுவலகத்தின் பங்கு நீதித்துறை கட்டமைப்புகளுடன் ஒன்றிணைகிறது. இருப்பினும், இந்த வகிபங்கு புலனாய்வாளர்களின் உள்நாட்டு அதிகார படிநிலைகளுடன் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகிறது என்பது தெளிவாகத் தெரியவில்லை. மூன்றாவது தடையாக, ஒரு விசாரணையை எப்போது முடிக்க முடியும் என்பதை தீர்மானிப்பதில் உள்ள சட்ட இடைவெளியாகும். இது பிரிவு இரண்டில் காணப்பட்ட பல பாரிய மனிதப் புதைகுழி விசாரணைகளில் காணப்பட்டது. பாரிய மனிதப் புதைகுழிகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சர்வதேச சட்டவியல் விசாரணை முயற்சிகள், நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் வழிமுறைகள் என்பன அதற்கான முடிவுகள் அல்ல” என்பதை உறுதிப்படுத்துகிறது (Klinkner 2020, 5). இது ஒரு அரசானது பயனுள்ள விசாரணையை நடத்துவதற்கும், காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும், எச்சங்களை திருப்பித் தருவதற்கும் அனைத்து “சாத்தியமான நடவடிக்கைகளையும்” எடுக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது (CIHL விதி 117). இரண்டாம் பாகத்தில் காணப்பட்ட பல பாரிய புதைகுழி விசாரணைகள், முடிவுகள் எட்டப்படாமல் முடங்கின. அத்தோடு அரச நடவடிக்கைகள் பயனுள்ள வகையில் விசாரணையின் கடமையை எப்போது நிறைவேற்றின என்பது குறித்த தெளிவின்மை காணப்படுகின்றது.

இவ்வாறான தடைகள் நீடிக்கும் அதேவேளை, இந்த நினைவுகள் நிறைந்த இடங்களை நினைவுகூறுவது, இலங்கைச் சூழலில் நல்லிணக்கத்தின் பரந்த நோக்கங்களுக்கும் வேறு சில சாதகமான நடவடிக்கைகள் வழிவகுக்கும். இடம்பெற்று வருகின்ற விசாரணைகளுக்கான முடிவுகள் இல்லாத போதிலும், பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் இலங்கை வரலாறு குறித்த பொதுமக்களின் புரிதலில் பாரிய மனிதப் புதைகுழிகள் ஏற்படுத்தும் தலைமுறை தாக்கத்தை கருத்தில் கொண்டு, நினைவேந்தல் செயற்பாடுகள் சிறந்த முறையில் கையாளப்பட வேண்டியதோடு இவை நல்லிணக்க நோக்கங்களை நோக்கிச் செயல்பட வேண்டும். இலக்கியம், காட்சி மற்றும் பல்லூடக படைப்புகள் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஒரு பாரிய மனிதப் புதைகுழி கண்டுபிடிப்பால் தூண்டப்பட்ட எதிர்வினைகளை செயலாக்குவதற்கான வழிகளையும் வழங்க முடியும். இந்த தளங்களின் மூலம் அவர்கள் குழப்பமான யதார்த்தத்தை அறிந்து கொள்ளக்கூடும்[17] தாங்கள் பிரித்து வைக்கப்பட்டதாக உணரும் அல்லது நல்லிணக்க முயற்சிகளுக்கு ஆதரவளிக்காத மக்களிடமிருந்து இவ்வாறான கலை முயற்சிகள் வெளிவரலாம், அவை ஒருபோதும் நல்லிணக்க முயற்சிகளுக்கு ஒருபோதும் நல்லிணக்க முயற்சிகளுக்கு ஆதரவாக அமையாத போதும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் வேண்டிய மரியாதைக்குரிய சிறந்த சூழலை ஏற்படுத்த முடியும். நீதிக்கான நிலையான வழிகளுக்கு தடைகள் இருப்பதால், இந்த பிரச்சினைகள் குறித்த சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானது என்பதுடன் மனித புதைகுழிகளால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்காக குரல் கொடுப்பதுவும் இதன் ஒரு பகுதியாகும். எதிர்காலத்தில் இன்னும் கூடுதலான பாரிய மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படலாம் என்பதால், இலங்கையில் உள்ள மனித புதைகுழிகள் பற்றிய வரலாற்று மற்றும் சட்டத் தகவல்களை மையப்படுத்துவது மற்றும் இந்த பிரச்சினையில் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வது இதற்கான அடித்தளத்தை அமைக்கும் என்று நம்பப்படுகிறது.

---

[17] சிலி இயக்குனர் பட்ரிசியோ குஸ்மேனின் ஒரு உதாரண ஆவணப்படம் - Nostalgia for the Light - இது அட்டகாமா பாலைவனத்தில் தங்கள் குடும்ப உறுப்பினர்களின் எச்சங்களைத் தேடும் பெண்களின் அவலநிலையை ஆராயும்.

## இணைப்பு 1: அறியப்பட்ட மனித புதைகுழி தளங்களின் அகரவரிசை அட்டவணை

| | இடம் | அறிவிக்கப்பட்ட திகதி | கண்டுபிடிப்பு வரலாறு | ஆராய்ச்சி விசாரணை | கண்டெடுக்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை | சந்தேகத்திற்குரிய பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் காரணமான நிகழ்வு | மூல ஆதாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அங்கும்புர (மத்திய மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | நீதித்துறை உத்தரவின் பேரில் கலைக்கப்பட்டது. அதிகாரப்பூர்வ விசாரணையின் பதிவுகள் இல்லை | 36 | 1989 இல் பொலிஸ் கொலைகள் | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 இக்பால் 20101994 மனித உரிமைகள் தொடர்பான அமெரிக்க நாட்டு அறிக்கைகள் |
| 2 | அம்பகஹஹேனகந்த (சப்ரகமுவ மாகாணம்) | 1998 | 1994-1996 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | | | | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 |
| 3 | படபொல (தென் மாகாணம்) | 2004 | பொருத்தமற்றது | | | சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் | இளங்கமுவ 2014 |
| 4 | மட்டக்களப்பு (கிழக்கு மாகாணம்) | 2014 | மட்டக்களப்பு மாவட்டத்தில் மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. | | | மைலந்தனி கிராமத்தில் 35 தமிழ் பொதுமக்களைக் கொன்றதற்காக 21 இராணுவத்தினர் மீதான விசாரணையின் சாத்தியமான இணைப்பு (1994 அமெரிக்க நாட்டு அறிக்கை) | இளங்கமுவ 2014 விஜேதாச 2019 |
| 5 | பெர்முல்ல (சப்ரகமுவ மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | | | | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | செம்மணி (வட மாகாணம்) | 1998 | அறிக்கையின் பிரிவு 2 ஐப் பார்க்கவும். | 1998-2006 | 15 | 1995-96ல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளின் போது இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட தமிழ் பொதுமக்கள் | இளங்கமுவ 2014 இக்பால் 2010 |
| 7 | ஹீந்தெலிய, டிக்வெல்ல (தென் மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | | | | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 |
| 8 | தியதவகலை, டெனிவ் (சப்ரகமுவ மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | | | | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 |
| 9 | எஸ்ஸெல்லா (மேல் மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | மறைக்கப்பட்டுள்ளது, அதிகாரப்பூர்வ விசாரணைக்கான பொது பதிவுகள் இல்லை | | | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 இக்பால் 2010 |
| 10 | ஹம்பாந்தோட்டை (தென் மாகாணம்) | 2004 | பொருத்தமற்றது | | | சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் | இளங்கமுவ 2014 |
| 11 | ஹோகந்தர (மேல் மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | மறைக்கப்பட்டுள்ளது, அதிகாரப்பூர்வ விசாரணைக்கான பொது பதிவுகள் இல்லை | | | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 இக்பால் 2010 |
| 12 | யாழ்ப்பாணம், துரையப்பா விளையாட்டரங்கம் (வடக்கு மாகாணம்) | 1999 | அறிக்கையின் பிரிவு 2 ஐப் பார்க்கவும். | 1999 | 49 | 1987ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினரால் வடமாகாண ஆக்கிரமிப்பின் போது கொல்லப்பட்ட தமிழ் மக்கள் | இளங்கமுவ 2014, அமெரிக்க நாட்டு அறிக்கை 2000. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | களுவாஞ்சிகுடி (கிழக்கு மாகாணம்) | 2014 | அறிக்கையின் பிரிவு 2 ஐப் பார்க்கவும். | 2014-ம் ஆண்டு அகழாய்வு செய்ய உத்தரவு வழங்கப்பட்டும் விசாரணை தொடங்கப்படவில்லை. | 100 வரை இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது | கிழக்கில் விடுதலைப் புலிகளின் வன்முறையால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களாக இருக்கலாம் என நம்பப்படுகிறது | கருணாரத்ன 2014 |
| 14 | கல்முனை (கிழக்கு மாகாணம்) | 2004 | பொருத்தமற்றது | | | சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் | இளங்கமுவ 2014 |
| 15 | கிளிநொச்சி (வடக்கு மாகாணம்) | | | | | | இளங்கமுவ 2014 |
| 16 | கிரிந்த (தென் மாகாணம்) | 2004 | பொருத்தமற்றது | | | சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் | இளங்கமுவ 2014 |
| 17 | குருதுவத்த - காலி (தென் மாகாணம்) | 2004 | பொருத்தமற்றது | | | சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் | இளங்கமுவ 2014 |
| 18 | மாமடளை, அம்பலாந்தோட்டை (தென் மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | | | | இளங்கமுவ 2014 |
| 19 | மாங்குளம் (வடக்கு மாகாணம்) | 2020 | மாங்குளத்தில் உள்ள மருத்துவமனையின் கட்டுமானப் பகுதியில் தொழிலாளர்களால் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன | 2020 | | | இலங்கை வார இதழ் 2020, https://www.srilankaweekly.co.uk/sri-lankan-police-investigating-mass-grave-northern-province/ |
| 20 | மன்னார் (வடக்கு மாகாணம்) | 2013 | இந்த அறிக்கையின் பிரிவு 2 ஐப் பார்க்கவும். | 2013-2017 | 83 | | இளங்கமுவ 2014 |
| 21 | மன்னார் நகரம் (வடக்கு மாகாணம்) | 2018 | இந்த அறிக்கையின் பிரிவு 2 ஐப் பார்க்கவும். | 2018- தொடர்கிறது | | | |
| 22 | மாத்தளை (மத்திய மாகாணம்) | 2012 | இந்த அறிக்கையின் பிரிவு 2 ஐப் பார்க்கவும். | 2012-2015 | 154 | ஜே.வி.பி. எழுச்சியின் போது, அரச அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட சிங்களவர்கள் | இளங்கமுவ 2014 பாலா 2017 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 23 | மிருசுவில் (வட மாகாணம்) | 2000 | இராணுவக் காவலில் இருந்த சிவிலியன் ஒருவர் (பொன்னுத்துரை மகேஸ்வரன்) பாரிய மனிதப் புதைகுழி இருப்பதாக சாட்சியமளித்தார். | 2000 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இந்த வழக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் இருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டு 2005 ஆம் ஆண்டின் பின்னர் வழக்கு இடைநிறுத்தப்பட்டது. | 8 | யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் சிறுவர்கள் உள்ளிட்ட தமிழ் பொதுமக்கள் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். | இளங்கமுவ 2014 போபேஜ் 2017 பிபிசி சிங்களம், https://www.bbc.com/sinhala/news/story/2005/03/050306_mirusuvil |
| 24 | நிக்கவெரட்டிய (வடமேல் மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | | 20 | பொலிஸாரால் கொலை செய்யப்பட்ட இளைஞர்கள் என சந்தேகிக்கப்படுகிறது | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 அமெரிக்க நாட்டு அறிக்கை 1998 |
| 25 | பூநகரி (வடக்கு மாகாணம்) | 2014 | | | | | இளங்கமுவ 2014 |
| 26 | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு (வட மாகாணம்) | 2014 | தோட்டத்தில் சடலங்களை கண்டெடுத்த இலங்கை குடும்பம் | | 9 | | இளங்கமுவ 2014, பாங்காக் போஸ்ட் 2014 |
| 27 | சூரியகந்த (சப்ரகமுவ மாகாணம்) | 1994 | இந்த அறிக்கையின் பிரிவு 2 ஐப் பார்க்கவும். | ஆம், 1994-1995 | 300 | ஜே.வி.பி. எழுச்சியின் போது, அரச அடக்குமுறையால் பாதிக்கப்பட்ட சிங்களவர்கள் | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 இக்பால் 2010 |
| 28 | திஸ்ஸமஹாராம (தென் மாகாணம்) | 2004 | | | | சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் | இளங்கமுவ 2014 |
| 29 | வல்பிட்டா (அரசுப் பண்ணை) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | மறைக்கப்பட்டுள்ளது, அதிகாரப்பூர்வ விசாரணைக்கான பொது பதிவுகள் இல்லை | | | இலங்கை அரசு 1998 இளங்கமுவ 2014 இக்பால் 2010 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 30 | வவுல்கலே (சப்ரகமுவ மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | மறைக்கப்பட்டுள்ளது, அதிகாரப்பூர்வ விசாரணைக்கான பொது பதிவுகள் இல்லை | | 1990ல் வவுல்கலேயில் 12 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமைக்காக 1994ல் குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்புடையவராக இருக்கலாம் (1994 அமெரிக்க நாட்டு அறிக்கை) | இலங்கை அரசு 1998 இளங்கமுவ 2014 இக்பால் 2010, அமெரிக்க நாட்டு அறிக்கை 1994. |
| 31 | வில்பிட்ட, அக்குரஸ்ஸ (தென் மாகாணம்) | 1998 | 1994-1998 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | | | | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 இக்பால் 2010 |
| 32 | யக்கலமுல்ல (தென் மாகாணம்) | 1998 | 1994-1996 காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு | | | | இலங்கை அரசாங்கம் 1998 இளங்கமுவ 2014 இக்பால் 2010 |

## இணைப்பு 2 சர்வதேச மற்றும் வெளிநாட்டு நீதித்துறை

உலகெங்கிலும் உள்ள மனித புதைகுழிகள் பற்றிய பின்வரும் நிகழ்வுகளை இலங்கையில் பயன்படுத்தக்கூடிய நடைமுறைகளுக்கு உதாரணமாகப் காட்டலாம்.

### உள்ளக அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்றத்திலிருந்து

- El Mozote எதிர் El Salvador இன் பிற இடங்களின் படுகொலைகள், தகுதிகள், இழப்பீடுகள் மற்றும் செலவுகள் குறித்த உள்ளக அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்ற தீர்ப்பு, தொடர் C எண் 252 (25 அக்டோபர் 2012):
    - மொத்த மனித உரிமை மீறல்களின் விசாரணையானது பரந்த சூழல் மற்றும் நிகழ்வுகளைச் சுற்றியுள்ள சிக்கல்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் (பந்தி 299), மேலும் இறந்த நபர் பற்றிய ஆவணத் தகவல்களை வழங்க வேண்டிய கடமையில் அரசானது கடமைப்பட்டிருக்கின்றது (பந்தி 334).
- Valle Jaramillo et al. எதிர் கொலம்பியா, தகுதிகள், இழப்பீடுகள் மற்றும் செலவுகள் மீதான தீர்ப்பு, உள்ளக அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்ற தீர்ப்பு, தொடர் C எண் 192 (27 நவம்பர் 2008):
    - ஒரு விசாரணையானது “ஒட்டு மொத்த கூட்டு நடவடிக்கைகளின் வடிவ மாதிரிகளை தீர்மானிப்பது உட்பட, சாத்தியமான முழுமையான வரலாற்று உண்மைக்காக” முயற்சி செய்தல் வேண்டும். (பந்தி 102).
    - யூப்லோ பெல்லோ (Pueblo Bello) படுகொலை கொலம்பியா, தகுதிகள், இழப்பீடுகள் மற்றும் செலவுகள் மீதான தீர்ப்பு, உள்ளக அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்ற தீர்ப்பு, தொடர் C எண் 140 (31 ஜனவரி 2006).
    - பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு அரசு பொதுமக்களை வலியுறுத்த வேண்டும் (பந்தி 272).
    - அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்களை அரசு விரைவில் தங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும். உறவினர்களுடன் இணங்கி அடக்கம் செய்வதற்கான செலவுகளையும் அரசே ஏற்க வேண்டும் (பந்தி 273).
    - பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களை அடுத்த உறவினர்களுக்கான உளவியல் கவனிப்பு உட்பட ஏற்பட்ட தீங்குகளுக்கு போதுமான, பயனுள்ள மற்றும் உடனடி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள உரிமை உண்டு (பந்தி 274).
    - அரசாங்கமானது ஒரு வழக்கின் உண்மைகளை விசாரித்து, சம்பந்தப்பட்டவர்களைக் கண்டறிந்து, வழக்குத் தொடுத்து, பொறுப்பானவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து தண்டனை வழங்க வேண்டும் (பந்தி 265-269).
    - வெலாஸ்குவெஸ் ரோட்ரிக்ஸ் (Velásquez Rodríguez) எதிர் ஹோண்டுராஸ் (Honduras), தகுதிகள், இழப்பீடுகள் மற்றும் செலவுகள் குறித்த உள்ளக

அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்ற தீர்ப்பு, தொடர் C எண் 4 (29 ஜூலை 1988):

- உண்மைக்கான உரிமைக்கு, தனிப்பட்ட மனித உரிமை மீறல் மற்றும் துஂபிரயோகத்திற்கு வழிவகுக்கும் சமூக அரசியல் சூழல் குறித்து அதிகாரப்பூர்வ விசாரணை தேவைப்படுகிறது இந்த செயல்முறையில் பாதிக்கப்பட்டவர்களின் பங்கேற்பு மற்றும் சமூகத்திற்கும் தனிநபருக்கும் பயனளிக்கும் வகையில் விசாரணை முடிவுகளை அறிவிப்பது ஆகியவை இதில் அடங்கும் (பந்தி 177).
- மாபிரிபன் படுகொலை எதிர் கொலம்பியா, தகுதிகள், இழப்பீடுகள் மற்றும் செலவுகள் குறித்த உள்ளக அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்ற தீர்ப்பு, தொடர் C எண் 134 (15 செப்டம்பர் 2005):
- “விசாரணை மற்றும் நீதித்துறை செயல்முறைகளைப் பொறுத்தவரை, மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் நெருங்கிய உறவினர்கள், என்பவர்களுக்கு உண்மைகளை தெளிவுபடுத்துவது மற்றும் பொறுப்பானவர்களைத் தண்டிப்பது மற்றும் நியாயமான இழப்பீடு கோருவது தொடர்பாக பங்கேற்கவும் விசாரிக்கவும் போதுமான வாய்ப்பு இருக்க வேண்டும்” (பந்தி 219).
- “லாஸ் டாஸ் எர்ரெஸ்“ படுகொலை எதிர் குவாத்தமாலா, ஆரம்ப ஆட்சேபனைகள், தகுதிகள், இழப்பீடுகள் மற்றும் செலவுகள் மீதான தீர்ப்பு, ஐ.ஏ.சி.டி.எச்.ஆர் (IACtHR) தொடர் C எண் 211 (24 நவம்பர் 2009):
- பாதிக்கப்பட்டவர்களின் மறுசீரமைப்பு உரிமைகளுக்காக, ஒரு ஜனநாயக சமூகத்தின் நியாயமான எதிர்பார்ப்பாகவும், சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளிக்கும் நடவடிக்கையாகவும், எந்தவொரு விசாரணையின் முடிவுகளும் முழுமையாக அறிவிக்கப்பட வேண்டும் (...) இறந்தவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் கட்டலாம். மீண்டும் மீண்டும் செய்யாத முயற்சிகளின் உத்தரவாதத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம் (பந்தி 256-264).

- ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்தில் இருந்து
  - அஸ்லகானோவா மற்றும் மற்றவர்கள் எதிர் ர்யா, தீர்ப்பு, ஈ.சி.டி.எச்.ஆர் (நுஊவர்சு)விண்ணப்ப எண்கள் 2944/06 மற்றும் 8300/07, 50184/07, 332/08, 42509/10 (18 டிசம்பர் 2012):
  - மனித எச்சங்களை சேகரித்தல், சேமித்தல் மற்றும் அடையாளம் காணுதல் (பந்தி 226) உட்பட புதைகுழிகளின் அகழ்வாராய்ச்சிக்கு தேவையான வளங்களை அரசாங்கங்கள் ஒதுக்க வேண்டும்.
  - குகலாஷ்விலி மற்றும் மற்றவர்கள் எதிர் ஜார்ஜியா, தீர்ப்பு, ஈ.சி.டி.எச்.ஆர் (ECtHR) விண்ணப்ப எண்கள் 8938/07 மற்றும் 41891/07 (2 மே 2020):

    - உயிர் பறிபோனதைத் தொடர்ந்து, விசாரணை செய்வதற்கான கடமையில் “பொறுப்பானவர்களை அடையாளம் காண்பதும், பொருத்தமானால், தண்டனை வழங்குவதும்” அடங்கும் (பந்தி 129).
    - சபாஞ்சியேவா Sabanchiyeva மற்றும் மற்றவர்கள் எதிர் ர்'யா, தீர்ப்பு, ஈ.சி.டி.எச்.ஆர் விண்ணப்ப எண் 38450.'.05 (6 ஜூன் 2013):
    - மனித எச்சங்களை திருப்பித் தராமல் இருப்பதும், மனித உடல்களை குறிப்பிடப்படாத இடங்களில் அடக்கம் செய்வதும் குடும்ப மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைக்கான உரிமையை மீறுவதாகும் ஒரு தலையீடு சட்டத்திற்கு இணங்கும்போது மட்டுமே அனுமதிக்கப்படுகிறது, சட்டப்பூர்வ நோக்கத்திற்காக (பொது பாதுகாப்பு, சீர்கேடு அல்லது உரிமைகள் மற்றும் பிறரின் சுதந்திரம் போன்றவை) சட்டத்திற்கு இணங்கும்போது மட்டுமே தலையீடு அனுமதிக்கப்படுகிறது மற்றும் இது ஒரு ஜனநாயக சமூகத்தில் அவசியமானதொன்றாகும் (பந்தி 117-134).
    - ஜோஹன்னிஷே கிர்ச் ரூ பீட்டர்ஸ் (Johannische Kirche & Peters) எதிர் ஜெர்மனி, முடிவு, ஈ.சி.டி.எச்.ஆர் (ECtHR) விண்ணப்ப எண் 41754/98 (10 ஜூலை 2001)
    - இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை, சிந்தனை சுதந்திரம், மனசாட்சி மற்றும் மத விதிகளின் கீழ் பாதுகாக்கப்படுவதால் ,வை மத நடைமுறையின் ,ன்றியமையாத அம்சமாக அமைகிறது.
- முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்திலிருந்து (ICTY)
    - வழக்குரைஞர் எதிர் ம்லாடிக், தீர்ப்பு, IT-09-02-T-117281 (22 நவம்பர் 2017)
    - குடும்ப உறுப்பினர்களை அடக்கம் செய்வதற்கான உரிமை பொதுவாக தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்க்கையைப் பாதுகாப்பதன் மூலம் இடம்பெறுகின்றது.

**உள்நாட்டுச் சட்டத்தில்**

**அர்ஜண்டினா**

- 1994 மே 11 ,ன் 14,321 ஆம் இலக்க அர்ஜென்டினா சட்டம்: “வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள்” என்ற வகையை உருவாக்குகிறது, இது சிவில் நோக்கங்களுக்காக ஒரு மரணத்திற்குச் சட்டப்பூர்வமாக சமமானதாகும், ஆனால் தனிநபர் “மீண்டும் தோன்றுவதற்கான” சாத்தியம் உள்ளது. இந்த பிரகடனம் தனிநபரின் மரணத்தில் அரசின் ஈடுபாடு அல்லது பொறுப்பை ஒப்புக்கொள்கிறது.

**போஸ்னியா, ஹர்ஜிகோவினா**

- போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவின் 2003 குற்றவியல் சட்டம், பிரிவு 231ய சிறைத்தண்டனையுடன் கூடிய ஒரு மனித புதைகுழியைப் புகாரளிக்கத் தவறியதை குற்றமாக்குகிறது (போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா: குற்றவியல் சட்டம் (27 ஜூன் 2003), போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவின் அதிகாரப்பூர்வ வர்த்தமானி 37/03).

**ஈராக்**

- 2015 ஆம் ஆண்டின் 13 ஆம் ,லக்க ஈராக்கிய சட்டம், பாரிய மனித புதைகுழிகளின் விவகாரங்கள் மற்றும் பாதுகாப்புச் சட்டம், 2006 இன் 5 ஆம் இலக்க திருத்தச் சட்டம், பாரிய மனிதப் புதைகுழிகளைப் பாதுகாத்தல்: இது ஈராக்கில் மனித புதைகுழிகளை விசாரிப்பதற்கான நடைமுறையை வரையறுக்கிறது. இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிப்பை தெரிவிக்க வேண்டிய கடமை குடிமக்களுக்கு உள்ளது அத்தோடு மனித உரிமைகள் அமைச்சு பாரிய மனிதப் புதைகுழிகளின் இடங்களை அட்டவணைப்படுத்துவதையும் ஆவணப்படுத்துவதையும் மேற்பார்வையிடுகிறது அது மட்டுமின்றி அந்த இடத்தைக் கையகப்படுத்துவதோடு. தோண்டியெடுக்கும் செயல்முறையை மேற்பார்வையிட ஒரு ஆணையம் உருவாக்கப்படுகிறது, இதில் வழக்குரைஞர், காவல்துறை மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிநிதிகள் அடங்குவர். காணாமல் ஆக்கப்பட்டோரின் தலைவிதியை நிறுவுதல், வழக்குகளை அடையாளம் காணுதல் மற்றும் அவர்களின் குற்றவியல் பொறுப்பை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை சேகரித்தல் என்பன இவற்றுள் உள்ளடங்கும் (Lassée 2017)

**இணைப்பு 3: மேற்கோள் காட்டப்பட்ட சட்டங்கள்**

**உள்நாட்டு சட்டம்**

- இலங்கை அரசியலமைப்பு
- 2005 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1899 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க கல்லறைகள் மற்றும் புதைகுழிகள் கட்டளைச் சட்டம்.
- 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போனோர் அலுவலக (ஸ்தாபித்தல், நிர்வாகம் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல்) சட்டம்
- 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டம்
- 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மரணங்களைப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) 1 (திருத்த) சட்டம்
- 2018 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களிடமிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சர்வதேச மாநாடு மற்றும் சமவாயச் சட்டம்
- 1975 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டம், திருத்தப்பட்ட 1895 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சாட்சியக் கட்டளைச் சட்டம்

- 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம்
- 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்

**சர்வதேச சட்டம்**

சர்வதேச மனிதாபிமான சட்டம்:

- ஜெனீவா உடன்படிக்கைகள்: GCI, GCII, GCIII, GCIV, 1977 ஆம் ஆண்டின் ஜெனீவா உடன்படிக்கைகளுக்கான கூடுதல் நெறிமுறை 1, 2016ன் கூடுதல் வர்ணனை
- வழமையான சர்வதேச மனிதாபிமான சட்ட விதிகள் (https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul)
- சர்வதேச மனித உரிமைச் சட்டம்:
- 1980 ஆம் ஆண்டில் இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ICCPR).
- 2016 ஆம் ஆண்டில் இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களிடமிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாடு (CED)

**இணைப்பு 4: மேலும் தொடர்புடைய வழிகாட்டுதல்கள்**

- ஜெனீவா அகடமி மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ.சி.ஆர்.சி) (2019), மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர் அலுவலகம் (2016), சட்டவிரோத மரண விசாரணை குறித்த மினசோட்டா நெறிமுறை (இங்கே கிடைக்கிறது: www.ohchr.org/Documents/Publications/MinnesotaProtocol.pdf)
- உலகெங்கிலும் இரத்தமாற்றம் மற்றும் செல்லுலார் சிகிச்சைகளை மேம்படுத்துதல் (2010), பாரிய மனிதப் இறப்பு டி.என்.ஏ நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல்கள் (இங்கே கிடைக்கிறது: www.aabb.org/programs/disasterresponse/Documents/aabbdnamassfatalityguidelines.pdf)
- Cox, M et al. (eds) (2008), பாரிய மணித புதைகுழிகளுக்கான அறிவியல் விசாரணை: நெறிமுறைகள் மற்றும் நிலையான இயக்க நடைமுறைகளை நோக்கிய (கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம்)
- காணாமல் போனோர் தொடர்பான சர்வதேச ஆணையம் (ஐ.சி.எம்.பி) (2018), முதல் பதிலளிப்பவர்களுக்கான வழிகாட்டுதல்கள்: அறியப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் பாரிய மணித புதைகுழி அல்லது உடல் அகற்றும் இடங்களைப் பாதுகாத்தல், ஐஊஆ.ளுவ.யுயு.857.1 (இங்கே கிடைக்கிறது: www.icmp.int/wp-content/uploads/2018/10/icmp-st-aa-857-1-doc-guidelines-for-first-response-at-grave-or-body-disposal-locations.pdf)

**டீைடீடளைபசயிால**


Amnesty International. *Sri Lanka: Chemmani exhumations - positive first steps towards truth and justice*. AI Index: ASA 37/17/99. Amnesty International 1999. https://www.amnesty.org/download/Documents/144000/asa370171999en.pdf

Anandakugan, Nithyani. "The Sri Lankan Civil War and Its History, Revisited in 2020" *Harvard International Review*, 31 August 2020, https://hir.harvard.edu/sri-lankan-civil-war/.

Aneez, Shihar. "Sri Lanka says suspected wartime mass grave is an old cemetery." *Reuters*, 7 March 2014, https://www.reuters.com/article/us-srilanka-rights-grave-idUKBREA261FT20140307.

Anstett, Elizabeth, and Jean-Marc Dreyfus. *Human Remains and Mass Violence: Methodological Approaches*. Manchester: Manchester University Press, 2016.

Anstett, Elisabeth. *Human Remains and Identification: Mass Violence, Genocide and the 'Forensic Turn'*. Manchester: Manchester University Press, 2015.

Anstett, Elisabeth, and Jean-Marc Dreyfus. *Destruction and Human Remains: Disposal and Concealment in Genocide and Mass Violence*. Manchester: Manchester University Press, 2014.

Asian Human Rights Commission. *Sri Lanka: Six years after Chemmani exhumation: Inquiry commission needed to review attorney general's department*, January 4 2006, http://www.humanrights.asia/news/ahrc-news/AS-002-2006/.

Bala, Mytili. "Transitional Justice and the Right to Know: Investigating Sri Lanka's Mass Graves." In *Transitional Justice in Sri Lanka — Moving Beyond Promises*, edited by B Fonseka, 258-9. Colombo: Centre for Policy Alternatives, 2017.

BBC Sinhala News. *No Instructions on Chemmani's CID*, 4 January 2006, https://www.bbc.com/sinhala/news/story/2006/01/printable/060104_chemmani_ag

Bopage, Lionel. *Mass graves everywhere, but where are the killers?*. Self-published paper, 2017. https://www.researchgate.net/publication/323772087_Mass_graves_everywhere_but_where_are_the_killers.

Borham, Maneshka and Indunil Usgoda Arachchi, "Sooriyakanda - the gruesome and forlorn grave." *Sunday Observer*, 4 Nov 2018, https://www.sundayobserver.lk/2018/11/04/news-features/sooriyakanda-gruesome-and-forlorn-grave

Callamard, Agnes. *Extrajudicial, summary or arbitrary executions*, *Note by the Secretary-General*. United Nations: New York, 2020.

Centre for Policy Alternatives. The *Right to Privacy in Sri Lanka*. Colombo: Centre for Policy Alternatives, 2020, https://www.cpalanka.org/wp-content/uploads/2020/09/Discussion-Paper-Right-to-Privacy-updated-draft-4-1.pdf

Cordner, Stephen, and Morris Tidball-Binz. 2017. "Humanitarian Forensic Action — Its Origins and Future." *Forensic Science International* 279 (October): 65–71. https://doi.org/10.1016/j.forsciint.2017.08.011.

Cronin-Furman, Kate, and Mario Arulthas. "How the Tigers Got Their Stripes: A Case Study of the LTTE's Rise to Power." *Studies in Conflict & Terrorism*, 2021.

Dziuban, Zuzanna, *Mapping the 'Forensic Turn': Engagements with Materialities of Mass Death in Holocaust Studies and Beyond*. Vienna: New Academic Press, 2017.

Embilipitiya Disappeared Schoolchildren's Parents Organisation Fonds. *Historical Dialogue. Records of the Secretary (SHC De Silva), 1990-2018*. Sri Lanka: Historical Dialogue, January 2022. https://historicaldialogue.lk/wp-content/uploads/2022/02/FINDING-AID_ESC1_24022022_HD.pdf

Fernández-Álvareza, José, David Rubio-Melendia, Antxoka Martínez-Velasco, Jamie K.Pringle, Hector-David Aguilera, "Discovery of a mass grave from the Spanish Civil War using Ground Penetrating Radar and forensic archaeology," Forensic Science International, Volume 267, October 2016, Pages e10-e17

Fernando, Brito. Interview with Sophie Bisping. Zoom, 27 July 2022.

Fernando, Ruki. Interview with Sophie Bisping. Zoom, 9 August 2022.

Fournet, Caroline, and Nicole Siller. "'We Demand Dignity for the Victims' – Reflections on the Legal Qualification of the Indecent Disposal of Corpses." *International Criminal Law Review* 15 no. 5 (2015): 896–925.

Ganguly, Meenakshi. "Families of Sri Lanka's Forcibly Disappeared Denied Justice", *Human Rights Watch*, 25 August 2021, https://www.hrw.org/news/2021/08/25/families-sri-lankas-forcibly-disappeared-denied-justice.

Government of Sri Lanka. *Final Report of the Commission of Inquiry Into Involuntary Removal and Disappearance of Certain Persons (all Island)*, 1998. Available at http://www.disappearances.org/news/mainfile.php/reports_srilanka/

Groundviews, "From mass grave to cemetery: Questioning the claims in Mannar", 3 December 2014, *Groundviews.org*, https://groundviews.org/2014/03/12/from-mass-grave-to-cemetery-questioning-the-claims-in-mannar/

Haglund, William D., Melissa Connor, and Douglas D. Scott. "The Archaeology of Contemporary Mass Graves." *Historical Archaeology* ٣٥, no. -٥٧ :(٢٠٠١ ١ ٦٩.)

Hartnett, Conor. 2016. *The Relationship between Truth-Seeking and Prosecution*. Colombo: ICES.

Haviland, Charles. "Sri Lanka mass grave yields more skeletons", *BBC News*, 18 January 2014, http://www.bbc.com/news/world-asia-25782902.

Hoole, Ranjan "Embilipitiya Schoolboys' Affair – The Thin End Of The Wedge", *The Colombo Telegraph,* 9 May 2014, https://www.colombotelegraph.com/index.php/embilipitiya-schoolboys-affair-the-thin-end-of-the-wedge/.

Human Rights Watch. *Human Rights Accountability in Sri Lanka*. Human Rights Watch 1992, https://www.hrw.org/reports/pdfs/s/srilanka/srilanka925.pdf.

Human Rights Watch. *Recurring Nightmare: State Responsibility for "Disappearances" and Abductions in Sri Lanka*. Human Rights Watch 2008, https://www.hrw.org/report/2008/03/05/recurring-nightmare/state-responsibility-disappearances-and-abductions-sri-lanka.

Ilangamuwa, Nilantha. "Sri Lanka, the island of mass graves", *Asian Human Rights Commission,* 3 June 2014, http://www.humanrights.asia/news/ahrc-news/AHRC-ART-043-2014/.

Iqbal, MCM. "Mass Graves: Nothing new to Sri Lanka", *Groundviews*, 6 July 2010, https://groundviews.org/2010/06/07/mass-graves-nothing-new-to-sri-lanka/

Judt, Tony, and Pierre Nora. "Realms of Memory: The Construction of the French Past." *The New York Review of Books* 45 no. 19 (1998): 51.

Journalists for Democracy in Sri Lanka, "Excavations to resume on Sri Lanka's largest mass grave", *Journalists for Democracy in Sri Lanka,* 24 February 2022.
http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/1079-excavations-to-restart-on-sri-lankas-largest-mass-grave.

Kabir, Sarah. Interview with Sophie Bisping. Zoom, 12 July 2022.

Karunarathne, Waruni. "Police Record Statements About Mass Grave", Sri Lanka Ministry of Foreign Affairs, 13 July 2014. Available online: https://mfa.gov.lk/police-record-statements-about-mass-grave/

Karunaratne, Natasha. *The Battleground of Sri Lankan History Education: Barriers to Teaching Inclusive Histories*. Colombo: International Centre for Ethnic Studies, 2021.

Klinkner, M. *The Bournemouth Protocol on Mass Grave Protection and Investigation*. Bournemouth: Bournemouth University Press, 2020.

Kodikara, Chulani. Interview with Sophie Bisping. Zoom, 03 August 2022.

Lassée Isabelle. "The Sri Lankan Office on Missing Persons: Truth and Justice in Tandem?" *International Review of the Red Cross* ٩٩, no. ٣٩–٦١٩ :(٢٠١٧) ٩٠٥. https://doi.org/10.1017/S1816383118000504.

"Matale Mass Grave: The Investigation Has Been Taken Away From The Judiciary", *The Colombo Telegraph*, 22 June 2013, https://www.colombotelegraph.com/index.php/matale-mass-grave-the-investigation-has-been-taken-away-from-the-judiciary/

McGilvray, Dennis B., and Mirak Raheem. 2007. "Muslim Perspectives on the Sri Lankan Conflict." http://hdl.handle.net/10125/3527.

Medawatte, Danushka. "Implementation of IHL Obligations with Regard to Missing Persons in Post-Armed Conflict Sri Lanka," *International Committee of the Red Cross*, 2019.

"More Finds in Sri Lanka Mass Grave", *Associated Press*, 12 April 1999, https://apnews.com/article/44e7d5e9af863e5a4778048eb66434a8.

"New proposals on laws over death inquests", *The Colombo Post*, 12 November 2017, https://www.thecolombopost.org/en/asia-en/asia-srilanka-en/20474/.

Office on Missing Persons, *Interim Report*, August 2018, Available at http://www.jdslanka.org/images/documents/disappearances_executions/the_office_on_missing_persons_interim_report_2018_august.pdf

Office on Missing Persons, *Annual Report*, 2020, Available at http://omp.gov.lk/omp-documents/omp-reports

Pass, Allan D., and Ayn Embar-Seddon. *Forensic Science*. Vol. Second edition, "Mass Graves," Salem Press, 2015.

Perera, C and C Briggs. "Guidelines for the effective conduct of mass burials following mass disasters: post- Asian Tsunami disaster experience in retrospect." *Forensic Science Medicine and Pathology* 4 (2008), https://journals.plos.org/plosmedicine/article?id=10.1371/journal.pmed.0020185

Perera, C. "After the Tsunami: Legal Implications of Mass Burials of Unidentified Victims in Sri Lanka", PLoS Med 2 no. 6: 185. https://journals.plos.org/plosmedicine/article?id=10.1371/journal.pmed.0020185.

"Police seek more time to resume Mannar mass grave excavations" *The Leader*, 1 December 2022, https://english.theleader.lk/news/3081-police-seek-more-time-to-resume-mannar-mass-grave-excavations

Ratnawalli, Darshanie. "Matale Mass Grave: Skeletons in Closets as Well?", *Colombo Telegraph,* 21 December 2014, http://www.colombotelegraph.com/index.php/matale-mass-grave-skeletons-in-closets-as-well/.

Rosenblatt, Adam. 2020. *Digging for the Disappeared: Forensic Science after Atrocity*. Stanford University Press. https://doi.org/10.1515/9780804794886.

Ruwanpathirana, Thyagi. *Memorialisation for Transitional Justice in Sri Lanka: A Discussion Paper*, Discussion Paper (Centre for Policy Alternatives, 2016).

Senanayake, Jane Thompson. "A sociological exploration of disappearances in Sri Lanka", *Asian Human Rights Commission*, http://www.humanrights.asia/wp-content/uploads/2018/08/A-SOCIOLOGICAL-EXPLORATION-OF-DISAPPEARANCES-IN-SRI-LANKA.pdf.

Somadeva, Raj. *Human Skeletal Remains Found at the District General Hospital Premises in Matale: The Report on Forensic Archaeology*. Colombo: Journalists for Democracy in Sri Lanka, 2013. http://www.jdslanka.org/images/documents/disappearances_executions/matale_forensic_archaeology_report.pdf

*Somaratne Rajapakse others v. Hon. Attorney* General, Sri Lanka Supreme Court, 2003.

"Sri Lanka family finds mass grave in garden", *Bangkok Post,* 1 March 2014, https://www.bangkokpost.com/world/397666/sri-lanka-family-finds-mass-grave-in-garden.

"Sri Lanka again delays dig at suspected Muslim mass grave", *Bangkok Post,* 18 August 2014, https://www.bangkokpost.com/world/427430/sri-lanka-again-delays-dig-at-suspected-muslim-mass-grave

"Sri Lanka begins exhumation of wartime mass grave", *Business Standard,* 18 August 2014, https://www.business-standard.com/article/news-ani/sri-lanka-begins-exhumation-of-wartime-mass-grave-114081800921_1.html

"Sri Lanka mass grave called 'a crime site'", *Aljazeera,* 18 February 2013, https://www.aljazeera.com/news/2013/2/18/sri-lanka-mass-grave-called-a-crime-site

Sri-Jayantha, Avis Harrell. "Mass Graves in the Tamil Homeland", *Scoop World*, 26 July 2004, https://www.scoop.co.nz/stories/WO0407/S00238/mass-graves-in-the-tamil-homeland.htm

Stover, Eric, and Rachel Shigekane. 2002. "The Missing in the Aftermath of War: When Do the Needs of Victims' Families and International War Crimes Tribunals Clash?" *Revue Internationale de La Croix-Rouge/International Review of the Red Cross* 84 (848): 845. https://doi.org/10.1017/S1560775500104201.

Thomas, Kris. “Sri Lanka mass grave excavation halted”, *Asia Times,* 25 March 2019, https://asiatimes.com/2019/03/sri-lanka-halts-mass-grave-excavation-after-disparity-in-reports/.

United Nations High Commissioner for Human Rights. *Preliminary observations of the Working Group on Enforced or Involuntary Disappearances at the conclusion of its visit to Sri Lanka (9-18 November 2015).* New York : United Nations Headquarters, 2015, https://www.ohchr.org/en/statements/2015/11/preliminary-observations-working-group-enforced-or-involuntary-disappearances?LangID=E&NewsID=16771#sthash.mVg%204dEyv.dpuf

United Nations High Commissioner for Human Rights (OHCHR). *Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka”.* Annual report of the and reports of the Office of the High Commissioner and the Secretary-General. New York: United Nations Headquarters. 2019.

United Nations High Commissioner for Human Rights (OHCHR). *The Minnesota Protocol on the Investigation of Potentially Unlawful Death.* New York: UN Headquarters, 2017.

United Nations, Special Rapporteur on Extra-Judicial Killings. *Report of the Special Rapporteur, Mr. Bacre Waly Ndiaye submitted pursuant to Commission on Human Rights resolution 1997/61, Visit to Sri Lanka.* New York, NY: UN Headquarters, 1998, https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G98/109/17/PDF/G9810917.pdf?OpenElement.

United Nations, Department of Economic and Social Affairs. *Report of the Special Rapporteur of the Human Rights Council on the rights of indigenous peoples.* New York, NY: UN Headquarters, 2016.

United Nations General Assembly, Human Rights Council. *Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka: Report of the Office of the United Nations High Commissioner for Human Rights.* New York, NY: UN Headquarters, 2019.

University Teachers for Human Rights (Jaffna). *Gaps in the Krishanthy Kumarasamy Case: Disappearances & Accountability*. Special Report No: 12, 1999, https://uthr.org/SpecialReports/spreport12.htm#_Toc515700090

U.S. Department of State. *Country Reports on Human Rights Practices, Sri Lanka: 1990 Report*, https://archive.org/details/countryreportson1990unit/page/1630/mode/2up?q=sri+lanka&view=theater.

U.S. Department of State. *Country Reports on Human Rights Practices, Sri Lanka: 1994 Report,* http://dosfan.lib.uic.edu/ERC/democracy.html.

U.S. Department of State. *Country Reports on Human Rights Practices, Sri Lanka: 1999 Report*, https://1997-2001.state.gov/global/human_rights/1999_hrp_report/srilanka.html.

U.S. Department of State. *Country Report on Human Rights Practices, Sri Lanka: 2000 Report*, 26 February 2001, available at: https://www.refworld.org/docid/3ae6aaa10.html

U.S. Department of State. *Country Reports on Human Rights Practices, Sri Lanka: 2016 Report*, https://www.state.gov/reports/2016-country-reports-on-human-rights-practices/sri-lanka/

"Vavuniya High Court passes an interim stay order to stop proceedings in the Mannar Mass grave case", *Centre for Human Rights and Development*, 26 August 2020, https://srilankachrd.org/dynamic.php?news=199

Veerasingham, Ramanan. "TNA calls for international probe into Mannar Mass grave", 12 February 2014, *Journalists for Democracy Sri Lanka* , available at <http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/435-tna-calls-for-international-probe-into-mannar-mass-grave-as-toll-soars-to-59>

"Vesak Day Reflections On The Matale Mass Grave", *The Colombo Telegraph*, 24 May 2013, https://www.colombotelegraph.com/index.php/vesak-day-reflections-on-the-matale-mass-grave/

Wickramasinghe, Nira. *Sri Lanka in the Modern Age: A History*. Oxford: Oxford University Press, 2014.

Wijedasa, Namini. "Mass graves: The dead tell a tragic tale of delays and disputes", *The Sunday Times,* 2014. available at https://www.sundaytimes.lk/190106/news/mass-graves-the-dead-tell-a-tragic-tale-of-delays-and-disputes-328719.html

Wijesinghe, Kithsiri. "Sri Lanka: Ten bodies found in Tamil area mass grave", 14 June 2018, *Journalists for Democracy in Sri Lanka*, available at < http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/783-mannar-cwe-massgrave-excavations>.

இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்

1982 முதல், இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (ICES) உலகிற்கு ஆய்வுகள், கலந்துரையாடல்கள், ஆக்கபூர்வமான கலைகள் மற்றும் ஏனைய இடையீடுகள் மூலம் கருத்துக்களைப் பங்களிப்பாக வழங்கி வருவதுடன் கொள்கை நடைமுறைகளையும் அறிவித்து வருகின்றது. மீள்நல்லிணக்கம், நீதி, பால்நிலை மற்றும் மனித உரிமைகள் ஆகிய பரப்பிலே ஐஊநுளு ஒரு முக்கியமான செயற்படுனராக விளங்கி வருவதுடன், இலங்கையில் பால்நிலை சமத்துவம், பால்நிலைப் பல்வகைமை, சமய நல்லிணக்கம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான விடயங்கள் பற்றிய கொள்கை மற்றும் பொதுக் கற்பனை ஆகியவற்றினைக் கட்டமைப்பதிலும் செல்வாக்குமிக்கதாகத் திகழ்ந்து வருகின்றது. நமது பொதுவான மனித நேயத்தை அங்கீகரிக்கும், பலதரப்பட்ட அடையாளங்களை ஊக்குவிக்கும், நீதி, சமத்துவம் மற்றும் அமைதியான சகவாழ்வை மேம்படுத்தும் வகையில் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை அறிவூட்டும் மற்றும் வழிகாட்டும் கருத்துக்களை உருவாக்குவது தொடர்பான துல்லியமான அறிவுசார் மரபுகளுக்கு பங்களிப்பதே நிறுவனத்தின் குறிக்கோள் ஆகும்.

Rosa Luxemburg Stiftung (RLS)

The Rosa Luxemburg Stiftung (RLS) என்பது ஜெர்மனியை தளமாகக் கொண்ட ஸ்தாபனமாகும், இது தெற்காசியாவிலும் உலகின் பிற பகுதிகளிலும் விமர்சன சமூக பகுப்பாய்வு மற்றும் குடிமை கல்வி ஆகிய விடயங்களில் பணியாற்றுகிறது. இது ஓர் இறையாண்மை, சோசலிச, மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக சமூக ஒழுங்கை ஊக்குவிப்பதுடன் சமூகம் மற்றும் தீர்மானமெடுப்பவர்களுக்கு மாற்று அணுகுமுறைகளை முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆய்வு நிறுவனங்கள், சுயவிடுதலைக்கான குழுக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சிறந்த சமூக மற்றும் பொருளாதார நீதியை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளைக் கொண்ட மாதிரிகளை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஆதரிக்கப்படுகிறார்கள்.

# இலங்கையில் பாரிய மனிதப் புதைகுழிகள்: வரலாறு மற்றும் சட்டக் கட்டமைப்பு

**சோபீ பிஸ்பிங்**

1992 மற்றும் 2022 இற்கு இடையில், இலங்கையில் குறைந்தது 32 பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. முன்னெடுக்கப்பட்ட சில விசாரணைகள், பாதிக்கப்பட்டவர்களை முழுமையாகக் கண்டறிவதிலோ, ஒவ்வொரு புதைகுழியுடனும் தொடர்புடைய நிகழ்வுகளின் உறுதியான கதைகளை நிறுவுவதிலோ அல்லது அவற்றுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் மீது வழக்குத் தொடுப்பதிலோ வெற்றிபெறவில்லை. தளங்களைப் பற்றிய அறிவு பல ஆதாரங்களில் சிதறிக்கிடந்தமையானது. இந்த சிக்கலைப் பற்றிய விரிவான புரிதலைப் பெறுவதை கடினமாக்கியது. இந்த அறிக்கை ஒவ்வொரு தளத்திலும் கிடைக்கும் தகவல்களை ஒருங்கிணைக்கிறது. இது வரலாற்று சூழலை வழங்குவதன் மூலமும், முந்தைய கண்டுபிடிப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலமும் இலங்கையில் விசாரணைகளுக்கு உள்ள சவால்களை தெளிவுபடுத்துகிறது. பின்னர், பாரிய மனிதப் புதைகுழிகளைக் கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் நினைவுகூருதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டக் கட்டமைப்பிற்குள் இந்தத் தரவை அமைக்கிறது. இலங்கையில் மோதலுக்குப் பிந்தைய நிலைபேறான நல்லிணக்கத்திற்கு பாரிய மனிதப் புதைகுழிகள் பற்றிய துல்லியமான அறிவும் சட்டச் சூழலும் சம அளவில் முக்கியமானது. இந்த அறிக்கை கோட்பாட்டு முன்னோக்குகள் மற்றும் நிலைமாறுகால நீதியின் சர்வதேச முன்னோடிகளின் அடிப்படையில் மோதலுக்குப் பிந்தைய சமூகங்களில் பாரிய மனிதப் புதைகுழிகளை நிர்வகிப்பதற்கான சிறந்த நடைமுறைகளை மேலும் கலந்துரையாடுகிறது. இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் தலைமையிலான ஒரு பாரிய திட்டத்தின் ஒரு பகுதியாக, இது இலங்கையில் பாரிய மனிதப் புதைகுழிகள் பற்றிய சிறந்த பொதுப் புரிதலுக்கான அடித்தளத்தை அமைக்க உதவும் என்று நம்பப்படுகிறது.

**சோபீ பிஸ்பிங்** தற்போது தனது சட்டப் பட்டப்படிப்பை கனடா, மொன்ட்ரியலில் உள்ள மெக்கில் பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்து கொண்டிருப்பதுடன் முன்னர் பொதுக் கொள்கை துறையில் பணியாற்றியுள்ளார்.

ISBN: 978-624-5502-20-2

9 786245 502202

ROSA LUXEMBURG STIFTUNG SOUTH ASIA

INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES

Printed by Horizon Printing (Pvt) Ltd.